# இந்திய தேசியத்தைக் கொளுத்து

■ கவிபாஸ்கர்

நெருப்பெனும்
கொடூர நாக்கு
தூத்துக்குடி
முத்துக்குமாரைத்
தின்றது. . .

வரதட்சணைக்
கொடுமையில்
சாகும் பெண்போல,
இனம் சாகிற
கொடுமையில்
இறந்தான் இளைஞன் ....

தின்ற நெருப்பு கூட
அணைந்ததும்
கண்ணீர் வடித்தது
கண்ணீர்த் துளிகளும்
கதறி அழுதது....
பாவிகளே!
இன உரிமை
கேட்பதற்கா
இத்தனைக் கொடுமை?

மொழிப்போர்
ஈகிகளைக்
குடித்த நெருப்பு
ஈழத்தில் உயிர்களை
சுட்ட நெருப்பு...
எல்லாமே!
இந்திய தேசியம்
கொளுத்தி விட்ட நெருப்புதான்...
கொழுத்துப் போய்
குளிர்காய்கிறது
பல ஆண்டாய்...



இனி எரியப்போகும்
நெருப்பு...
எங்களை எரித்து
கொல்வதற்காக -அல்ல
இந்திய தேசியத்தை
எரிக்க...

கிழிந்து போன
இந்திய ஏகாதிபத்தியமே!
உனக்கு
இதயம் இல்லையென்பதும்
தெரியும்...
கண்ணிருந்தும்
கண்ணீர் வராதென்பதும்
புரியும் - நீ
வாய் பேசாத
ஊமையென்பதும்
நாடறியும்...
காதுகள் உண்டா
இல்லையா?
தலைப்பாகையில் மூடி
செவிடர் என்பதையும்
புரிய வைத்து விட்டீர்!

சரி!
ஐந்தறிவுகளோடு
எங்களுக்கு உறவு இல்லை
'பகுத்தறிவு' எங்களை
கூப்பிடுகிறது... வணக்கம்
நாங்கள் வருகிறோம்

தமிழ்த்தேசிய வெளிச்சம் - எங்களை
வாசலில் நின்று
வரவேற்கிறது.

புதிய
தமிழர் கண்ணோட்டம்

பிப்ரவரி 2009 7-1

**சிறைப் பயணம்** 13

**பாவெளி** 19

**மருத்துவர்களும் மதகுருமார்களும் -5**
ம.செந்தமிழன் 22

**இடதுசாரிகளின் அரசியல் இலக்கு எது?**
பெ.மணியரசன் 25

**சிங்களத்தின் 'இறுதிப்போர்'**
ம.செந்தமிழன் 29

**நிறைகுறை** 34

**பா.ம.க.வின் பத்துக் கட்டளைகள்**
தமிழ்த் தேசியன் 36



**"சத்ய"த்தின் மோசடி**
க.அருணபாரதி 38

| கட்டண விவரம் | |
|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 120/- |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. 300/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 1200/- |



**இந்தியமே தமிழினத்தின் பகை**
கி.வெங்கட்ராமன் 6



**பிரபாகரன் கூறிய ஒரு கட்சி ஆட்சிமுறையும் கருணாநிதியின் சர்வாதிகார ஓலமும்**
பெ.மணியரசன் 11

ஆசிரியர் - வெளியீட்டாளர் :
**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர் :
**கி.வெங்கட்ராமன்**

குழு உறுப்பினர்கள் :
**கவிபாஸ்கர்**
**க.அருணபாரதி**

வடிவமைப்பு
**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு
**காவிரி கணிப்பொறி,**
**தஞ்சை.**

**புதிய தமிழர் கண்ணோட்டம்,**
44-1, பஜனை கோயில் தெரு,
(முத்துரங்கம் சாலை அருகில்),
கண்ணம்மாபேட்டை,
தியாகராயர் நகர், சென்னை-17.
தொலைப்பேசி : 044-24348911.
மின்னஞ்சல் : tamizhdesiyam@gmail.com
இணையம் : http://tamizharkannotam.blogspot.com
**தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி**
இணையம் : http://tamizhdesiyam.blogspot.com

# முத்துக்குமார் முன்மொழிந்த பாதை

தன்னையே தீயாக்கித் தமிழர்க்கு ஒளிகாட்டிய முத்துக்குமாருக்கு வீரவணக்கம்.

முத்துக்குமார் மூட்டிய தீ, நம் மக்களிடையே நிலவும் சாதி, மத வேறுபாடுகளை எரித்து, தமிழர்கள் என்ற ஓரணியில் நம்மை இணைக்க வல்லது.

முத்துக்குமார் ஏற்றிய தீபம், வரலாற்றை வழிநடத்த முடியாத தமிழகத் தலைவர்களை அடையாளம் காட்டியது. எழுச்சி பெறும் இளம் தலைமுறையை இனம் காட்டியது.

முத்துக்குமார் வடித்துத் தந்துள்ள இறுதிப்பட்டயம் தமிழ்த் தேசியப் புரட்சிக்குக் கட்டியம் கூறுகிறது.

மாணவர்கள் 1965 இல் வழிநடத்திய மாபெரும் மொழிப்போரைத் தன்னலத் தலைவர்கள் திருடிக் கொண்டதை சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் மக்களை ஓட்டு மந்தைகளாக, உருமாற்றியதை விளக்குகிறது.

மனுப்போட்டு, மனுப்போட்டு, ஆளும் வர்க்கத்திடமும் அதிகாரவர்க்கத்திடமும் கருணைக்குக் கையேந்தும் கூட்டமாக வீரத்தமிழ் இனத்தை வீழ்ச்சியுறச் செய்ததை முத்துக்குமார் வேதனையோடு விமர்சிக்கிறார்.

தமிழ் ஈழ விடுதலைக்கு, தமிழக விடுதலை உணர்வே சரியான அடித்தளம் என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

இந்திய அரசு ஓர் ஏகாதிபத்திய அரசு; ஈழத்தமிழர்களை மட்டுமல்ல, தமிழகத் தமிழர்களையும் அடிமைகளாக வைத்திருப்பதே அதன் இலக்கு என்பதை சுட்டிக் காட்டுகிறார்.

இன உணர்வாளர்களே, இந்த வெளிச்சத்தில் இன்று தமிழகத்தில் எழுச்சி பெற்றுள்ள ஈழத்தமிழர் ஆதரவுக் கிளர்ச்சிகளைத் திறனாய்வு செய்யுங்கள்.

எந்தப் பெரிய அரசியல் தலைமையும் இந்த எழுச்சியை உருவாக்கவில்லை. தமிழ் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்கள் நாங்களே என்று கூறிவந்த சட்டாம்பிள்ளைகள் கங்காணிகளாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் தமிழ் இனத்தின் முதுகில் குத்துகிறார்கள்.

மாணவர்கள், வழக்கறிஞர்கள், வணிகர்கள், இன உணர்வாளர்கள், சட்டாம் பிள்ளைத்தனம் செயயாத சிறிய கட்சிகள், இயக்கங்கள் ஈழத்தமிழர்களைக் காக்கப் போராடுகிறார்கள்.

இந்தப் போராட்டம், இந்திய அரசிடம் மனுப் போடுவதாக மாறிவிடக்கூடாது.

ஈழத்தமிழர்களைக் கூட்டங்கூட்டமாக இனப்படுகொலை செய்து அழிக்கும் சிங்கள அரசுக்கு இந்திய அரசு ஆய்தம் கொடுக்கிறது. படையணிகளை அனுப்பி உதவுகிறது. கோடி கோடியாய்ப் பணம்கொட்டி கொடுக்கிறது. சிங்களப்படையாட்களுக்குத் தமிழகத்திலேயே பயிற்சி தருகிறது. மனிதநேய அடிப்படையில் உலக நாடுகள் தலையிட்டு போர் நிறுத்தம் கோருவதைத் தடுக்கிறது.

செயற்கைக்கோள் வழியாக விடுதலைப்புலிகளின் பாசறைகளையும், ஈழத்தமிழர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளையும் அச்சுப் புள்ளியாகப் படம் பிடித்து சிங்கள அரசுக்குத் தருகிறது இந்தியா. அந்த இடங்களில் தாக்குதல் நடத்தி தமிழர்களைக் கொன்று குவிக்கிறது இலங்கைப் படை.

ஈழத்தில் நடைபெறும் தமிழ் இன அழிப்புப் போரை, இந்தியா தான் இயக்குகிறது. அப்போரை இயக்குவதற்கான அதிகார பீடத்தில் சோனியாகாந்தி இருக்கிறார். பழிவாங்கும் வெறிபிடித்த பெண்மணியாக, ஈவிரக்கமின்றி இன அழிப்புப் போரை இயக்குகிறார்.

"தமிழினத் தலைவர்" என்று தமக்குத்தாமே மகுடம் தரித்துக் கொண்ட கருணாநிதி இந்திய அரசுக்குக் கங்காணி வேலை பார்க்கிறார். செயலலிதா தமிழினப் பகைவர். கருணாநிதி, தமிழ் இனத் துரோகி.

இந்த இருவரின் ஒப்புதலோடுதான் இந்திய அரசு ஈழத்தில் தமிழின அழிப்புப் போரை இயக்குகிறது.

ஈழத்தமிழர் என்று சொல்வதே குற்றம் என்கிறார் செயலலிதா. இலங்கைத் தமிழர் என்று தான் சொல்ல வேண்டும் என்கிறார்.

நாற்புறமும், வானத்தின் மேற்புறமும் பகைப்படைகள் சூழ்ந்து இடைவிடாது பீரங்கிகளும் குண்டுகளும் வெடிக்கின்றன. சிறிய நிலப்பகுதியில் நான்கு லட்சம் தமிழர்களோடு விடுதலைப்புலிகள் போராடுகிறார்கள்.

பிரபாகரனைப் பிடித்து இந்தியாவுக்கு அனுப்பு என்கிறார் சோனியா காந்தி. இந்த நேரத்தில், "பிரபாகரன் ஒரு சர்வாதிகாரி, தமிழ் இனத் தலைவர்களையும் சுட்டுக் கொன்ற கொடியவர்" என்கிறார் கருணாநிதி.

இன உணர்வாளர்களே? இப்பொழுது நாம் யாரிடம் போர் நிறுத்தம் கோருவது? சோனியா காந்தியிடமும், கருணாநிதியிடமுமா? போர் நிறுத்தம் கோரி இவர்களிடம் மனுப்போடுவதா இன்றைய எழுச்சியின் இலக்கு?

போர் நிறுத்தம் வேண்டும்; அது மனுப்போடுவதால் கிடைக்காது. இந்திய அரசைத் தமிழ்நாட்டில் முடக்கும் வகையில் போராடுவதால் மட்டுமே போர் நிறுத்தம் கிடைக்கும்.

தமிழ்நாட்டு எழுச்சி, இந்திய அரசைத் தடுக்கும் திசையில், தமிழகத் துரோகக் கும்பலைத் தனிமைப்படுத்தும் இலக்கில் செயல்புரிய வேண்டும்.

ஈழத்தில் எங்கள் இனத்தை முற்றாக அழித்துக்கொண்டு, முதியவர்களையும், கொன்றொழித்துக் கொண்டு, அவர்களின் உறுப்புகளைத் துண்டு துண்டாக்கி எரிந்து கொண்டு தமிழ்நாட்டில் நீங்கள் நிர்வாகம் செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று நாம் புறப்பட்டாக வேண்டும்.

தமிழ் இன அழிப்புப் போரை இயக்கும் இந்திய அரசின் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் செயல்பட முடியாது என்ற போராட்டத்தை நடத்தியாக வேண்டும். இது மனித நேயப் போராட்டம்; இனத் தற்காப்புப் போராட்டம்; சனநாயகப் போராட்டம்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் இன உணர்வாளர்களும், கடந்த சனவரி 31 அன்று, தஞ்சை விமானப்படைத் தளத்தை மூடக்கோரி முற்றுகைப் போராட்டம் நடத்தினர். முந்நூறு பேர் தளைப்படுத்தப்பட்டனர்.

அந்தத் தஞ்சை விமானப்படைத் தளத்திலிருந்து பலாலி விமானத்தளத்திற்குப் போர்க் கருவிகள் போகின்றன. பயிற்சியாளர்கள் போகிறார்கள்.

வரும் பிப்ரவரி 20 ஆம் நாள் தமிழகத்தில் உள்ள இந்திய அரசின் வரிவசூல் அலுவலகங்களை மூடக்கோரி மேற்கண்ட அமைப்புகள் முற்றுகைப் போராட்டம் நடத்த உள்ளன.

தமிழ்நாட்டுத் தமிழர்களிடம் வரி வசூலித்து அத்தொகையைக் கொண்டு, ஈழத்தமிழர்களை அழிக்க ஆயுதம் வாங்கி இலங்கைக்கு அனுப்புகிறது. இந்திய அரசு. அந்த ஆயுதங்கள் ஈழத்தமிழர்களை அழிக்க மட்டுமல்ல, அன்றாடம் தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்லவும் கொடுக்கப்படுகின்றன.

இன உணர்வாளர்களே, இந்திய அரசோடு நமக்கு இடைக்கால சமாதானம் வரவேண்டுமானால் பின்வரும் நிபந்தனைகளை அது நிறைவேற்ற வேண்டும்.

1. **இந்திய அரசு இலங்கைக்கு அனுப்பிய போர்க்கருவிகளையும் படையினரையும் திரும்பப் பெற வேண்டும். உடனே போர் நிறுத்தம் வேண்டும்.**
2. **தமிழ் ஈழ விடுதலைப் போரை அங்கீகரிக்க வேண்டும்.**
3. **தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டும்.**

இந்த மூன்று நிபந்தனைகளும் நிறைவேறினால் ஈழத்தமிழ் இனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

"இறுதிப்பட்டாயம்" வழங்கி, தீக்குளித்து மாண்ட ஈகி முத்துக்குமார் இலட்சியம் அப்போதுதான் நிறைவேறும்.

# இந்தியமே தமிழினத்தின் பகை

■ கி.வெங்கட்ராமன்



இனக்கொலைப் போரில் இந்தியப்படை – களமுனையில் சிங்களப் படையினருடன் நடுவில் வருபவர் இந்தியப் படை அதிகாரி

**த**மிழகத்தின் அனைத்துக் கட்சிகளும், கட்சி சாரா அமைப்புகளும் ஒட்டு மொத்தமாக வலியுறுத்திய பின்னும் சிங்கள அரசு நடத்தும் இனக்கொலை போரை இந்திய அரசு தடுத்த நிறுத்தவில்லையே என்று பலர் ஆதங்கப்படுகிறார்கள். இந்த ஆதங்கம் அரசியல் அப்பாவித்தனத்திலிருந்து உருவாகிறது.

இந்திய அரசு போர் நிறுத்தத்தை வலியுறுத்தாததில் வியப்பேதும் இல்லை. ஏனெனில் இந்தப் போரை வழி நடத்துவதே இந்திய அரசு தான்.

தில்லியில் யார் ஆண்டாலும், எப்படிப்பட்ட கூட்டணி ஆட்சி நடந்தாலும் தமிழீழம் அமைவதையோ, தமிழர்கள் சம உரிமையோடு வாழ்வதையோ இந்திய ஆட்சியாளர்கள் விரும்ப மாட்டார்கள். ஈழத்தில் மட்டுமின்றி தமிழ்நாட்டு தமிழர்கள் உரிமை பெற்று வாழ்வதையும் இந்திய ஆட்சியாளர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

தில்லியில் காங்கிரஸ் ஆண்டாலும், பா.ஜ.க. ஆண்டாலும் இந்திய அரசின் அடிப்படை நிலை இது தான். ஆனால் இவர்களிடையே காலத்திற்குக் காலம் சிற்சில அணுகுமுறை வேறுபாடுகள் இருப்பது இயல்பே. ஆயினும் தமிழர்களை இரண்டாந்தரக் குடிகளாக நடத்துவதில் இவர்களிடையே அடிப்படை வேறுபாடு ஏதுமில்லை.

இந்திய ஆளும் வர்க்க நலனும், தமிழினத்தின் உரிமை நலனும் ஒத்துப்போக முடியாதவை. தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய அரசோடு பகைமையை விரும்பியதே இல்லை. கடந்த மாவீரர் நாள் உரையில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இதனை விரித்தும் விளக்கியும் உள்ளார் (**காண்க** : *புதிய தமிழர் கண்ணோட்டம், திசம்பர் 2008*). ஆயினும் புலிகளின் இந்த நட்புக்கரத்தை வெட்டி விடுவதிலேயே இந்திய ஆட்சியாளர்கள் குறியாக இருக்கிறார்கள்.

இந்தியமும் தமிழினமும் என்றுமே இணைய முடியாத பகை முகாம்கள் என்பதை தெளிவாக்கிக் கொள்வது நல்லது.

இந்திய அரசு என்பது பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய - பார்ப்பனியப் இந்தி ஆதிக்க அரசாகும். வர்க்க வழிபட்டும் வர்ண வழிபட்டும் இன வழிபட்டும் தமிழர்களுக்கும் இந்திய அரசுக்கும் இந்த பகைமை உறுதிப்படுகிறது.

தமிழினத்திற்கும் ஆரியத் திற்கும் இடையில் உள்ள பகைமை மூவாயிரம் ஆண்டு மூத்த பகைமையாகும். சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடையிலான போராட்டம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வருகிறது. தில்லியின் ஆரிய ஆட்சி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழினத்தை அழிக்கும் தனது முயற்சியில் சிறிதளவும் ஓய்ந்ததாக வரலாறில்லை. தமிழீழம் மலர்வதை ஆரியம் என்றைக்குமே வரவேற்காது.

இலங்கைத் தீவு புவிக் கோளத்தில் அமைந்திருக்கிற இடம் காரணமாகவே நவீன காலத்தில் புவிசார் அரசியல் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இராணுவ வகையிலும் பொருளியல் வகையிலும் இலங்கைத் தீவை தமது வல்லாதிக்க வளையத்திற்குள் வைத்துக் கொள்வது உலக வல்லரசுகளின் ஆதிக்கத் தேவையாகும். தமிழீழத்தில் அமைந்துள்ள திரிகோணமலை

இராணுவ வகையிலும் பொருளியல் வகையிலும் முக்கியமான துறை முகமாகும். உலக எரி எண்ணை போக்குவரத்தில் ஏறத்தாழ 65 விழுக்காடு இந்துமாக் கடல் வழியாகவே நடக்கிறது. எனவே தான் சின்னஞ்சிறிய இத்தீவில் நடக்கிற இனச்சிக்கல் உலக வல்லரசுகளின் காய் நகர்த்தல்களில் சிக்கித் தவிர்க்கிறது. இலங்கைத் தீவை தனது செல்வாக்கு மண்டலத்தில் வைத்திருப்பதையே இந்திய ஆளும் வர்க்கம் விரும்புகிறது. உலகமயம் தீவிரம் பெற்றதற்குப் பிறகு உலகமய முதலாளிகளின் அணிவகுப்பில் சேர்ந்து விட்ட இந்திய பெரு முதலாளிகளின் சுரண்டல் தேவையையொட்டி இந்திய அரசின் இந்த புவி சார் ஆதிக்கப் போக்கு மேலும் தீவிரப்பட்டுள்ளது.

பார்ப்பனியம் என்பது தமிழனத்தின் அனைத்து வள மரபுகளையும் - அரசியல், அறிவியல், சமூகவியல், பண்பாட்டு மரபுகளையும் - மூர்க்கமாக எதிர்த்து வருவது வரலாறு நெடுகிலும் காணப்படுகிற ஒரு மெய்நிலை.

இவ்வாறான இன வழி, வர்க்க வழி வர்ண-சாதி வழி பகை சக்திகளின் அரசியல் முகமே இந்தியம் ஆகும். எனவே தான் தமிழினத்திற்கும் இந்தியத்திற்குமான பகை சமரசப்படுத்த முடியாமல் நிலைத்து நீள்கிறது.

தேர்தல் அரசியல் மயக்கத்தில், கூட்டணிக் கூச்சல்களில் இந்த அடிப்படை பகைமையை தமிழர்கள் மறந்தாலும் இந்திய அரசு மறப்பதில்லை. இந்திய அரசு தமிழையும் தமிழினத்தையும் நேரடியாக ஒடுக்குவதோடு மட்டுமின்றி, தமிழினத்தோடு யாரெல்லாம் பகை கொள்கிறார்களோ அவர்களோடு கூட்டு சேர்ந்தும் ஒடுக்குகிற காவிரி தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளை காலில் போட்டு மிதிக்கும் கர்நாடக கயவர்களோடும், முல்லைப் பெரியாற்று உரிமையை மறுக்கும் மலையாளிகளோடும், பாலாற்றை வழிமறிக்கும் தெலுங்கர் களோடும், தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் சிங்களர்களோடும் தில்லி அரசு கைக்கோத்து நிற்பது இதனை தெளிவுபடுத்தும். இந்திய அரசமைப்புச் சட்டப்படி தனக்கிருக்கும் குறைந்தபட்சக் கடமைகளைக் கூட செய்யாமல் தமிழினத்திற்கு எதிராக பகைக் கக்குகிறது இந்திய அரசு. தமிழின விரோத உள்நாட்டுக் கொள்கையின் நீட்சியாகவே இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையும் அமைந்திருக்கிறது. தமிழீழச் சிக்கலில் அது விகாரமாக வெளிப்படுகிறது.

ஈழத்தமிழர் குறித்த இந்த அடிப்படை நிலைப்பாட்டில் இந்திய அரசிற்கு எப்போதுமே மாறுதல் இல்லை. அணுகுமுறையில் மட்டுமே அவ்வப்போது சிற்சில மாறுதல்கள் நிகழ்கின்றன. அணுகுமுறையில் ஏற்படும் மேலோட்டமான மாறுதல்களை அடிப்படைக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டு விட்டதாக பிறழ நினைத்தால் நாம் ஏமாற்றப்படுவோம். அது மட்டுமின்றி தற்போது நாம் வகுக்க வேண்டிய வியூகத்திலும் தவறுகள் நேர்ந்துவிடும்.

ஈழப்பிரச்சினையில் இந்திய அரசின் கொள்கையை ராஜிவ் காந்திக்கு முன், ராஜிவ் காந்திக்கு பின் என்று பிரித்துச் சொல்வதோ, இந்திரா காந்திக்கு முன், இந்திரா காந்திக்கு பின் என்று பிரித்துப் பார்ப்பதோ அடிப்படையில் பொருளற்றது.

இலங்கைத் தீவில் நீண்டகாலமாக நிலவும் தமிழர் - சிங்களர் சிக்கலை இந்திய ஆட்சியாளர்கள் தமது புவிசார் ஆதிக்க மேலாண்மைக்கு உட்பட்டே அணுகி வந்திருக்கிறார்கள்.

இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் அடைவதற்கு முன்பே 1945 இல் பிரிட்டிஷ் இலங்கை சென்ற ஜவஹர்லால் நேருவும் காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாரமய்யா அவர்களும் இந்த புவிசார் ஆதிக்கக் கொள்கையை தெளிவுபடக் கூறினார்கள் “இந்தியக் கூட்டாட்சியில் சுயஆதிக்கம் உள்ள பகுதியாக இலங்கை விளங்கலாம். ஒருவேளை தனித்திருக்க விரும்பினால் இந்தியாவின் விரோதிகளுடன் இலங்கை அரசு உறவு கொள்வதை நாங்கள் ஏற்க முடியாது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பொதுவான பாதுகாப்புக் கொள்கையே இருக்க வேண்டும்” என்றனர்.

சுதந்திரத்திற்கு பிறகு 1962 இல் சீன-இந்தியப் போர் மூண்டபோது இலங்கை அரசு அப்பிரச்சினையில் நடுநிலை வகித்தது. இது இந்திய ஆட்சியாளர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. சிங்களர்களின் நட்பைப் பெற்று தமது செல்வாக்கு மண்டலத்திற்குள் இலங்கையை வைத்துக் கொள்ள இந்திய அரசு தமிழர்களின் நலனை பலியிட முன் வந்தது. 1964 இல் ஏற்பட்ட சாஸ்திரி – சிறிமா ஒப்பந்தம் அதைத் தான் செய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் மலையகத் தமிழர்கள் 9.75 லட்சம் பெரில் 3 லட்சம் பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமை பெற்றனர். 5.2 லட்சம் பேர் தமிழ்நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். 1.5 லட்சம் தமிழர்களின் வாழ்வுரிமை அந்தரத்தில் விடப்பட்டது. இதன் பிரதிபலனாக பாகிஸ்தான்-இந்தியா மோதலில் இலங்கையின் நட்பை இந்தியா பெற்றுக் கொண்டது.

சிங்கள ஆட்சி மிகப்பெரிய உள்நாட்டுக் குழப்பத்தில் சிக்கிக் கொண்ட பொழுது ஜனதா விமுக்தி பெரமுனா கிளர்ச்சியை ஒடுக்க 1971 இல் இந்தியப் படையை அனுப்பி இலங்கை அரசுக்கு இந்திரா காந்தி துணை நின்றார். அதற்குப் பிறகும் வங்காள தேச பிரச்சினை எழுந்த போது உலக அரங்கில் இந்தியாவிற்கு துணை செய்ய இலங்கை அரசு முன் வரவில்லை. எனவே இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்திற்குள் இலங்கையை வைத்துக் கொள்ள அடுத்த முயற்சியில் இந்திரா காந்தி இறங்கினார். தமிழர்களின் தாயகப்

பகுதியான கச்சத் தீவை 1974 இல் சிங்கள அரசிற்கு வழங்கினார்.

இந்திராகாந்தியை வீழ்த்தி 1977 இல் சனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தது. முதன்முறையாக தில்லியில் காங்கிரஸ் அல்லாத ஆட்சி அமைந்தபோதும் இந்திய அரசின் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் ஏதுமில்லை. 1978 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர நாள் விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் மொராஜி தேசாய் தமிழீழம் என்ற கோரிக்கையை இலங்கைத் தமிழர்கள் கைவிட வேண்டும் என்று பேசினார் (1977 இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் 'சுதந்திர சோஷலிச மதசார்பற்ற தமிழீழம்' என்றக் கொள்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றி பெற்றிருந்தது என்பது நினைவு கொள்ளத்தக்கது).

ஆயினும் இதற்கு பிறகும் 1981 இல் அமெரிக்கச் சார்பு 'ஆசியான்' கூட்டமைப்பில் இலங்கை இணைந்தது. திரிகோணமலையில் அமெரிக்கப் படைத்தளம் அமைந்தால் தவறல்ல என்று அறிவித்தது.

இதன்பிறகு இந்திய அரசின் அணுகுமுறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஆயினும் இலங்கையை தமது செல்வாக்கு மண்டலத்திற்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற புவிசார் மேலாண்மைக் கொள்கையோ தமிழீழம் அமைந்தவிடக் கூடாது என்ற நோக்கமோ மாறிவிடவில்லை. தமிழீழ போராளிக் குழுக்களுக்கு ஆய்தப் பயிற்சியளித்து அவர்களது போராட்டத்திற்கு துணை நிற்பது போல் பாசாங்கு செய்து அந்த நிர்ப்பந்தத்தில் சிங்கள அரசோடு பேரம் பேசி தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் இலங்கையை நிறுத்திக் கொள்வது என்பதே இந்திராவின் இந்த அணுகுமுறை.

இதுபற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாக உணர்ந்தே இருந்தனர். இதுபற்றி அவர்கள் கூறியது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய செய்தியாகும்.

*"1977 இல் பதவிக்கு வந்த ஜெ.ஆர்.ஜெயவர்த்தனே ஆட்சி முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழர்கள் மீது கொடும் கொள்கையை கடைபிடித்தது. அதே நேரம் வெளிப்படையாக மேற்ககத்திய முதலாளிய அரசுகளோடு அணி சேர்வதை தமது வெளியுறவுக் கொள்கையாக கடைபிடித்தது. இந்தியப் பெருங்கடல் மண்டலத்தில் இந்தியாவின் பிடியில் சிக்காமல் நழுவி மேற்கத்திய முதலாளிய ஆட்சிகளின் கீழ்படிந்த மாணவனாக இருப்பதன் மூலம் ஒருபுறம் பொருளியல் வகையில் வளர்ச்சியடையலாம். மறுபுறம் தமிழீழத்தின் மீதான இனக் கொலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தலாம் என்று ஜெயவர்த்தனே கணக்குப் போட்டார். இது இந்திய மேலாண்மைக்கும் இந்தியாவின் புவிசார் அரசியல் தலைமைக்கும் அச்சுறுத்தாலாக அமைவதை இந்திய அரசு உணர்ந்தது. 1983 ஜூலை இனக்கொலையையொட்டி ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா மேற்கத்திய உதவியை நாடியதானது இந்தியாவை துணுக்குற வைத்தது. இந்த நேரத்தில் தான் இலங்கையின் இனச்சிக்கலில் இந்தியா தலையிடத் தொடங்கியது.*

*வெளிப்படையாக பார்த்தால் அரசத் தந்திர வழியில் இந்தியா தலையிட்டது மட்டுமே தெரியும். ஆனால் அதற்குப் பின்னால் திரைமறைவில் வெளியில் அறிவிக்காமல் இராணுவ முனை தலையீட்டில் இந்தியா இறங்கியது. அதாவது போராளிக் குழுக்களுக்கு ஆய்தமும், பயிற்சியும் அளித்துக் கொண்டே கொழும்பு அரசோடு அமைதிக்கான பேச்சுவார்த்தையும் நடத்தியது.*

*இந்தியாவின் இந்தத் தலையீடு ஈழத்தமிழர்களின் நலத்திற்கானது அல்ல. மாறாக சிறிலங்கா அரசுக்கு இராவை வகையில் நிர்ப்பந்தம் கொடுத்து அரச தந்திர வழியில் தமக்கு அடிபணிய வைத்து இப்பிரதேசத்தில் தமது விரிவாக்க நடவடிக்கைகளை தொடர்வதே இந்திய அரசின் நோக்கமாகும். இவ்வாறு இனமுரண்பாட்டை பயன்படுத்தி தமது பிரதேச மேலாண்மையை நிலைப்படுத்திக் கொள்வதே இந்திய அரசின் உத்தியாக இருந்தது.*

*மறைந்த பிரதமர் இந்திரா காந்தி தமிழ்ப் போராளிகளுக்கு படைப்பயிற்சி அளிக்கும் பொறுப்பை 'ரா' விடம் ஒப்படைத்தார்".*

(India and Eelam Tamils Crisis, தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு வெளியீடு, 1988, பக்கம் 4,5)

இப்போது முதலமைச்சர் கருணாநிதி உச்சிமோந்து பாராட்டுகின்ற சந்திரகாசன் அன்றைக்கு ஈழத்தமிழர்களிடையே குழப்பங்களை ஏற்படுத்த இந்திய அரசால் எவ்வாறு பயன்படுத்தப்பட்டார் என்பதையும், சிறீசபாரத்தினத்தின் 'டெலோ' அமைப்பை தமது கையடக்க அடியாளாக எவ்வாறு 'ரா' உருவாக்கியது என்பதையும் விடுதலைப்புலிகளின் இவ்வெளியீடு விரிவாக எடுத்துரைத்தது.

இந்திரா அரசின் இந்த உள்நோக்கத்தை தளபதி அரிகிரத் சிங்கும் உறுதி செய்கிறார். Intervention in Srilanka என்ற தனது நூலில் 'அரசியல் வழியிலும் அமைப்பு வகையிலும் ஒன்றுமே இல்லாது இருந்த டெலோவை ஒரு போராளிக் குழுவாக ஆயதபாணி ஆக்கியது இந்தியாவின் ரா உளவு அமைப்பு. இவ்வாறு ஒரு கைப்பாவை குழுவை ஏற்படுத்தியதன் மூலம் தனது உள்நோக்கத்திற்கு ஏற்ற தலையீட்டுக்கு அடித்தளத்தை அமைத்துக் கொண்டது.' என்கிறார் அரிகிரத் சிங். இந்திய அமைதிப்படையின் முக்கிய தளபதியாக பணியாற்றியவர் அரிகிரத் சிங் என்பது நினைவு கொள்ளத்தக்கது.

இந்திராவிற்கு பின்னால் ஆட்சிக்கு வந்த ராஜிவ் காந்தி ஈழத்தமிழர்களுக்கு செய்த

இரண்டகங்களையும் நிகழ்த்திய இனக்கொலைகளையும் உலகம் அறியும். இந்திரா காந்தியின் உத்திதான் வேறே தவிர உள் நோக்கம் ஒன்று தான் என்பதை விடுதலைப்புலிகள் தெளிவாக உணர்ந்திருந்ததால் தற்சார்பான விடுதலைப்படையாக அவ்வமைப்பு வளர்ந்து உயர்ந்தது. எல்லாக் குழுக்களும் இந்திய அரசின் நிழலில் வளர்ந்த பொழுது, இந்தியாவின் உதவியை வரம்புக்குட்பட்டு பெற்றுக் கொண்டாலும் தமிழீழ மக்களை சார்ந்த உண்மையான விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் வளர்ந்தது இந்திய அரசின் தமிழின விரோதக் கொள்கைக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது.

விடுதலைப்புலிகள் தொடக்கத் திலிருந்தே "இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களையும் அதன் பிரதேச தலைமையையும் நாங்கள் புரிந்து நடக்கிறோம்" என்று மீண்டும் மீண்டும் அறிவித்தாலும் தமிழீழ விடுதலை என்பது இந்தியத்தின் இனப்பகைக் கொள்கைக்கு எதிராக அமைவதால் இந்திய அரசால் அதனை ஏற்க முடியவில்லை. மக்கள் ஆதரவோடு விடுதலைப் பேரியக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் வளர்ந்துவிட்டதை அதனால் சகித்துக் கொள்ளவும் முடியவில்லை. வெளிப்படையான பகை மோதலில் இறங்க வேண்டிய நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டது. அதற்கு ஏற்ற குணநலன் உள்ளவராக ராஜிவ் காந்தியும் அமைந்தார். ஈழத்தமிழர்களுக்கு எதிராக எல்லா அட்டூழியங்களையும் அரங்கேற்றினார்.

அவரது மனைவி சோனியா காந்தி, இன்னும் பெரிய பழிவாங்கும் வெறியோடு தமிழின பகைப் போரை வழி நடத்தி வருகிறார். பாலஸ்தீனர் களுக்கு எதிராக இன அழிப்புப் போர் புரியும் இசுரேலுக்கு அமெரிக்க வல்லரசு அனைத்து வகையிலும் துணையிருப்பது போல ஈழத்தமிழர் களுக்கு எதிரான இனஅழிப்புப் போரில் சிங்கள அரசிற்கு அனைத்து வகை அரண்களையும் சோனியாவின் இந்திய வல்லரசு வழங்கி வருகின்றது. போர்க் கருவிகளையும், போர்ப் பயிற்சியையும் சிங்களப் படைக்கு வழங்கியதோடு நில்லாமல், படை அதிகாரிகளையும் கள முனைக்கு அனுப்பி இந்திய அரசு இணைந்து நடத்துகிறது.

எனவே ஈழத்தமிழர்கள் ஆனாலும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஆனாலும் தமிழ்த் தேசிய இனத்தின் பகை சக்தியாக இந்திய அரசு இருப்பதும், அது தமிழினத்தின் அடிப்படை பகை சக்தி என்பதும் மீண்டும் மீண்டும் தெளிவாகி வருகிறது.

இந்தியத்தின் இந்த அடிப்படை பகைமையை கொண்டு செலுத்தும் முதன்மையான கட்சியாக காங்கிரஸ் கட்சியே விளங்குகிறது. அதுவும் சோனியா காந்தியின் தனிப்பட்ட பழிவாங்கும் உணர்ச்சியும் இணைந்து கொண்ட பிறகு இந்த இன அழிப்பு நடவடிக்கை தலைவிரி கோலமாக தீவிரம் பெற்றுள்ளது. எஞ்சியிருக்கிற தனது ஆட்சி காலத்திற்குள்ளாகவே ஈழத்தமிழர்களை கருவறுக்கும் வேகத்தோடு காங்கிரஸ் ஆட்சி களமிறங்கியுள்ளது.

இந்தியம் என்பது தமிழினத்தின் நீங்காத பகை என்ற அரசியல் தெளிவும், இப்பகை நஞ்சை கக்கும் முதன்மையான சக்தி சோனியாவின் காங்கிரஸ் கட்சி என்ற விழிப்புணர்வும் தமிழர்களுக்குத் தேவை. அதற்கேற்ற அரசியல் உத்தி வகுப்பது தமிழினத்தின் உடனடித் தேவை ஆகும். ■

## முத்துக்குமார் வீரவணக்க ஊர்வலம்

**தஞ்சாவூர்**

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க, தமிழர்களை எழுச்சி கொள்ளச் செய்வதற்காக தன் உடலுக்குத் தீ மூட்டி மாண்ட முத்துக்குமாருக்கு வீரவணக்கம் செலுத்தி 29.01.09 அன்று மாலை தஞ்சையில் ஊர்வலம் நடைபெற்றது. தொடர்வண்டி நிலையத்தில் இருந்து அனைத்துக்கட்சி மற்றும் இன உணர்வாளர்கள் சார்பில் புறப்பட்ட ஊர்வலம் பழைய பேருந்து நிலையம் அடைந்தது. வீரவணக்க ஊர்வலத்தில் இந்திய இலங்கை அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திற்கு தோழர் பெ. மணியரசன் தலைமையேற்றார். திருவாளர்கள் துரை. பாலகிருட்டிணன் (ம.தி.மு.க.), சி. சந்திரகுமார் (சி.பி.ஐ.), அய்யனாபுரம் சி. முருகேசன் (தமிழர் தேசிய இயக்கம்), க. காளியப்பன் (ம.க.இ.க.) வழக்கறிஞர் சங்கச் செயலாளர் நல்லதுரை, இளமதி (ஆதித் தமிழர் பேரவை) உள்ளிட்ட பலர் இரங்கல் உரையாற்றினர்.

**பட்டுக்கோட்டை**

30.01.09 அன்று காலை பட்டுக்கோட்டை தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் எழுச்சிமிகு இரங்கல் ஊர்வலம் நடைபெற்றது.

திரு. சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இரங்கல் ஊர்வலம் அஞ்சா நெஞ்சன் அழகிரி சிலையில் தொடங்கி பேருந்து நிலையம் பெரியார் சிலையருகில் முடிவடைந்தது. தோழர்கள் நா.வைகறை, வெ. இராசேந்திரன் (த.தே.பொ.க.)




அரங்க. குணசேகரன் (தமிழக மனித உரிமைக் கழகம்) திருநாவுக்கரசு, சி. பக்கிரிசாமி (சி.பி.ஐ) கு. பாரி (பெ.தி.க.) உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ஒரத்தநாடு**

30.01.09 மாலை ஒரத்தநாடு த.தே.பொ.க. முயற்சியில் வீரவணக்க ஊர்வலம் நடைபெற்றது. வட்டாட்சியர் அலுவலகம் அருகில் தொடங்கி கடைவீதி வழியே சென்று ஊர்வலம் பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது.

தோழர். க. அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் தோழர்கள் நா.வைகறை, வெ.இராசேந்திரன், வீ. கலியபெருமாள் (த.தே.பொ.க.) கல்யாணசுந்தரம் (ஒன்றியச் செயலாளர் சி.பி.ஐ) உள்ளிட்ட பலர் இரங்கல் உரையாற்றினர்.

# தமிழர் திருநாள் பெருவிழா



தஞ்சை கலைஞர் நகர்

ஒவ்வொரு ஆண்டும் த.தே.பொ.க., த.இ.மு. அமைப்புகள் சார்பில் தமிழர் திருநாள் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப் படவேண்டும் என நாம் வலியுறுத்தி வந்த நிலையில், தமிழக அரசு இந்த ஆண்டு முதல் தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு என அறிவித்துள்ளது மகிழ்ச்சிக்குரியது.

தமிழர் திருநாள் பெருவிழாவையொட்டி பல பகுதிகளில் கட்டுரை, திருக்குறள் ஒப்பித்தல், ஓவியம், பேச்சுப் போட்டி, ஓட்டப்பந்தயம், பானை உடைத்தல், இசை நாற்காலி என பல்வேறு வகைப் போட்டிகளும் நடைபெற்றுள்ளது.

**பூதலூர் ஒன்றியம்**

தஞ்சை மாவட்டம் பூதலூர் ஒன்றியம் செங்கிப்பட்டியில் 15-ம் ஆண்டு தமிழர் திருநாள் பெருவிழா 14.01.2009 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

14 ஆண்டுகளாக இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த தோழர். பெ. மணியரசன் கோவை சிறையில் இருந்த நிலையில் இவ்விழா நடைபெற்றது.

கோவை சிறையில் இருந்த தோழர்கள் பெ. மணியரசன், கொளத்தூர் மணி, சீமான் ஆகியோரின் விடுதலை, ஈழத்தமிழர் சிக்கல், தமிழர்கள் சிக்கல் மற்றும் உரிமை மீட்பு தொடர்பான கருத்துகள் பேசப்பட்டது.

தோழர் குழ. பால்ராசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தோழர்கள் நா. வைகறை, பழ. இராசேந்திரன், க. காமராசு, ரெ. கருணாநிதி, சோ. அரசன் (விடுதலைச் சிறுத்தைகள்) இரா. நந்தக்குமார் (ம.தி.மு.க.) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கவிஞர் இராசாரகுநாதன் தலைமையில் புலவர் கோ. நாகேந்திரன், கவிஞர் கவித்துவன், கவிஞர் கவிபாஸ்கர், குழ.பா. ஸ்டாலின் ஆகியோர் கவிதை படித்தனர்.

நிறைவாக பேரா. த. செயராமன், தோழர். கி. வெங்கட்ராமன் சிறப்புரையாற்றினர்.

தமிழக இளைஞர் முன்னணி மற்றும் தமிழக மண்பாடி லாரி சுமை ஏற்றுதல், இறக்குதல் தொழிலாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு தோழர் ராஜேஷ் வரவேற்றார். தோழர் மாணிக்கராசு நன்றி கூறினார்.

**நந்தவனப்பட்டி**

16.01.2009 அன்று நந்தவனப்பட்டியில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசளிப்பு விழா த.இ.மு. சார்பில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தோழர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர் ச.பிந்துசாரன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். தோழர்கள் பழ.இராசேந்திரன், ரெ. கருணாநிதி, ஆ. தேவதாஸ் உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

**பாலையப்பட்டி**

த.இ.மு. சார்பில் 15.01.2009 அன்று விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. தோழர் ஆ. தேவதாசு (ஒன்றியச் செயலாளர் த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர் கி. வெங்கட்ராமன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

தோழர்கள் குழ. பால்ராசு, ரெ. கருணாநிதி, க. காமராசு உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக கண்பார்வையற்ற குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

**காமாட்சிபுரம்**

17.01.09 அன்று த.இ.மு. சார்பில் தமிழர் திருநாள் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் செல்வராசு (கிளைச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர்கள் கோ. மாரிமுத்து (தலைமைச் செயற்குழு, த.தே.பொ.க.) பழ. இராசேந்திரன், குழ. பால்ராசு, ரெ. கருணாநிதி) க. காமராசு உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியின் நிறைவில் ஈரோடு பொதுக்கூட்ட நிகழ்ச்சி திரையிடப்பட்டது.

**தஞ்சை நகரம் - கலைஞர் நகர்**

த.இ.மு. சார்பில் 15.01.09 அன்று தமிழர் திருநாள் பெருவிழா விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு தோழர் அ. தனபால் தலைமையேற்றார்.

போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி எழுத்தாளர் பாமயன் சிறப்புரையாற்றினார்.

தோழர்கள் பழ. இராசேந்திரன், நா.வைகறை, இராசு. முனியாண்டி, மா. சீனிவாசன் (கிளைச்செயலாளர், த.தே.பொ.க.) உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருச்சி லெனின்-காந்தி குழுவினரின் எழுச்சிமிகு கலை நிகழ்ச்சியும், மாணவ-மாணவியரின் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தன.

# பிரபாகரன் கூறிய ஒரு கட்சி ஆட்சிமுறையும்
# கருணாநிதியின் சர்வாதிகார ஓலமும்

■ பெ.மணியரசன்



தி.மு.க. தலைமைச் செயற்குழு தீர்மானம், அதை ஒட்டி தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறியவை அனைத்தும் அக்கட்சி, முக்காட்டை நீக்கி முழுமையாக விடுதலைப்புலிகளுக்கு எதிராக வீதிக்கு வருகிறது என்பதைக் காட்டுகிறது.

பிரபாகரன் சர்வாதிகாரி என்றும் மற்ற தலைவர்களை அழித்துவிட்டார் என்றும் விடுதலைப்புலிகளை ஆதரிக்கமுடியாது என்றும் இந்திய அரசுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டவே இந்த செயற்குழு கூட்டப்பட்டது என்று தெரிகிறது.

ஈழத்தமிழர்களைக் கூட்டம் கூட்டமாகச் சிங்களப்படை கொன்று குவிக்கும் இக்காலத்தில், அந்த இனப்படுகொலையைத் தடுக்க விடுதலைப்புலிகள் வீரப்போர் நடத்திக்கொண்டிருக்கும் மிக நெருக்கடியான நேரத்தில் கருணாநிதி விடுதலைப் புலிகளை இழிவுப்படுத்துகிறார்.

**இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை என்ற ஓர் அமைப்பை உருவாக்கப் போகிறார்களாம். அதில் காங்கிரஸ். மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி ஆகியவை வேண்டுமானால் சேரலாம். அதிலும் செயலலிதா கூட்டணியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி கருணாநிதி தலைமையில் சேரும் என்று எதிர்பார்க்க முடியாது. மிச்சம் காங்கிரஸ்தான். ஈழச்சிக்கலில் காங்கிரசோடு கொள்கை உடன்பாடு கொண்டுள்ளார் கருணாநிதி என்பது உறுதியாகிவிட்டது. தி.மு.க. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில், சிங்கள அரசைச் சாடியதை விட பிரபாகரனைச் சாடியதே அதிகம்.**

பிரபாகரன் எப்பொழுதோ இந்து ஏட்டுக்குக் கொடுத்த செவ்வியில் தமிழ் ஈழம் கிடைத்தால் சர்வாதிகார ஆட்சி நடத்துவோம் என்று கூறியதாகக் கருணாநிதி சொல்கிறார். அது உண்மையல்ல. யூகாஸ்லாவியாவில் இருப்பது போன்ற ஒரு கட்சி ஆட்சிமுறை இருக்கும் என்றுதான் பிரபாகரன் கூறியிருந்தார். யூகாஸ்லாவியாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அப்போது நடந்தது.

அன்று, சோவியத் ஒன்றியத்தில் ஒரு கட்சி ஆட்சிதான் நடந்தது. இன்று சீனா, வியட்நாம், கியுபா, வடகொரியா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளில் ஒரு கட்சி ஆட்சிமுறை தான் நடக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் கியூபா விழா மிக எழுச்சியதாக நடந்த பொழுது பிடல் காஸ்ட்ரோவை வாழ்த்தி கருணாநிதி கடிதம் எழுதினார். கியூபாவில் ஒரு கட்சி ஆட்சி நடத்தும் பிடல் காஸ்ட்ரோ அப்பொழுது கருணாநிதிக்கு சர்வாதிகாரியாக தெரியவில்லையா? நெல்லையில் நடந்த தி.மு.க. இளைஞரணி மாநாட்டிற்கு இளைஞர்களை அழைக்க மாவோ, சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ ஆகியோர் வாழ்க்கை வரலாறுகளை புகழ்ந்து எழுதிய கருணாநிதிக்கு, அவர்கள் எல்லாம் ஒரு கட்சி ஆட்சி முறையை செயல்படுத்தியவர்கள் என அப்பொழுது தெரியாதா?

அவ்வாறான ஒரு கட்சி ஆட்சி முறையை ஒருவர் ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் அவ்வாறான ஒரு கட்சி ஆட்சி அரசு உலகில் ஏற்கப்பட்டு, அந்நாடுகள் பல கட்சி நாடுகளுடன் நல்லுறவு கொண்டுள்ளன. அரசு அமைப்பு முறைகளில் ஒரு கட்சி ஆட்சி முறையும் ஒன்று.

யூகாஸ்லாவியத் தலைவர் டிட்டோ ஒரு கம்யூனிஸ்டாக இருந்தாலும் சோவியத் முகாமில் சேராமல் அணிசேரா நாடாக யூகாஸ்லாவியாவை வழி நடத்தினார். அது போல் தான் நிறுவ வரும்பும் தமிழீழம் சோசலிசப் பாதையைப் பின்பற்றினாலும் அது தமது மண்ணிற்கு ஏற்ற வடிவம் பெறும் என்றும், அணி சேரா நாடாக தமிழீழம் திகழும் என்றும் அப்பேட்டியில் பிரபாகரன் கூறியிருக்கிறார்.

இதனைக் கருணாநிதி கொச்சைப்படுத்தி, பிரபாகரன் அதிகார வெறியர் என்று காட்டவும், சர்வாதிகாரி என்று காட்டவும் திரிபு வேலைகளைச் செய்கிறார்.

ஒரு கட்சி ஆட்சி என்பதற்கு மாறாக ஒரு குடும்ப ஆட்சி நடக்கும் என்று பிரபாகரன் கூறியிருந்தால் கருணாநிதி மனநிறைவடைந்திருப்பாரோ என்னவோ?

யூகாஸ்லாவியா மாதிரி ஒரு கட்சி ஆட்சி என்று பிரபாகரன் சொல்லி 24 ஆண்டுகள் ஆகின்றன. அதன்பிறகு விடுதலைப்புலிகள் அமைப்பில், பல கருத்தியல் மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.

இந்த வளர்ச்சி மாற்றங்கள் காரணமாக, ஏற்கெனவே, அணியம் செய்யப்பட்டிருந்த அவர்கள் கட்சிக் கொள்கைத் திட்டத்தை வெளியிடாமல் நிறுத்திவிட்டார்கள்.

நிகரமை (சோசலிச)க் கண்ணோட்டத்துடன் செயல்படுகிற அமைப்புதான் விடுதலைப்புலிகள் அமைப்பு. இப்பொழுது விடுதலைப்புலிகளை டெலோ, பிளாட்,ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF அமிர்தலிங்கம்) உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்புகள் ஆதரிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்த்தேசியக் கூட்டணியில், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22பேர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மேற்கண்ட தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்தாம்.

தமிழ் ஈழத்தில் 98 விழுக்காட்டுத் தமிழர்களாலும் தமிழ்நாட்டில் 80 விழுக்காட்டுத் தமிழர்களாலும் தமிழீழத் தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவர் பிரபாகரன். பல்வேறு கருத்துக் கணிப்புகளில் இது நிறுவப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட பிரபாகரனோடு கருங்காலி கருணாவை சமப்படுத்திக் கருத்துக் கூறியிருக்கும் ஒன்றே, கருணாநிதியின் பகைமை உணர்ச்சியை அம்பலப்படுத்துகிறது.

மதுரையில் தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் தா. கிருட்டிணனை, அதே தி.மு.க.வைச் சேர்ந்த இன்னொரு அதிகாரக்குழுவினர் கொலை செய்தபோது, கருணாநிதி சட்டப்பேரவையில் கூறியதை இங்கு நினைத்துப்பார்க்க வேண்டும்.

"அண்ணா காலத்திலேயே தி.மு.க.வுக்குள் கோஷ்டி சண்டையும் கொலையும் நடந்ததுண்டு. தூத்துக்குடியில் தி.மு.க.பிரமுகர் கே.வி.கே. சாமியை- தி.மு.க.வில் உள்ள இன்னொரு கோஷ்டிதான் கொலை செய்தது" என்றார்.

## மணமகன் தேவை

அகவை ***28***,
பி.இ. பட்டதாரி,
மென்பொருள் பொறியாளர் பெண்ணுக்கு
முற்போக்குச் சிந்தனை,
ஒத்த கல்வி இவைகள் உடைய,
பணியிலுள்ள அல்லது தொழில் புரியும்
**மணமகன் தேவை.**

சாதி, மதம் தடையில்லை.

**குறிப்பு** : பெண் மணவிலக்கு பெற்றவர், குழந்தை இல்லை.

தொடர்பு
**மு.பிச்சைமுத்து,**
எண்: *3*, இராமானுசர் தெரு,
(*153*-MIG), இணைவு -*1*, மறைமலை நகர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - *603 209*.

தா.கிருட்டிணன் கொலையை இவ்வாறு ஏன் இயல்பான ஒன்றாகக் காட்டினார்? அக்கொலையில் அவருடைய மகன் மு.க.அழகிரி குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

அதே மதுரையில் தினகரன் ஏட்டில் வந்த ஒரு கருத்துக் கணிப்பில் ஆத்திரமடைந்த அழகிரி கோஷ்டியினர் அந்த இதழின் அலுவலகத்தைச் சூறையாடினர். அவர்கள் மூட்டிய நெருப்பில் மூன்று ஊழியர்கள் மாண்டனர்.

இப்படிப்பட்ட குடும்பத் தலைவரான கருணாநிதி, ஈழ விடுதலைப்போரில் நடைபெற்ற "சகோதர யுத்தத்தை"ப்பற்றி திரும்பத் திரும்ப பேசுகிறார்.

இவர் எப்படி வலுவாக- இந்திய அரசிடம் போர் நிறுத்தம் கோருவார்? இவர் எப்படி ஈழத் தமிழர்களின் துயர்துடைப்பார்?

இவருடைய ஒப்புதலோடுதான் இந்திய அரசு சிங்களப்படைக்கு ஆயுதம் கொடுக்கிறது; படையாட்களை அனுப்புகிறது என்பது இதன்வழி தெரியவருகிறது.

"உள்ளூர்த் துப்பு இல்லாமல் மாடு திருட்டுப்போகாது" என்பது பழமொழி. கருணாநிதி, செயலலிதா ஒப்புதல் இல்லாமல் இந்திய அரசு ஈழப்போரை நடத்தவில்லை என்பது உறுதியாகிறது.

■



# சிறைப் பயணம்




ஈரோட்டுப் பொதுக்கூட்டம் இவ்வளவு அமளிதுமளிப்படும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. 14.12.2008 அன்று ஈரோடு கருங்கல் பாளையத்தில் த.தே.பொ.க ஏற்பாடு செய்த அக்கூட்டம் வரலாற்றுப் பதிவைப் பெற்றுவிட்டது.

இந்தியாவின் இறையாண்மையே ஒரு பக்கம் வெடித்து கீறல் விட்டுப்போனதுபோல்,காங்கிரசார் அலறினார்கள். அவர்களோடு கைகோத்துக்கொண்டு அரியணையில் சல்லாபிக்கும் கருணாநிதி, கைகேயிக்குக் கட்டுப்பட்ட தசரதன்போல் சீமான்,கொளத்தூர் மணி, பெ. மணியரசன் ஆகியோரைக் கைது செய்ய ஆணையிட்டார். 19.12.2008 அன்று காவல்துறையினர் எங்களைத் தளைப்படுத்தினர்.

கோவை நடுவண் சிறை வ.உ.சி. தொகுதியில் வ.உ.சி 09.07.1908முதல் 01.12.1910 வரை சிறையிருந்த அறை நினைவுச் சின்னமாக மாற்றப்பட்டு பூட்டி வைக்கப்பட்டுள்ளது. அத்தொகுதியின் முதல் அறை அது. அறைக்குள் சுவரில் வ.உ.சி. படம் மாட்டப்பட்டுள்ளது.

அடுத்த அறையில் நானும் நான்காவது அறையில் தோழர்கள் கொளத்தூர் மணியும், சீமானும் இருந்தோம்.

19.12.2008 பகலில் தளைப்படுத்தப்பட்ட சீமானும்; கொளத்தூர் மணியும் அன்று இரவே கோவைச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர். நான் 19.12.2008 மாலை 6.45 மணிக்கு சென்னையில் கட்சி அலுவலகத்தில் இருந்தபோது தளைப்படுத்தப்பட்டேன்.

எனது கைதை எதிர்பார்த்து அங்கு வந்திருந்த வழக்குரைஞர்கள் சேசுபாலன் ராஜா, இளந்திரையன், கவுதம் செபா, அகரன் மற்றும் த.தே.பொ.க. தோழர்கள் கி.வெங்கட்ராமன், பாலா, கவிபாஸ்கர், வெற்றித்தமிழன், அருணபாரதி, பரணிப்பாவலன் உள்ளிட்டோர் முழக்கங்கள் எழுப்பி வழியனுப்பி வைத்தனர்.

செய்தியறிந்து திரைப்பட இயக்குநர் வெ. சேகர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகத்துணைச் செயலாளர் தோழர் சி. மகேந்திரன் ஆகியோர் காவல்நிலையம் வந்து என்னைச் சந்தித்தனர்.

மறுநாள் 20.12.2008 காலை 9 மணிக்கு ஈரோடு காவல்துறையினர் மாம்பலம் காவல்நிலையத்திலிருந்து அழைத்துச்சென்றனர்.

தோழர்கள் கி.வெ. கவிபாஸ்கர், அருணபாரதி, வெற்றித்தமிழன், க. மாதவன், புருசோத்தமன் ஆகியோர் தனியே வண்டி எடுத்து, காவல்துறை வண்டியைப் பின்தொடர்ந்து வந்தனர்.

ஈரோடு குற்றவியல் நடுவர்-I இல்லத்தில் இரவு 7.30 மணிக்கு என்னை நேர்நிறுத்தினர். முன்னதாக நீதிபதி இல்லத்திற்கு வெளியே ஏராளமான தோழர்கள் முழக்கங்கள் எழுப்பி வரவேற்றனர். பெரியார் தி.க., விடுதலைச் சிறுத்தைகள், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம், த.ஒ.வி.இ. த.தே.பொ.க., சாதி ஒழிப்புப் பொது வுடைமை முன்னணி உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த வர்களும் இன உணர் வாளர்களும் அந்த எழுச்சிமிகு முழக்கத்தில் பங்கு கொண்டனர். செய்தியாளர்களும் திரளாக வந்திருந்தனர்.

வழக்கறிஞர் ப.பா.மோகன் அவர்கள் தலைமையில் வழக்குரை ஞர்கள் குழாமாக வந்திருந்து பிணை மனு போட்டனர். நீதிபதி நீதிமன்றக் காவல் ஆணையிட்டபின் செய்தியாளர் களிடம் நான் பேசினேன்.

“இத்தாலி நாட்டுக்காரர்கள் எந்த நாட்டிலாவது ஈழத்தமிழர்களைப் போல் இனப்படுகொலை செய்யப் பட்டால் அந்த நாட்டு அரசுக்கு சோனியா காந்தி ஆயுதம் கொடுப்பாரா? பஞ்சாபியர் எங்காவது இனக்கொலை செய்யப்பட்டால் அவ்வாறு கொல்லுகின்ற அரசுக்கு மன்மோகன்சிங் படை உதவி செய்வாரா?

மலையாளிகளைக்கொன்று குவித்தால் அந்த அரசுக்கு ஏ.கே. அந்தோணி ஆயுத உதவி செய்வாரா? கேட்க நாதியற்றது தமிழ் இனம் என்றுதான் இந்தியா சிங்கள அரசுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் தருகிறது".

உடனே ஒரு செய்தியாளர் "ராஜீவ்காந்தி கொலைபற்றி" என்றார். "ராஜீவ்காந்தி அனுப்பிய இந்திய அமைதிப்படை ஆறாயிரம் ஈழத்தமிழர்களை-குழந்தைகள், முதியோர், பெண்கள் உள்ளிட்டோரைக் கொன்று குவித்தது. அதில் பாதிக்கப்பட்ட யாரோ செய்திருக்கலாம். இதுகுறித்து ஒரே மேடையில் விவாதிக்கக் காங்கிரஸ் தலைவர்கள் தயாரா?" என்றேன்.

இறுதியாக, "தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வெளியே வந்ததும், தமிழ்நாட்டில் காங்கிரசை ஒழிப்பதுதான் எனது முதல் வேலை என்றார். அந்தக் கடமையை தமிழர்கள் நிறைவேற்ற வேண்டும்", என்றேன்.

அங்கிருந்து கோவைச் சிறைக்குக் காவல் வண்டியில் அழைத்துச் சென்றார்கள். கூடவே இன்னொரு வண்டியில், ச.அர.மணிபாரதி, செந்தமிழன், ஸ்டாலின், மு.குமார், தெட்சிணா ஆகியோர் வந்தனர். சிறைவாயிலில் நூற்றுக்கணக்கானோர் தாரை தப்பட்டையுடன் வரவேற்றனர். முழக்கங்கள் எழுப்பினர். பெரியார் தி.க.கோவை மாவட்டத்தலைவர் தோழர் ஆறுச்சாமி, த.தே.பொ.க., தோழர் தமிழரசன் , விடுதலைச் சிறுத்தைகள் , வழக்குரைஞர்கள் எனப் பல தரப்பினரும் வந்திருந்தனர்.

ஆனால் காவல் வண்டி, நிற்காமல் மிகவேகமாக அந்த இடத்தைக் கடந்து சென்றது.

முதல் நாள் தோழர்கள் சீமானும் கொளத்தூர் மணியும் ஈரோட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, அங்கு கூடியிருந்த பெருந்திரளான தோழர்கள், அப்போது அங்கு வந்த காங்கிரஸ் கொடி போட்ட காரை சூழ்ந்து எதிர்ப்பு முழக்க மெழுப்பியுள்ளனர். கார் உரிமையாளர் காருக்குச் சேதம் என்று புகார் கொடுத்து 18 தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டனர். இதனால் மறுநாள் நான் வரும்போது, கூட்டத்தினருடன் நான் நெருங்கி விடாதவாறு, ஈரோட்டிலும், கோவை யிலும் காவல்துறையினர் தந்திரமாக அழைத்துச் சென்றனர்.

ஆனால் முதல் நாள் முழக்கமெழுப்பியோர் கைது செய்யப்பட்ட நிலையிலும் மறுநாளும் பெருந்திரளாக மக்கள் கூடியது அவர்களின் உணர்ச்சிப் பெருக்கையும் சூழ்நிலையின் எழுச்சியையும் காட்டியது.

20.12.2008 இரவு 10.30 மணிக்கு சிறை அறைக்குள் புகுந்தேன். ஒரு மாதம் முன்னர் அறுவை சிகிச்சை எனக்கு செய்யப்பட்ட செய்தியை முன்கூட்டியே சிறைக் கண்காணிப்பாளரிடம் தோழர்கள் சீமானும் கொளத்தூர் மணியும் கூறியுள்ளார்கள். முதல்நாள் இவர்கள் இருவரையும் சிறைவாசலில் வழியனுப்ப வந்த திரைப்பட இயக்குநர் மணிவண்ணன் அவர்களும் கண்காணிப்பாளர் கோவிந்தராசன் அவர்களிடம் கூறியுள்ளார். அதனால் சிறைக்குள் நுழைந்ததும் கண்காணிப்பாளர் "மருத்துவமனை அறையில் வேண்டுமானால் நீங்கள் இருந்து கொள்ளலாம்" என்றார். "இல்லை, எங்கள் தோழர்களுடன் இருந்து கொள்கிறேன்" என்றேன்.

விடிந்து சிறைக்கொட்டடி திறந்தது. முதல்நாள் வந்த தோழர்கள் இருவருடன் அளவளாவிக் கொண்டிருந்தபோதே மருத்துவர் ஒருவர் வந்து என் குருதி அழுத்தத்தைச் சோதித்து, அறுவை சிகிச்சை விவரங்களைக் கேட்டார். "தொந்தரவு இருந்தால் மருத்துவமனையில் சேர்ந்துகொள்ளலாம்'' என்றார். தொந்தரவு ஒன்றுமில்லை; இங்கேயே இருந்து கொள்கிறேன்" என்றேன்.

சிறையில், தண்டனைச் சிறையாளர்களாக உள்ள பலர் வந்து மூவரையும் வரவேற்று அன்பு பாராட்டி, இதைச் செய்து தரவா, அதைச் செய்து தரவா என்று கேட்டு அன்பு மழை பொழிந்தார்கள்.

தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காகச் சிறை சென்றால், சிறையில் உள்ள தமிழர்கள் எல்லாம் நமக்கு நண்பர்கள்தாம்; உறவினர் கள்தாம்.

வந்து பாசமழை பொழிந்த பலரும் வாழ்நாள் சிறையாளர்கள். நாங்கள் ஏதோ சுற்றுலா சென்றதுபோல் சிறைக்குள் சென்றுள்ளோம். எங்கள் மூவரில் கொளத்தூர் மணி அவர்கள்தாம் தடா போன்ற கொடியச் சட்டங்களின் கீழ் தமிழகச் சிறைகளிலும் கர்நாடகச் சிறைகளிலும் பல ஆண்டுகள் இருந்தவர். தோழர் சீமான் இராமேஸ்வரம் பேச்சுக்காகக் கடந்த மாதம் தான் தளைப்பட்டு மதுரைச் சிறையிலிருந்து வெளிவந்து இரண்டாவது தடவையாகக் கோவைச் சிறை வந்துள்ளார்.

நான் முதல் முதல் 1973 செப்-3-ல் திருச்சி நடுவண் சிறையில் 19 நாள்கள் இருந்தேன். அதன்பிறகு, பத்துக்கும் மேற்பட்ட தடவை திருச்சிசிறை, சென்னை பழையசிறை, வேலூர்ச்சிறை, புழல்சிறை ஆகியவற்றில் இருந்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் 15 நாள், 10, நாள், 20 நாள் கணக்குதான்.

19ஆண்டு, 15 ஆண்டு என வாழ்நாளின் கணிசமான பகுதிகளைக் கழித்தவர்கள் கோவைச்சிறையிலிருக் கிறார்கள். 7 ஆண்டு, 10 ஆண்டு கழித்த இளைஞர்கள் இருக்கிறார்கள்.

பெரியவர் கோவை பாட்சா (அல் உம்மா), வீரப்பன் அண்ணன் பெரியவர் மாதய்யன் ஆகியோர் 19 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் எங்கள் மீது அன்பு பொழிகிறார்கள்.

நாங்கள் மூவரும் மதச்சார் பின்மை கொள்கை உடையோர். இருந்தாலும் கோவைச்சிறையில் உள்ள அல் உம்மா நண்பர்களானாலும் பூரிகமல் போன்ற இந்துத்துவா நண்பர்களானாலும் எங்கள் மீது அன்பு பாராட்டுகிறார்கள். நாங்களும் அவர்கள் மீது அன்பு பாராட்டுகிறோம்.

நடுவண்சிறை ஒரு குடியரசு போன்றது. அங்கு சிறைப்பட்டுள்ள அனைவரும் அதன் குடிமக்கள் அவர்கள் என்ன குற்றம் செய்துவிட்டு வந்தார்கள் என்பதைப் பார்த்துப் பாகுபாடு காட்டக்கூடாது.

கொள்கை விவாதம் என்று வரும் போது அல் உம்மாவிடமும் விவாதிப்போம். இந்துத்துவாவிடமும் விவாதிப்போம். அதில் விட்டுக்கொடுப்பதற்கில்லை.ஆனால்-ஒருவருக்கொருவர் சமமாக அன்பு பாராட்டுவதில், உதவிக் கொள்வதில் எந்தப்பாகுபாடும் நாங்கள் வைத்துக கொள்ளவில்லை.

சிறை அலுவலர் (Jailor) அன்பழகன் அவர்களும் எங்களிடம் அன்பு பாராட்டினார். காவலர்களும் அப்படியே. ஆனாலும் எங்களுக்கென்று கட்டுப்பாடுகள் கூடுதலாகவே இருந்தது. வ.உ.சி. தொகுதியை விட்டு, நாங்கள் விருப்பதிற்கு வெளியே இதரத் தொகுதிகளுக்குப் போக முடியாது. அதற்கு சிறை அலுவலர் அனுமதி வேண்டும்.

கொசுத்தொல்லை அதிகம். நான் உடல்நலமில்லாதவன் என்பதால் எனக்கு மட்டும் ஒரு கொசு வலை ஏற்பாடு செய்து திரு பாட்சா அவர்கள் தம் தம்பி மூலம் கொடுத்தனுப்பினர்.

தமிழ்த்தேசியச் சிந்தனை பரவலாக அங்கு வளர்ந்துள்ளது. அவர்கள் எந்த அமைப்பையும் கட்சியையும் சேர்ந்தவர்கள் இல்லை. ஆனால் தமிழ்த்தேசியச் சிந்தனைக்கு வந்துள்ளார்கள்.

கோவைச் சிறையில்தான் தமிழ் நாட்டிலேயே முதல் முதலாக ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு நாளைக்கு ஒரு திருக்குறள் எழுதும் நடைமுறை செயலுக்கு வந்துள்ளது. தமிழ் உணர்வுள்ள சிறையாளர்கள் இப்பழக்கத்தைத் தொடங்கி வைத்துள் ளார்கள்.அங்குள்ள சிறையாளர்கள் அதைவிடாமல் கடைபிடிக்கிறார்கள். மற்ற சிறைகளும் இதைப் பின்பற்றுவதாகச் சொன்னார்கள். அன்றாடம் காலையில், சிறை நடுவே உள்ள கோபுரத்திலிருந்து (டவர்) ஒலிபெருக்கியில் ஒரு குறள் சொல்லி அதற்கு விளக்கமும் சொல்கிறார் விஜயகுமார் என்ற சிறையாளர்.

தமிழக முதல்வர் திரட்டிய ஈழத்தமிழர் உதவி நிதிக்கு கோவைச்சிறையாளர்கள் மட்டும் கொடுத்த தொகை ரூ. 42,000.00-ம். தமிழகச் சிறைகளிலேயே அதிகத் தொகை கொடுத்த சிறை இதுதான்.

இப்பொழுது சிறைக்குள் “கைதி” என்று யாரையும் அழைப்ப தில்லை. கைதியை “சிறைவாசி” என்றுதான் அழைக்கவேண்டும் என்ற நடைமுறை இருக்கிறது.

இப்பொழுது சிறைத்துறைத் தலைவராக உள்ள நடராஜ் சில சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். இஸ்லாமியர்களின் பண்டிகை நாளில், இஸ்லாமியர்களாக உள்ள சிறையாளர்களை அவர்கள் குடும்பப் பெண்களும் குழந்தைகளும் சிறைக் குள் வந்து எதிர் எதிராக உட்கார்ந்து பேச அனுமதிக்கிறார்கள். அதேபோல் பொங்கல் விழாவின்போது மதவேறுபாடில்லாமல், எல்லா சிறையாளர்களையும் அவரவர் குடும்பத்தார் சிறைக்குள் சென்று நேரடியாகச் சந்தித்துப்பேச வாய்ப்புத்தருகிறார்கள். இவ்வாண்டுதான் இத்திட்டம் கோவையில் செயலுக்கு வந்தது. முதலில் முகரத்திற்கு இஸ்லாமியர்கள் அனுமதிக்கப்பட்டனர். அடுத்த சில நாட்களில் பொங்கல் வந்ததால், இந்த ஆண்டு இஸ்லாமி யர்களை முகரத்தில் அனுமதித்துவிட்டுப் பொங்கலுக்கு இஸ்லாமியர் அல்லாத அனைவரையும் அனுமதித்தனர். அடுத்த ஆண்டு இது சரி செய்யப்படும் என்றார்கள். பொங்கல்விழா தமிழர் திருநாள் விழாவாகவே கடைபிடிக்கப் படவேண்டும். அனைத்து மதத்தினரும் அன்று தங்கள் குடும்பத்தினரைச் சந்திக்கலாம். குறிப்பிட்ட மதத்திற்குரியதாகக் குறுக்கக் கூடாது.

இவ்வாண்டு சிறையில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடினர். முதல் தொகுதியில் சமத்துவப் பொங்கல் வைத்தனர். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த சிறையாளர்கள் சிலர் ஆளுக்கொரு கை பச்சரிசியைப் பானையில் போட்டனர். எங்கள் மூவர் சார்பாக என்னைப் போடச் சொன்னார்கள். அதிகாரிகள் எல்லாம் வந்தார்கள். பொங்கல் அனைவர்க்கும் பகிர்ந்து வழங்கப்பட்டது.

மறுநாள் (15.01.2009) தமிழ் உணர்வாளர்கள் 9-ம் தொகுதியில் பொங்கல் வைத்தார்கள். நாங்கள் மூவரும் சிறப்பு விருந்தினர்கள். பொங்கி வந்தவுடன் “பொங்கலோ பொங்கல்” என்று முழக்கமிட்டனர். எங்கள் கைகளில் கொடுத்திருந்த புறாக்களைப் பறக்கவிட்டோம்.

ஏழு ஆண்டுகள் எட்டு ஆண்டுகள் சிறையிலிருக்கும் இளைஞர்களும் பெரியவர்களும் இந்த ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

தோழர்கள் துரைப்பாண்டி, சக்திவேல், தமிழ்ச்செல்வன், யூசுப், கருப்பையா போன்றவர்களின் முயற்சி பாராட்டிற்குரியது. வழக்குரைஞர் சிவசாமித் தமிழன் இவர்களை அவ்வப்போது சந்திக்கிறார்.

திருக்குறள் எழுதுபவர் களுக்கும், தமிழ் உணர்வாளர்கள் சிலருக்கும், பொங்கலுக்கு வேட்டி சட்டை வாங்கி அன்பளிப்பாக வழங்குகிறார்கள். ஆண்டுதோறும் இவ்வாறு செய்து வருகிறார்களாம்.

தமிழ் உணர்வாளர்கள் வெளியில் உள்ள இசைக்குழு ஒன்றை வைத்து நிகழ்ச்சி ஒன்றும் வைத்தார்கள். சிறைக்காவலர் ஒருவர் சிறந்த கலைஞராக இருக்கிறார். அவர் இதற்கான செலவுகளை ஏற்றுக் கொண்டார். போகியிலிருந்து காணும் பொங்கல் வரை நிகழ்ச்சிகள் நடந்தன. கல்லூரி, பள்ளி, தொண்டு நிறுவனம் என வந்து அன்பளிப்பாக சிறையாளர்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

கிறிஸ்துமஸ் நாளன்று ஒரு தொண்டு நிறுவனம் 2500

சிறையாளர்களுக்கும் கோழிபிரியாணி வழங்கியது.

எங்களை நாள்தோறும் பார்க்க வரும் மக்கள் வெள்ளம் கட்டுக் கடங்காததாக இருந்தது. திரைப்பட இயக்குநர் சீமான்- சிறைக்கதா நாயகன். அவரைக் காண விருப்பமுற்றோர் ஏராளம். அவர்கள் எல்லாம் ரசிகர்கள் இல்லை. தமிழ் உணர்வாளர்கள்தாம். அடுத்து அப்பகுதியில் வெளியிலும் சிறையிலும் பெரும் செல்வாக்குப் பெற்றவர் கொளத்தூர் மணி.

வந்தவர்கள் எல்லாம் மூவரையும் பார்க்க மனுப் போட்டார்கள். பார்த்தார்கள். எங்கள் கட்சிகளைச் சார்ந்தவர்கள் வந்தார்கள். எங்கள் கட்சிகளுக்கு அப்பால், விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.கவினர் எனக்கூட்டம் கூட்டமாக வந்தார்கள். எந்த அமைப்பையும் சாராத தமிழ் இன உணர்வாளர்கள் வந்தார்கள். பெண்கள் பலர் வந்தார்கள். அவர்களின் தமிழ் இன உணர்ச்சி தமிழகம் சூடேறி வருவதைக் காட்டுகிறது. கூட்டத்தைக் கொஞ்சம் குறைத்தால் நல்லது என்பார் கண்காணிப்பாளர்.

முதல் முதலில் எங்களைப் பார்க்க வந்தவர் திரைப்பட இயக்குநர் மணிவண்ணன். அவருடன் அவர் மகன் ரகு அக்காள் மகன் இளமுருகு மற்றும் துணை இயக்குநர்கள் வந்தார்கள். எங்கள் மூவருக்கும் ஆளுக்கு இரண்டு சோடி உடுப்புகள், ஒவ்வொருவருக்கும் படுக்கை விரிப்பு( பெட்சீட்), கனத்த போர்வை, துண்டு தேங்காய்ப்பூ ஆகியவற்றையும் கூடை நிறையப் பழங்களையும் கொடுத்தார் மணிவண்ணன்.

மீண்டும் ஒரு முறை அவர் மனைவியுடன் வந்தார். சீமானை மகனைப்போல கருதிவரும் மணிவண்ணன் மனைவி சிறையில் அவரைக் கண்டதும் அழுதுவிட்டார்.

திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராசு, இயக்குநர் ஜெகன், இயக்குநர் சிங்கம்புலி, கலை இயக்குநர் பிரபாகரன், தயாரிப்பு நிர்வாகி சிவராசு, இயக்குநர் ஆர். சுந்தரராசன், இயக்குநர் அமீர், இயக்குநர் பாரதிராஜா, இயக்குநர் ஆர்.கே.செல்வமணி, நடிகர் சத்தியராஜ், இயக்குநர் மணிவண்ணன், பா.ம.க.சட்டப்பேரவை உறுப்பினர் வேல்முருகன், கணகுறிஞ்சி, பாமரன், பா.ம.க.தலைவர் கோ.க.மணி மகன் தமிழ்க்குமரன், ஆதித்தமிழர் பேரவைத்தலைவர் அதியமான், பொதுச்செயலாளர் நீலவேந்தன், விடுதலைச் சிறுத்தைகள் கோவை மாவட்டத்தலைவர் சுசி, கலையரசன் களப்பிரர் (ஆதித்தமிழர் பேரவை) கு. இராமகிருட்டிணன், ஆறுச்சாமி (பெ.தி.க) வழக்குரைஞர் வடிவாம்பாள்-இணையர் (த.ஒ.வி.இ) வழக்கறிஞர் அங்கயற்கண்ணி (த.ஒ.வி.இ) நிலவன் (த.ஒ.வி.இ) வழக்கறிஞர் கந்தசாமி-தமயந்தி இணையர் திருப்பூர் (ம.தி.மு.க) ப. இரத்தினசாமி ஈரோடு சாதி ஒழிப்புக் கூட்டு இயக்கம் பொறியாளர் செங்கோட்டையன் தலைவர் தலித் மக்கள் கட்சி, சா.பேகன் விடுதலைச்சுடர் (குடந்தை தமிழ்க்கழகம்) புதுவைக் கலைச்செல்வம், வேலிறையன், எழில் சுப்பிரமணியம்- (தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்) லோகு அய்யப்பன் (பெ.தி.க), புதுவை, கருணா மனோகரன் தமிழ்ச்செல்வி இணையர், முருகேசன் வாசுகி (பெ.தி.க.) இராம இளங்கோவன், சா. கதிரவன், (பெ.தி.க.) சட்டக்கல்லூரி மாணவர்கள் தொல்காப்பியன், பன்னீர்ச்செல்வம், வழக்குரைஞர் அருள், வழக்குரைஞர் ப.பா.மோகன், வழக்குரைஞர் சாஜித், பழ.நெடுமாறன் (தலைவர் தமிழர் தேசிய இயக்கம்) மதுரை அரப்பா, வழக்குரைஞர் இராம. சிவசங்கர், ஜோதிபாசு-ராசிபுரம் (ம.தி.மு.க), தெட்சிணாமூர்த்தி- ராசிபுரம் (த.தே.இ.), கோ. மாரிமுத்து (த.தே.பொ.க. ஓசூர்), தமிழரசன் (த.தே.பொ.க.), கி. வெங்கட்ராமன், தஞ்சை பழ. இராசேந்திரன், அ. மன்னர் மன்னன், தஞ்சை மா. சீனிவாசன், கோவை சங்கர், ஈரோடு ஜெயக்குமார், ஈரோடு குமார், ஓசூர் சுரேசு, கோவை சுரேசு, வெங்கடேஷ்பிரபு, ரவிசங்கர், அனைவரும் த.தே.பொ.க., மதுரை வேலுச்சாமி(விடுதலை சிறுத்தைகள்), தாமரைக்கண்ணன் (பெ.தி.க.), மணிகண்டன் (தமிழர் கழகம்) வழக்கரைஞர் செ.துரைசாமி (பெ.தி.க.), வழக்குரைஞர் சு. குமாரதேவன், வழக்குரைஞர் து. ராஜ்குமார் (பெ.தி.க.), தஞ்சை க. பத்மா (ம.தி.மு.க.), தஞ்சை ம. லெட்சுமி, மதுரை ஆனந்தன்-இளமதி (த.தே.பொ.க.), ச. தமிழ்ச்செல்வன் (த.மு.எ.ச. தமிழகப்பொதுச்செயலாளர்), இயக்குநர் திருமுருகன் (மெட்டிஒலி), உதவி இயக்குநர் ஜெகதீசன், திரைப்பட நடிகர் மயில்சாமி, கோபி கிட்டுசாமி, சிற்பிஇராசன், முனைவர் மு. இராமசாமி, குடந்தை சோலை மாரியப்பன் (பெ.தி.க.), வியனரசு (பா.ம.க.), வழக்குரைஞர் சாக்ரடீசு (பா.ம.க. கோவை) வழக்குரைஞர் நிக்கோலஸ் (மக்கள் கண்காணிப்பகம்) முதலியோரும் இன்னும், இன்னும் பலரும் பல்வேறு நாட்களில் வந்தனர். அவர்கள் பெயர்கள் விடுபட்டதற்குப் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

இளம் வழக்குரைஞர்கள் இரா. கலையரசு, பாலச்சந்தர், சிவகுமார், ஆனந்தகுமார், பார்த்தசாரதி, பாலமுருகன், ராஜீவ்காந்தி, காமராசு ஆகியோர் அடிக்கடி வந்து பார்த்தனர். இவர்களில் சிலர் நாள்தோறும் வந்தனர்.

வழக்குரைஞர் ப.பா. மோகன் மற்றும் அவரின் இளம் வழக்குரைஞர்கள் கொள்கை வழிநின்று பிணை முயற்சிகளில் ஈடுபட்டனர். இவ்வேலைகளில் அவர்களுக்குக் கொள்கை வழிப்பட்ட மகிழ்ச்சி தவிர வேறு எந்தப்பலனும் இல்லை. மற்ற வழக்குகளை உரியவாறு கவனிக்க முடியாமல் அவர்களுக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கும்.

மூன்று தடவை ஈரோட்டில் பிணை மனு போட்டார்கள். மூன்று தடவையும் தள்ளுபடி ஆனது. அந்த அளவுக்குத் தமிழக அரசு பிணையை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதிட்டது, செல்வாக்கு செலுத்தியது.

இறுதியில், மூத்த வழக்குரைஞர் செ.துரைசாமி அவர்களும், வழக்குரைஞர் இளங்கோவன் அவர்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிணை மனு போட்டனர். அப்பிணை மனு விசாரணைக்கு வரும்போது அங்கு சற்றொப்ப ஐம்பது வழக்குரைஞர்கள் எழுந்து தாங்களும் இந்த பிணைக்காக வந்திருப்பதாக வெளிப்படுத்திக் கொண்டனர்.

நீதிபதி சுதந்திரம் அவர்கள் 19.01.2009 அன்று பிணை வழங்கினார்.

20.01.2009 அன்று மாலை 6.30 மணிக்கு வெளியில் வந்தோம்.

கட்டுக்கடங்காத பெருங்கூட்டம் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையில் வரவேற்பு வழங்கியது. இசைக்கருவிகள் முழங்கின.

தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்த பின், பெரியார் படிப்பகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தோம்.

இரவே, தோழர் சீமான், வத்லகுண்டு படப்பிடிப்புத்தளத்திற்குச் சென்றார்

மறுநாள் 21.01.2009 காலை கோவையிலிருந்து பெரியார் தி.க. தோழர்கள் 40 ஊர்திகளில் அணிவகுத்து வர தோழர் கொளத்தூர் மணியும் நானும் ஈரோடு வரை ஒன்றாக வந்தோம்.

விஜயமங்கலம், பெருந்துறை ஆகிய ஊர்களில் பெரியார் தி.க. தோழர்கள் வரவேற்புக் கொடுத்தனர். ஈரோட்டிற்கு 1.30 மணிக்கு வந்து சேர்ந்தோம்: பன்னீர்செல்வம் பூங்கா பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தோம்.

வரவேற்பு அளிக்க எழுச்சியுடன் திரளானோர் கூடினர். காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர்.

அங்கு உரையாற்றிவிட்டு, தோழர் கொளத்தூர் மணி மேட்டூர் நோக்கியும் நான் தஞ்சை நோக்கியும் பிரிந்தோம். என்னோடு தோழர்கள் கோ.மாரிமுத்து, ஈரோடு ஜெயகுமார், குமார், சாம்பு, பிந்துசாரன் ஆகியோர் தஞ்சை வரை வந்தனர்.

திருச்சி சிந்தாமணியில் கொடுத்த வரவேற்பில் வழக்கறிஞர் சங்கச் செயலர் கங்கைச் செல்வன், வழக்கறிஞர் பானுமதி, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத் தோழர் அமிர்தநேசன் (விடுதலைச் சிறுத்தைகள்) திரு. செ.த. இராசேந்திரன் (பெ.தி.க.) திருசோழராஜன் (த.தே.இ) நிலவழகன் (த.ஒ.வி.கி) திரு.சிவப்பிரகாசம், பெரியார் தத்துவ மையம் திரு சரவணன், தணிக்கை அறிஞர் குமாரசாமி தோழர் கவித்துவன், இராசா ரகுநாதன், தி,மா.சரவணன்(த.தே.பொ.க) மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திரளானோர் வந்திருந்தனர்.

அடுத்து அரியமங்கலத்தில் தோழர் ரெ.சு.மணி அவர்கள் தலைமையில் நடந்த வரவேற்பில் புலவர் முருகேசன் (ம.தி.மு.க) வீரமணி (ம.தி.மு.க) ஆகியோர் பங்கு பெற்றனர். துவாகுடி அண்ணா வளைவில் தோழர் வே.க. இலட்சுமணன் தலையில் நடந்த வரவேற்பில் ஜி.பி. இஞ்சினீயரிங் தொழிற் சங்கத் தோழர்களும் உணர்வாளர்களும் கலந்துகொண்டனர்.

அடுத்து தஞ்சை மாவட்ட நுழைவுப்பகுதியான புதுக்குடி சாலையில் நடந்த மாபெரும் வரவேற்பில் தோழர் க.காமராசு (த.தே.பொ.க.) தலைமையில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் ஆண்களும், பெண்களும் கலந்துகொண்டனர். தோழர் கு.சுப்பிரமணியம், காமாட்சிபுரம் கிளைச்செயலாளர் தோழர். செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதன்பிறகு செங்கிப்பட்டி சாணூரப்பட்டியில் வேட்டு முழக்கம், பறையாட்டம் ஆகியவற்றுடன் தோழர் குழ. பால்ராசு (த.தே.பொ.க.) தலைமையில் நடந்த பெருந்திரள் வரவேற்பில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். தோழர்கள் இரா. கருணாநிதி, ஆ. தேவராசு, கெ. செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிறைவாகத் தஞ்சை நகர்வந்தபோது இரவு மணி 9.30 தஞ்சை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தேன். அங்கு தோழர் பழ.இராசேந்திரன் (மாவட்டச்செயலாளர் (த.தே.பொ.க.) தலைமையில் திரளானோர் வரவேற்பளித்தனர்.

தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயாலாளர் திரு. அய்யனாபுரம் சி. முருகேசன், தோழர் வெற்றிவேந்தன் (விடுதலைச் சிறுத்தைகள்), தோழர் பாரி, விடுதலை வேந்தன், க. பத்மா (ம.தி.மு.க.) வெண்.வீரமுருகு. வீரசிங்கம், தோழர்கள் நா. வைகறை, இராசுமுனியாண்டி, தெ. காசிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

14.12.2008 அன்று ஈரோட்டில் த.தே.பொ.க. சார்பில் “தமிழர் எழுச்சி உரை வீச்சு” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் இவ்வளவு பெரிய பின் விளைவுகளையும், எழுச்சியையும் உண்டாக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. அக்கூட்டமே எழுச்சியாக நடந்தது. இரண்டாயிரம் பேர் கலந்துகொண்டனர். கணிசமாக மகளிர் கலந்துகொண்டனர். கட்சி எல்லைகளுக்கு அப்பால் இன உணர்வோடு, ஈழத்தமிழர்கள் துயர் துடைக்கும் ஆர்வத்தில் வந்தவர்களே அதிகம்.

பழைய பெருங்கட்சிகள் தலையிட்டால் தான் தமிழ் இன உணர்வில் மக்களைத் திரட்ட முடியும் என்றிருந்த நிலைமை காலாவதி ஆகிவிட்டது.

காடு சூடாகி விட்டது, சிறு தீக்குச்சி கூட பெருந்தீயை உண்டாக்கிவிடும்.




## வழக்கறிஞர் தேவநாதன் மறைவு



கடலூர் வழக்கறிஞர் தோழர் அ.தேவநாதன் கடந்த 8.01.2009 அன்று அவரது இல்லத்தில் திடீர் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 58. தோழர் தேவநாதன் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியில் அதன் தொடக்க ஆண்டுகளில் தலைமைச் செயற்குழுவில் இடம் பெற்று சிறப்பாக பணியாற்றியவர். தேர்தல் உள்ளிட்ட சிற்சில கொள்கை மாறுபாடுகள் காரணமாக த.தே.பொ.க.விலிருந்து விலகியிருந்தாலும் தமிழ்த் தேசியம் என்ற கருத்தியலில் இறுதி வரை உறுதியாக இருந்தவர் தோழர் தேவநாதன்.

சாதிய ஒடுக்குமுறை, மனித உரிமை மீறல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் சார்ந்த போராட்டங்கள் எல்லாவற்றிலும் பங்காற்றினார். திரு பழ.நெடுமாறன் பொடா சிறையில் கடலூரில் இருந்த போது அவருக்கு பக்க துணையாக பணியாற்றி அவரது கருத்துகளை வெளியிடுவதில் சிறப்பாகப் பணியாற்றினார்.

கடலூரில் அவருடைய உடல் இறுதி மரியாதைக்கு வைக்கப்பட்ட போது த.தே.பொ.க. சார்பில் தோழர்கள் கி.வெங்கட்ராமன், மா.கோ.தேவராசன், சி.ஆறுமுகம், மூ.முருகவேள், அ.மதிவாணன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

23.01.2009 அன்று கடலூரில் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் தேவநாதன் திருவுருவப்படத்தை திரு பழ.நெடுமாறன் திறந்து வைத்து இரங்கலுரை ஆற்றினார். தோழர் பெ.மணியரசன் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களும் வழக்குரைஞர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இரங்கலுரை ஆற்றினர்.

தோழர் அ.தேவநாதன் மறைவிற்கு புதிய தமிழர் கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## மன்மோகன் சிங்கே திரும்பிப்போ! கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழரைப் படுகொலை செய்யும் சிங்களப் பேரினவாத அரசுக்குத் துணையாக இந்திய அரசு போரை நடத்திவருகிறது.

சென்னையில் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர்கள் தொடர்பான நிகழ்ச்சியில் மன்மோகன் சிங் 08.01.09-ம் அன்று கலந்துகொண்டார்.

தமிழினத்தைப் படுகொலை செய்யும் போரை நடத்தும் மன்மோகன்சிங் தமிழகம் வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி, தமிழ் தேசிய விடுதலை இயக்கம், தமிழர் தேசிய இயக்கம், மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் மற்றும் தமிழின உணர்வாளர்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கைதாயினர். பெரியார் தி.க. தோழர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

திருவாள்கள் பழ. நெடுமாறன், ஆனூர் செகதீசன், தியாகு, எழுத்தாளர் செயப்பிரகாசம், நா. வைகறை, அரங்க. குணசேகரன், கவிஞர் தமிழேந்தி, அற்புதம் அம்மாள், தேனிசை செல்லப்பா உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்ட தோழர்களிடையே கருத்துரையாற்றினர். மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்



சென்னை

# விடுதலையின் கருவறை

ஓவியர் செம்பரிதி

வ.உ.சியின் சிறையில்
இன்று பேரன்கள்

வெள்ளையனுக்குகெதிராய்
கனன்ற நெருப்பு
இன்று இந்தியருக்கெதிராய்...

அறச்சினம்
எரித்து கருக்கியே வந்திருக்கிறது
அடிமைத்தனத்தை

எப்போதும்
நக்கியே கிடக்கிறார்கள்
துரோகிகள்
எதிரியின் காலடியை

பிழைத்தாலும்
துரோகிகள்
மலத்தின் புழு

மாண்டாலும்
போராளிகள்
புதைந்த விதை

மூவர் உடல்
அடைபட்டுக்கிடக்கிறது
சிறைக்கூடத்தில்

மூவர் உரை
உணர்வேற்றி எழுப்புகிறது
தமிழ்த் தேசத்தை!

அதிகாரத்தின் சிறை
விடுதலையின் கருவறை...



# தாய்மொழி

பெ.மணியரசன்

கோவை நடுவண் சிறை
செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்
சிறையிருந்த அறைக்கும்
அடுத்த அறையில் நான்

பொழுது சாய்ந்ததும் பூட்டி
புலர்ந்ததும் கதவு திறப்பர்
கதிர் எழும் காட்சியை
மறைத்து நிற்கிறது மதில் சுவர்
மதிலோரம் நிற்கிறது
மாதுளைமரம்.

சுவரேறி வரும் சூரிய விரல்கள்
மாதுளை இலைகளில்
மாணிக்கம் பூசும்
முகம் கழுவ அங்கு போனால்
மரம் நிறைய மைனாக் குருவிகள்

சிறையில் வளரும் எங்கள்
செல்ல மைனா மட்டும்
தாழ்வாரத்தில் தனியே நிற்கிறது

ஏற்கெனவே இங்கிருந்தவர்
எடுத்து வளர்த்த மைனா அது

கைமேல் குந்தும்
தோளில் தொத்தும்
கற்றுக்கொடுத்த ஒலிகளைக்
கச்சிதமாய் எழுப்பும்.

குயில்போல் கூவும்
மயில்போல் அகவும்
சீட்டி அடித்தால் திருப்பி ஒலிக்கும்
பூனைபோல் கத்தும்
'போடா' என்று புரியும்படி சொல்லும்

ஆனால் அதற்கு
மைனாபோல் கத்தத் தெரியாது
மைனாக் கூட்டத்திலும் சேராது

தாய்மொழி மறந்து
தன்னினம் துறந்து
தாழ்வாரத்தில் சுற்றுகிறது
தன்னை இழந்த மைனா!



## அண்ணாச்சிக்கு இரங்கல்



பெங்களூரு அண்ணாச்சி ப.சண்முகசுந்தரம் அவர்கள் 21.2.2009 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி அதிர்ச்சி அளித்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டு உதவியவர் அண்ணாச்சி.

பிற்காலத்தில் பிரபல விடுதலைப்புலிகள் தலைவர்கள் ஆனவர்களில் பெரும்பாலோர் பெங்களூரில் அண்ணாச்சியின் இந்திரா நகர் இல்லத்தில் தங்கியிருந்தவர்கள்தாம். ஈழ விடுதலைப் போராட்டததிற்கு கர்நாடகத்தில் பேராதரவும் பெருநிதியும் திரட்டிடத் துணை நின்றவர்.

நாம் சென்னையில் 1990 பிப்ரவரி 25இல் நடத்திய தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

விருந்துபுரத்தலில் அண்ணாச்சியும் அவர் துணைவியார் சுப்புரத்தினம் அம்மையாரும் மிகுந்த உவப்புக் கொண்டவர்கள்.

கர்நாடகத் தமிழர் பேரவையின் தலைவராகச் செயல்பட்ட அண்ணாச்சி பெங்களூரு தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருமுறை தேர்வு செய்யப்பட்டார். ஏற்கெனவே கர்நாடக லாரி உரிமையாளர்கள் சங்கத்தில் பொறுப்பு வகித்தார்.

காவிரிச் சிக்கலில், கன்னட வெறியர்கள் கர்நாடகத் தமிழர்களை 1991-92 இல் தாக்கிக் கொலை, கொள்ளைகள் புரிந்த போது, தமிழர்களுக்கு பல்லாற்றாலும் துணை நின்றார். கர்நாடகத்தில் தமிழர் துயரங்களைக் கர்நாடக ஆட்சியாளர்களிடமும், அரசியல் தலைவர்களிடமும் எடுத்துக்கூறி தீர்வுக்கு முயலும் தமிழர் தலைவராக அண்ணாச்சி விளங்கினார். அந்த இடம் இப்பொழுது வெற்றிடமாகி உள்ளது.

சண்முகசுந்தரம் அண்ணாச்சி அவர்களின் மறைவுக்குத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது. அவர் துணைவியார் திருவாட்டி சுப்புரத்தினம் அம்மாள், மகன் மணிவண்ணன், மகள் செல்வதேவி ஆகியோர் ஆறுதல் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- **பொதுச் செயலாளர்.**

## தொடர்வண்டி மேம்பாலத்திற்கு ஈகி இராசேந்திரன் பெயர் சூட்டக் கோரி த.தே.பொ.க. பொதுக்கூட்டம்

சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள தொடர்வண்டி மேம்பாலத்திற்கு மொழிப்போர் ஈகி இராசேந்திரன் பெயர் சூட்டக் கோரி பொதுக் கூட்டம் அவரது நினைவு நாளான 27.01.09 அன்று சிதம்பரம் பெரியார் சதுக்கத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழக மாணவர் முன்னணி இணைந்து நடத்திய இப்பொதுக் கூட்டத்திற்கு த.தே.பொ.க. நகரச் செயலாளர் தோழர் கு.சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார்.

கோவையிலிருந்து சிறை மீண்ட பின் முதன் முறையாக தாம் கலந்து கொண்ட இப்பொதுக்கூட்டத்தில் தோழர் பெ.மணியரசன் எழுச்சியுரையாற்றினார். மற்றும் தோழர் கி.வெங்கட்ராமன், தோழர் செல்லப்பன்(மாவட்டச் செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி), தோழர் சீனிவாசன்(நகரச் செயலாளர் ம.திமு.க.), திரு. இராம.ஆதிமூலம் (துணைத் தலைவர், தமிழ்க் காப்பணி), தோழர் பழ.மலய்(தமிழர் தேசிய இயக்கம்), திரு மதியழகன்(தலைவர், அண்ணாமலை தமிழ் வளர்ச்சி மன்றம்), திரு ஆ.குபேரன்(அக்னிச் சிறகுகள் எழுச்சி



இயக்கம்), தோழர் தே.அரவிந்தன் (நகரச் செயலாளர், தமிழக மாணவர் முன்னணி) ஆகியோர் விளக்கவுரையாற்றினர்.

திரளானோர் கலந்து கொண்ட சிறப்பான நிகழ்வாக இப்பொதுக்கூட்டம் அமைந்தது.

# மருத்துவர்களும் மதக்குருக்களும் - 5

■ ம. செந்தமிழன்

'மருத்துவம் ஒரு சமூக அறிவியல். விரிந்த தளத்தில் அதுவே அரசியல் ஆகிவிடும்' என்றார் ருடால்ஃப் விர்ச்சல் எனும் அறிஞர்.

ஆங்கில மருத்துவமுறையின் தோற்றமும் வளர்ச்சியும் **ஏகாதிபத்தியத்தின் அரசியல்** என்பதையே வரலாறு பதிவு செய்துள்ளது. இங்கிலாந்தும் ஏனைய காலனி ஆதிக்க நாடுகளும் உலகின் மரபுச் செழுமை மீது படையெடுத்து சூறையாடத் தொடங்கிய காலத்தில்தான் ஆங்கில மருத்துவமுறை தோன்றியது. வேறு வகையில் கூறுவதென்றால் , காலனி ஆதிக்கத்தின் படைக்கலன்களில் ஒன்று ஆங்கில மருத்துவம்.

இயற்கையின் அங்கமே மனிதன். தனி மனித உடல்நலம் என்பது, சமூக பொருளியல் மற்றும் இயற்கை நலன் ஆகியவற்றுடன் பிணைந்தது என்பதே தமிழர் உள்ளிட்ட தொல் நாகரிகச் சமூகத்தினரின் கோட்பாடு.

இயற்கை வளங்களைச் சுரண்டுவதையும், மனித வளத்தை வெறும் உழைப்பாற்றலாகக் கணக்கிட்டு அவர்தம் வாழ்வைச் சூறையாடுவதையும் நோக்கமாகக் கொண்ட காலனியாதிக்க நாடுகள் மேற்கண்ட கோட்பாட்டை வெறுத்தன. ஏனெனில், இக்கோட்பாடு, தொழில் மயத்தைப் புறந்தள்ளியது: இயற்கையை நேசித்தது. மேலாக, மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டது.

காலனி ஆதிக்கம் கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்துச் சமூகங்களிலும் அம்மண்ணின் மைந்தர் அடிமைகளாக்கப்பட்டனர். அவர்தம் தற்சார்பு வாழ்வியல் ஒழித்துக்கட்டப்பட்டு காலனிய அரசுகளுக்கும், நிறுவனங்களுக்குமான ஏவலர்களாக அம்மாந்தர் நிர்பந்திக்கப்பட்டனர்.

சுரங்கம் தோண்டுதல், வனங்களை அழித்தல், நகரங்களை உருவாக்குதல் தொழிற்சாலைகள் கட்டுதல் உள்ளிட்ட காலனியாதிக்க நலன்சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தப் பட்டனர். இதனால், குறிப்பிட்ட இடத்தில் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்து கிடக்கும் சூழல் ஏற்பட்டது.

தூய்மையான நீர், காற்று, உணவு குறைந்த பணிச்சுமை மற்றும் குடும்ப வாழ்வில் முழு மனதுடன் ஈடுபடுதல் ஆகிய நற்பண்புகளுடன் கூடிய நீடித்த வாழ்வியல் ஒழித்துக்கட்டப்பட்டது. விளைவாக, மலேரியா, காலரா உள்ளிட்ட கொள்ளை நோய்கள் தோன்றின. ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்தச் சூழலில்தான் ஆங்கில மருத்துவமுறை வடிவம் பெறத் தொடங்கியது.

இன்றைய மருத்துவக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் அடிப்படையாகக் கருதப்படும். 'Preventive and Social Medicine' by K.Park நூல் இதற்கான ஒப்புதல் வாக்குமூலங்களைக் கொண்டுள்ளது. அந்நூலின் சில பகுதிகளைக் காண்போம்.

"மருத்துவத்துறையில் மற்றுமொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சியாகக் கருதப்படுவது மாபெரும் சுகாதார விழிப்புணர்வு ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையக்காலத்தில் இங்கிலாந்தில் தோன்றிய இது, பிற நாடுகளுக்கும் பரவியது. மக்களின் நடத்தைகளை மாற்றியமைப்பதிலும் பொது உடல் நலத்தைக் கொணர்வதிலும் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

18-ம் நூற்றாண்டில் தோன்றிய தொழிற்புரட்சி எண்ணற்ற சிக்கல்களை ஏற்படுத்தியது- குடிசைப்பகுதிகளின் உருவாக்கம், மிகைக் கூட்டம் ஆகியவை இவற்றிற்கே உரிய தீய விளைவுகளுடன் நிகழ்ந்தன. மாநகரங்களிலும், நகரங்களிலும் அழிவுகள் குவிந்தன. நோய் தாக்குதல்களும் இறப்பு விகிதமும் அதிகரித்தன. குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்பட்டனர். எலும்புருக்கி நோய் (TB-Tuberculosis) போன்ற தொற்று நோய்கள் பெருகின. தொழிற்துறை மற்றும் சமூகச் சிக்கல்கள் மக்கள் உடல்நலனை சீரழித்து படுமோசமான நிலைக்கு இட்டுச் சென்றன".

ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் வெறியினால் உருவான உடல்நலக் கேடுகளை மேற்கண்ட பத்திகள் விளக்குகின்றன.

சுருங்கச் சொல்வதெனில், பல்லாயிரக் கணக்கில் மனித உயிர்களைப் பலிவாங்கும் நோய்கள் அனைத்தும் ஏகாதிபத்தியப் பேராசையின் விளைவுகளே ஆகும். காலனியாதிக்க காலத்திற்கு முன்பு, இத்தகையக் கொள்ளை நோய்கள் இருந்ததற்கான பதிவு எதுவும். வரலாற்றில் இல்லை.

தொழிற்புரட்சி என்றழைக்கப் படும் பெருமுதலாளிய உருவாகக் காலத்தில் தொழில்மயமான நாடுகளில் மக்களின் சராசரி வாழ்நாள் மிகவும் குறைந்தது.

லண்டன் மாநகரில் 1842 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவு இது. *(1)*

| | **சராசரி ஆயுள்காலம்** |
|---|---|
| **வகையினர்** | **ஆண்டுகள்** |
| மேட்டுக்குடியினர் மற்றும் அதிகார மட்டத்தினர் | **44** |

பெருவாரி அடித்தட்டு மக்கள் இளமைக்காலத்தை எட்டியதுமே மரணமடைந்துள்ளமையும், வர்க்க மேல்தட்டினர் அவர்களைக் காட்டிலும் இருமடங்கு ஆயுள்காலம் பெற்ற மையும் இவ்வாய்வு முடிவிலிருந்து தெரிகிறது.

**ஏகாதிபத்திய சமூகத் தலைமை பொருளாதாரத்தை மட்டுமல்ல, மனிதனின் ஆயுள் காலத்தையும் சுரண்டும் தன்மை உடையது என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். இந்தப் புரிதல்தான் ஆங்கில மருத்துவ முறையை அணுகுவதற்கான அடிப்படை.**

தொழிற்சாலைகளை உருவாக்க, இயக்க, நகரங்களை உருவாக்க, மேலதிக நாடுகளைச் சுரண்ட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரள் தேவைப்பட்டது. அதேவேளை, ஆயுள்கால குறைவினால் மக்கள் திரளைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதில் ஏகாதிபத்திய அரசுகளுக்கு சிக்கல் ஏற்பட்டது.

இந்தத் தேவையின் விளைவாகவே, ஆங்கில மருத்துவமுறை திட்டமிட்டு பரப்பட்டது.

ஆங்கில மருத்துவமுறை, நோய்களின் காரணங்களைக் கேள்வி கேட்கவில்லை. அவற்றை நிரந்தரமாக ஒழிக்க விரும்பவும் இல்லை. மாறாக, நோய்களுக்குத் தற்காலிக ஓய்வு கொடுத்தது. மேலும் மெல்ல மெல்ல மனிதர்களை மருந்துகளைச் சார்ந்து வாழும் உயிரிகளாக மாற்றியது.

தொழில்மயத்தின் விளைவுகளான கொள்ளை நோய்களை ஒழிக்க வேண்டுமெனில், மக்களின் வாழ் நிலையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்வதை ஏகாதிபத்தியம் விரும்பவில்லை. அதேவேளை, அதற்கு உழைக்கும் அடிமைகளும் தேவை. இந்த இரு தேவைகளையும் ஓரளவு நிறைவு செய்தது ஆங்கில மருத்துவம்.

தொழில்மயத்திற்கு உட்படும் அனைவரும் நோய்வாய்ப்படும் நிலை இன்றுவரை தொடர்கிறது.

சான்றாக, மாரடைப்பு, நீரிழிவு, புற்றுநோய் ஆகியவை 20-ம் நூற்றாண்டில் தொழில்மயம் தந்த பரிசுகள்.

பணியில் நிச்சயமற்ற தன்மை, கூடுதல் பணிச்சுமை, பொருளாதார ஊசலாட்டம் ஆகியவையே இந்நோய்கள் உருவாக அடிப்படைக்காரணங்கள்.

ஆங்கில மருத்துவம் இந்நோய்களை முற்றிலும் ஒழிப்பதில்லை. மாறாக, இந்நோய்களுக்கு உட்பட்டவர்களை மருந்துகளைச் சார்ந்து வாழும் நிரந்தர நோயாளிகளாக மாற்றிவருகின்றது.

இந்தப் பின்புலத்தில் கடந்த இருநூறு ஆண்டுகளில் மருத்துவத் துறை ஒரு மாபெரும் சுரண்டலின் வடிவமாகவும் மாறியுள்ளது. மருந்து உற்பத்தி நிறுவனங்களும் பரிசோதனைச் சாதனத் தயாரிப்பு நிறுவனங்களும் பல ஆயிரம் கோடிகளைக் குவிக்கும் கொள்ளைக் கூடாரங்களாகியுள்ளன.

எந்த ஏகாதிபத்திய நாடுகள் தொழில்மயமாக்கத்தால் நோய்களை உருவாக்கினவோ, அதே நாடுகள்தான் ஆங்கில மருத்துவக் கொள்ளையிலும் தலைமைப்பாத்திரம் வகிக்கின்றன.

மரபு வழிப்பட்ட தத்துவங்கள், கோட்பாடுகள் வாழ்க்கை முறை ஆகியவை அனைத்தும் மேற்கத்திய 'பகுத்தறிவுவாதம்' எனும் பெயரால் நிராகரிக்கப்படுவதன் பின்னணி இதுதான்.

இந்தியாவில் ஆங்கில மருத்துவத்தை வளர்த்தெடுக்க காலனிய நாடுகள் எண்ணற்ற சதி வேலைகளைச் செய்தன. தமிழரது மரபுவழி மருத்துவ முறைகளையும் வாழ்வியலையும் பிற்போக்குத்தனமானவை என்று இகழ்ந்துரைத்தது இச்சதிகளின் ஒரு பகுதியே ஆகும்.

இந்தியாவில் ஆங்கில மருத்துவம் நுழைந்து வளர்ந்த வரலாற்றை ஆராய்ந்து இக்கூற்றை விளங்கிக்கொள்ளலாம்.

**இந்தியாவில் ஆங்கில மருத்துவம்**

19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியாவில் ஆங்கில மருத்துவமுறையைத் திணிக்கத் தீர்மானித்தனர்.

முதற்கட்டமாக, மரபு வழிப்பட்ட மருத்துவர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு ஆங்கில மருத்துவ முறைகளைக் கற்று கொடுத்தனர். பயிற்சிக்குப்பிறகும் மரபுவழி மருத்துவர்களை ஆங்கில மருத்துவர்களாக அங்கீகரிக்கவில்லை. மாறாக, ஆங்கிலேய மருத்துவர்களின் உதவியாளர்களாக மட்டுமே நியமித்தனர்.

1824-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியாவின் முதல் ஆங்கில மருத்துவப்பள்ளி (Medical School) கொல்கத்தாவில் உள்ள **சமஸ்கிருதக் கல்லூரியில்** நிறுவப்பட்டது.

இம்மருத்துவப் பள்ளியில் பயின்றவர்களுக்கு மருத்துவர் என்ற பட்டமும் உயர் ஊதியமும் வழங்கப்பட்டது. மரபுவழி மருத்துவர்களை எடுபிடிகளாகப் பணியமர்த்திய நிலைக்கு முற்றிலும் வேறான நிலை இது.

இந்தியாவின் முதல் ஆங்கில மருத்துவப் பள்ளிக்கு இடமளித்ததோடு அதில் சேர்ந்து பட்டம் பெற்று ஆங்கில மருத்துவத்தை முழுமூச்சில் பரப்பியதிலும் பார்ப்பனர் உள்ளிட்ட ஆதிக்க சாதியினரே முன்னிலை வகித்தனர்.

ஆங்கிலேயருக்கும், ஆங்கில மருத்துவமுறையை வளர்த்து அதன்பலனாக பொருள் குவிக்க விரும்பிய பார்ப்பனர் உள்ளிட்ட ஆதிக்க சாதியினருக்கும் இந்தியாவில் நிலவிய மரபுவழி மருத்துவ முறைகள் இடையூறாக இருந்தன.

குறிப்பாக, முகலாயர்களின் ஆதரவால் வளர்ந்த யுனானி முறை மீது அவர்கள் வெறுப்பு கொண்டிருந்தனர். தமிழர்களின் சித்த மருத்துவம், இந்தியா முழுவதும் சிறந்த முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பார்ப்பனர்கள் ஆயுர்வேதத்தைக் கடைபிடித்துக் கொண்டிருந்தனர். இவை தவிர, எண்ணற்ற மரபுவழி மருத்துவ நடைமுறைகள் கிராமங்களில் நிலவின.

ஆங்கில மருத்துவத்தை வளர்க்க மேற்கண்ட மரபுவழி மருத்துவ

முறைகளை ஒழிப்பது ஆங்கிலேயருக்கும் பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினருக்கும் தேவையாக இருந்தது.

ஏற்கெனவே கொல்கத்தாவில் இயங்கிவந்த மருத்துவப் பள்ளியில், யுனானி ஆயுர்வேதம் ஆகிய முறைகளும் கற்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்புலத்தில், இந்தியாவின் ஆளுனரான வில்லியம் பென்டிங் 1833-ம் ஆண்டு 'இந்திய மருத்துவத்தை ஆராய்ந்து அதனை மேம்படுத்துவதற்கான' குழு ஒன்றை அமைத்தார்.

1834 அக்டோபர் 20 ஆம் நாள் இக்குழு தனது அறிக்கையை அளித்தது. உடனடியாக உள்நாட்டு மருத்துவப் பள்ளியை மூடிவிட்டு, ஆங்கில மருத்துவ முறையை மட்டும் கற்பிக்கும் கல்லூரி தொடங்கவேண்டும் என்பது அவ்வறிக்கையின் சாரம்.

மேலும் ஆங்கிலம் மட்டுமே பாடமொழியாக இருக்கவேண்டும் என்பதையும் அக்குழு வலியுறுத்தியது. இதன்படி, இந்தியாவின் முதல் முழுமையான ஆங்கில மருத்துவக்கல்லூரி மேற்கு வங்காளத்தில் அதே சமஸ்கிருதக் கல்லூரியில தொடங்கப்பட்டது.

உள்நாட்டு மருத்துவப் பள்ளியில் பேராசிரியராகப் பணிபுரிந்த பண்டித மதுசூதன்குப்தா எனும் ஆதிக்க சாதிக்காரரை ஆங்கிலேய அரசு சமஸ்கிருதக் கல்லூரியில் தொடங்கப் பட்ட புதிய ஆங்கில மருத்துவக் கல்லூரிக்குப் பணிமாற்றல் செய்தது.

ஆங்கிலேயர்களுடன் இந்திய ஆதிக்க சாதியினர் இணைந்து, ஆங்கில மருத்துவக் கல்லூரியை வளர்த்தெடுத்தனர்.

இந்தியாவின் முதல் ஆங்கில மருத்துவப் பெண் பட்டதாரி கதம்பினி கங்குலி, இவரும் ஆதிக்க சாதியினரே. இவர் பட்டம் பெற்ற ஆண்டு 1887.

"**ஆங்கில மருத்துவக் கல்லூரி மாணவிகளுக்கென தனிவிடுதி உருவாக்கப்பட்டது.**

**இவ்விடுதியில் தங்கிப் படித்தவர்களில் மிகப் பெரும் பான்மையினர் ஆங்கிலோ- இந்திய இனத்தவர், பிராமணர்கள், பார்சிகள் ஆவர்".(2)**

இவ்வாறு ஏகாதிபத்தியமும், உள்ளூர் வர்க்க சாதி ஆதிக்கமும் இந்தியாவில் ஆங்கில மருத்துவ முறையை வளர்த்தன.

ஆங்கில மருத்துவம் எப்போதுமே வெறும் மருத்துவமல்ல. அது, ஆதிக்க சக்திகளின் ஆயுதம். தொடக்கத்தில், காலனியம் பிறகு ஏகாதிபத்தியப் பெருமுதலாளியம், இன்று உலகமயம் என அதன் முகங்கள் மாறி வருகின்றன.குணம் ஒன்றுதான்.

தவிர, ஆங்கில மருத்துவம் இயற்கை அறிவியல்களுக்குப் புறம்பானது; மனித நேயத்திற்கு எதிரானது. எந்த நோயையும் குணப்படுத்தும் ஆற்றலற்றது ஒருவிதத்தில், எந்த நோயையும் தீர்ப்பது அதன் நோக்கமே அல்ல.

**(இக்கட்டுரைத் தொடர் விரைவில் நூலாக வெளி வரவுள்ளது.ஆகையால், தொடர் இத்துடன் முடிகிறது.)**


சான்றுகள்:

1. Preventive and Social Medicine -K.Park - பக்கம் (5) (M/s. BANARSIDAS BHANOT Publishers-19th edition)

2. History of Medicine with special Reference to India-Professors H.Roy (www. Surgical- pathology.com/ ebook1.htm)


## இந்திய-இலங்கை தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு மாநாடு

கடந்த 18.01.09 அன்று தஞ்சையில் உலகத்தமிழர் பேரமைப்புடன் இணைந்த இந்திய-இலங்கை தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு தொடக்கவிழா மாநாடு நடைபெற்றது.

காலை முதல் இரவு வரை நடைபெற்ற முழுநாள் மாநாட்டில் கலந்தாய்வரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர் இரா. இளங்குமரனார், முனைவர் அருகோ.பேரா.ப. கல்விமணி, முனைவர். பெ. இராமலிங்கம், பொறியாளர் இரா. பாலகங்காதரன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் கருத்துரை வழங்கினர்.

அதன்பின் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு.சி. சிங்காரவடிவேல் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கில் தோழர் கி. வெங்கட்ராமன், சி. மகேந்திரன், தியாகு, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், முனைவர் ம. நடராசன், குடந்தை அரசன், ஆலயமணி, அய்யனாபுரம் சி. முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் திரு.வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.





# இடதுசாரிகளின் அரசியல் இலக்கு எது?

▪ பெ.மணியரசன்

இந்திய இடதுசாரிகளுக்கென்று தனிச்சிறப்பான தத்துவம் இருக்கிறது. அது மார்க்சியம். ஆனால் அவர்களுக்கென்று தனிச்சிறப்பான அரசியல் இல்லை.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை இதுதான். அன்றிலிருந்து இன்றுவரை, ஒன்றாய் இருந்தபோதும் இரண்டாக, மூன்றாகப் பிரிந்துவிட்ட பின்னரும், இக்கட்சிகளுக்கென்று குறிப்பிடத்தக்க பொருளியல் கோரிக்கைகள் உண்டே தவிர, அரசியல் கோரிக்கைகள் தனிச்சிறப்பாக இல்லை.

அரசியல் இலக்குதான் பொருளியல் கோரிக்கைகளைத் தீர்மானிக்கவேண்டும். பொருளியல் கோரிக்கைகள் அரசியல் இலக்கைத் தீர்மானிக்கக் கூடாது. பொருளியல் கோரிக்கைகளுக்காகவும், உழைக்கும் மக்கள் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்தும் ஏராளமாக உயிர்த்தியாகம் செய்தவை இக்கட்சிகள். சிறை, தடியடி, துப்பாக்கிச் சூடு, தூக்குமேடை என இவர்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு நிகராக வேறு எந்த இயக்கமும் இந்தியாவில் ஈகம் செய்ததில்லை.

இப்படிப்பட்ட இயக்கங்கள் செயலலிதாவின் மற்றும் கருணாநிதியின் தலைமையின் கீழ் நான்காம் நிலைக் கூட்டாளிகளாகத் தாழ்ந்தது ஏன்? இது அரசியல் "முன்வினைப் பயன்"!

விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரசின் இளைய பங்காளியாகத் தன்னை சுருக்கிக்கொண்டு, காந்திக்கும், நேருக்கும் மதியுரை வழங்கி, கோரிக்கை எழுப்பிக் கொண்டிருந்தது. விடுதலைக்குப் பின் அதே பாணி தொடர்ந்தது. காங்கிரசின் "இடதுசாரித் தன்மையை" வரையறுப்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 1964-இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

காங்கிரசு எதிர்ப்பு நிலை கொண்ட மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சியும், காங்கிரசு ஆதரவு நிலை கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் காலப்போக்கில் கூட்டாகச் சேர்ந்து காங்கிரசுடன் கூட்டணி கண்டன. சோனியா காந்தியைப் பிரதமராக்க அரும்பாடுபட்டன. அவர் அயல் இனத்தார் என்ற தடையை பா.ச.க., போட்டபின், மன்மோகனைப் பிரதமராக்க இடதுசாரிகள் ஆதரவு தந்தனர். அமைச்சரவையில் சேராமல் வெளியில் இருந்துகொண்டு ஆதரித்தனர். அப்போது பா.ச.க.வின் வகுப்புவாத அபாயத்தை "முறியடிக்க" காங்கிரசை ஆதரிப்பதாகக் கூறினர்.

இப்போது காங்கிரசின் அமெரிக்க வல்லரசிய ஆதரவையும், பா.ச.க.வின் வகுப்புவாதத்தையும் ஒரே நேரத்தில் எதிர்க்கின்றன. இதற்காகத் தமிழ்நாட்டில் செயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்துள்ளன. உ.பி.யில் மாயாவதியுடன் கூட்டணி சேர ஆர்வப்பட்டன. மாயாவதி மறுத்துவிட்டார்.

கடந்த சூலை மாதம் மன்மோகன் கொணர்ந்த நம்பிக்கைத் தீர்மானத்தை எதிர்த்தபோது, மாயாவதியைப் பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்தனர் இடதுசாரிகள்.

2001 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் செயலலிதாவுடன் இடதுசாரிக் கட்சிகள் கூட்டணி சேர்ந்தன. உழைக்கும் மக்களுக்கு எதிராக வரலாறு காணாத ஒடுக்குமுறையை ஏவினார் செயலலிதா. போக்குவரத்துத் தொழிலாளர்கள் போனசு கோரியபோது, காவல்துறையை வைத்து ஒடுக்கினார். தொழிலாளர்களைச் சிறையிலடைத்தார். பெரும் எண்ணிக் கையில் வேலை நீக்கம் செய்தார்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்தபோது 1,71,000 பேரை வேலை நீக்கம் செய்தார். சாலைப்பணியாளர்கள் பணி நிரந்தரம் கோரி வேலை நிறுத்தம் செய்தபோது, அனைவரையும் கூண்டோடு வேலை நீக்கம் செய்தார்.

தமிழக அரசுப் பணிகளில் புதிதாக வேலைக்கு ஆள் சேர்க்கத் தடை ஆணை போட்டார். இவையெல்லாம், உழைக்கும் வர்க்கத்துக்கெதிராக செயலலிதா வெடித்த அடக்குமுறை வெடி குண்டுகளில் சில.

அவரின் கையூட்டு அரசியல், தன்னலத்திற்கு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது, பார்ப்பனியச்சார்பு ஆணைகள் போன்றவற்றை இடதுசாரிகள் கணக்கில் கொள்ளா விட்டாலும் உழைக்கும் மக்களுக்கெதிரான அவரது ஒடுக்குமுறையையாவது கவனத்தில் கொண்டு, அவருடன் கூட்டணியைத் தவிர்த்திருக்கலாம்.

செயலலிதாவுடன் கூட்டணி சேராமல் கருணாநிதி கூட்டணியில் இடதுசாரிகள் தொடர்ந்திருப்பி வேண்டும் என்பதல்ல நமது கருத்து. தனிச்சிறப்பான நிலை எடுத்திருக்க வேண்டும் என்பதே நமது கருத்து.

பா.ஜ.க.வின் இந்துத்துவா வகுப்புவாதத்தை எதிர்ப்பதாகக் கூறும் இடதுசாரிகள் அ.இ.அ.தி.மு.க.வுடன் எவ்வாறு கூட்டணி சேரலாம்? அ.இ.அ.தி.மு.க. தலைமை இந்துத்துவா வகுப்புவாதத் தலைமைதானே! பச்சைப் பார்ப்பன வகுப்புவாதிதானே செயலலிதா!

பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், பாபர் மசூதி இடிப்பை ஞாயப்படுத்திப்பேசினார் அப்போது முதல்வராக இருந்த செயலலிதா.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டவேண்டும் என்று பா.ச.க. கோரியது. அதே இடத்தில் கட்ட அனுமதிக்கக் கூடாது என்று எதிர்ப்புக் கிளம்பியது. அப்போது இராமர் கோயிலை அயோத்தியில் அதே இடத்தில் கட்டாமல் இத்தாலியிலா கட்ட முடியும் என்று காட்டமாகக் கேட்டார் செயலலிதா!

இரண்டாயிரம் அப்பாவி இஸ்லாமியர்கள் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமான குஜராத் முதல்வர் நரேந்திரமோடிதான் பா.ஜ.க.விலேயே செயலலிதாவுக்கு மிகவும் பிடித்த தலைவர். அப்படுகொலைக்குப் பிறகு நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற மோடியின் முடிசூட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அண்மையில் சென்னைவந்த நரேந்திர மோடியை வீட்டுக்கு வரவழைத்து 64 வகை பதார்த்தங்களுடன் விருந்து வைத்தார்.

பார்ப்பனிய வழிபாட்டு முறையே சரியானது என்று நிலை நாட்டுவதற்காகத் தமிழர்கள் தங்கள் கோயில்களில் ஆடு, கோழி வெட்டுவதைத் தடை செய்து ஆணையிட்டார். நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றவுடன் அவ்வாணையைத் திரும்பப்பெற்றார்.

ஒரிசாவில் இந்துத்துவா வன்முறையாளர்களால் கிறித்துவத் தேவாலயங்களும், மடங்களும் தாக்கப்பட்டன. கிறித்துவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கன்னிமகளிர் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான கிறித்தவர்கள் புலம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கினர். இந்த அட்டூழியங்களை செயலலிதா கண்டிக்கவில்லை. மாறாக அங்கு பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்த கிறித்தவர்களுக்குச் செய்த உதவிகளைப் பால், காசுமீரில் பாதிக்கப்பட்ட பார்ப்பனப் பண்டிட்டுகளுக்கு ஏன் இந்திய அரசு உதவவில்லை என்று கேட்டார்.

பா.ஜ.க.வின் அதே வகுப்புவாத வரையறுப்பில் நின்று, “இராமர் பாலத்தை இடித்து” சேதுக்கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று செயலலிதா தொடர்ந்து போராடுகிறார்.

திரைப்பட நடிகர் எஸ்.வி. சேகர் அ.இ.அ.தி.மு.க.வின் மயிலாப்பூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கிறார். அவர்க்குக் கட்சிக்குள் ஏதோ சிக்கல், செய்தியாளர்கள் அவரை “அ.இ.அ.தி.மு.க.விலிருந்து நீங்கள் நீக்கப்பட்டால் வேறு கட்சிக்குப் போவீர்களா” என்று கேட்டார்கள். அதற்கு அவர், காஞ்சிப் பெரியவர் சொல்லித்தான் அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தேன். என்னை நீக்கினால், அடுத்து என்ன செய்வது என்று காஞ்சிக்குச் சென்று பெரியவரிடம் அறிவுரை கேட்பேன்” என்றார்.

தமிழ்நாட்டில் உள்ள ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் அவற்றின் ஆதரவாளர்களும் அ.இ.அ.தி.மு.க. வைத்தான் ஆதரிக்கின்றனர். ஜெயேந்திர சரசுவதியை செயலலிதா தளைப்படுத்தி சிறையிலடைத்ததை, குருதி உறவுகளுக்குள் நடந்த குடும்பச் சண்டையாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளர முடியாத நிலையில் அ.இ.அ.தி.மு.க.வை வலுப்படுத்தவேண்டும் என்றே இந்துத்துவா பரிவாரங்கள் உத்தி வகுத்துள்ளன.

பா.ச.க.வின் வகுப்புவாதத்தை வீழ்த்தப் பாசறை அமைப்பதாகப் பறைசாற்றிக்கொண்டு, இடது சாரிகள் பார்ப்பனிய செயலலிதாவுடன் கூட்டணி சேர்வது, நல்ல பாம்பை அடிக்க விரியன் பாம்பைத் தடியாகப் பயன்படுத்துவது போல்தான்.

இறுதி அரசியல் இலக்கு எதுவும் இடதுசாரிக் கட்சிகளுக்கு இல்லை. அவ்வப்போது எதிர்வகை அரசியல் இலக்கைத் தீர்மானித்துக் கொள்கிறார்கள். நேர்வகை அரசியல் இலக்கை இவர்கள் தீர்மானிப்பதில்லை.

அமெரிக்காவுடன் அணு ஒப்பந்தம் போட்ட காங்கிரசை வீழ்த்துவது அல்லது வகுப்புவாத பா.ச.க.வை வீழ்த்துவது அல்லது மேற்படி இரட்டை அபாயங்களை (Twin Dangers) எதிர்ப்பது என்று எதிர்வகை அரசியல் இலக்குகளைத்தான்

முதன்மையாகத் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

அமெரிக்காவுடன் ஆன அணு ஒப்பந்தத்தை எதிர்ப்பது, வகுப்புவாதத்தை எதிர்ப்பது போன்றவை அன்றாட அரசியல் சிக்கல்களாகும். இவை அடிப்படை அரசியல் இலக்கு ஆகா.

ஒன்றைக் கவனிக்க வேண்டும், அவர்களுக்கென்று தனிச்சிறப்பான-சொந்தமான-அரசியல் இலக்கு இல்லையே தவிர, அவர்கள் அரசியல் இலக்கே இல்லாதவர்கள் இல்லை. அவலம் என்னவென்றால், அவர்கள் யாரைத் தங்கள் வர்க்க எதிரிகள் என்று வரையறுத்துள்ளார்களோ, அவர்களின் அரசியல் இலக்கைத்தான் தங்கள் இலக்காக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த அரசியல் இலக்கு இந்திய ஒருமைப்பாடு!

காஷ்மீர்ச் சிக்கல், வடகிழக்கு இந்திய தேசிய இனங்களின் விடுதலைக் கோரிக்கை, தமிழ்த்தேசக் குடியரசுக் கோரிக்கை என தேசிய இனச் சிக்கல்கள் அனைத்திலும் காங்கிரஸ், பா.ச.க. கட்சிகள் போன்றே இடதுசாரிக்கட்சிகள் இந்திய தேசிய வெறிக் கொள்கையைக் கடைபிடிக்கின்றன. மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தேசிய இனத் தன்னுரிமையை ஆதரிப்பதற்கு மாறாக இக்கட்சிகள் அக்கோட்பாட்டை எதிர்க்கின்றன.

"இந்திய தேசியம்'' என்ற கருத்தியலின் அடித்தளம் இந்து மதம் தான். இந்து மதத்தின் சாரம் பார்ப்பனியம் தான். எனவே வகுப்புவாதத்தின் ஊற்றுக்கண்ணே இந்திய தேசியம் தான். இந்து மத அடிப்படையில்தான், பண்பாட்டு இந்திய தேசியம் பேசுகிறது பா.ச.க.

இந்து வகுப்புவாதத்தின் சாரம் பார்ப்பனியம். ஆனால் இடதுசாரிகள் தங்கள் கட்சித்திட்டத்தில் பார்ப்பனியத்தின் பாத்திரம் பற்றி எதுவும் கூறவில்லை. பார்ப்பனியத்தை அடையாளம் காட்டாமல் இந்து வகுப்புவாதத்தை எதிர்ப்பது, ஆமையைப் புரட்டிப் போடாமல் அதன் ஓட்டின் மேல் அடிப்பது போன்றது தான்.

இடதுசாரிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மேம்போக்கானது. ஏகாதிபத்தியம் தேசிய இனங்களின் தாயகங்களைச் சின்னாபின்னப்படுத்தி, தனது சுரண்டலுக்கேற்ற நிர்வாக அமைப்பாக இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே நாடாக்கியது. ஏகாதிபத்தியம் உருவாக்கிய இந்திய வடிவத்தை ஏற்றுக்கொள்வது முதலில் சனநாயக விரோதச் செயல். இன்று, உலகமயம் தேசங்களின் எல்லைகளை மறுக்கிறது. தேசிய இனங்களின் விடுதலைப்போரை பெரும்பாலும் எதிர்க்கிறது. உலகமயத்தை எதிர்ப்பவர்கள் தேசிய இனத்தன்னுரிமையை ஆதரித்தாக வேண்டும்.

தேசிய இனங்களின் தன்னுரிமையை ஆதரிக்காத ஒருவர் கம்யூனிஸ்ட்டாக இருக்க முடியாது என்பது மட்டுமல்ல. அவர் சனநாயக வாதியாகவும் இருக்கமுடியாது என்றார் லெனின்.

ஜார் மன்னன் உருவாக்கிய ஏகாதிபத்திய வடிவிலான ரசிய நாட்டை ஒரு தேசமாக லெனின் ஏற்கவில்லை. ஜாரின் ரசியாவில் சிக்குண்டு கிடந்த தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையைப் புரட்சிக்கு முன்னரே லெனின் ஆதரித்தார். புரட்சிக்குப்பின்னும் ஆதரித்தார். புரட்சிக்குப் பின் பின்லாந்து பிரிந்து போக விரும்பிய போது அதை அனுமதித்தார்.

புரட்சிக்குப்பின் நாட்டின் பெயரே மாற்றப்பட்டது. சோவியத் நிகரமைக் குடியரசுகளின் ஒன்றியம் என்று பெயர் சூட்டப்பட்டது. ரசியா என்பது 15 குடியரசுகளில் ஒன்றாக ஆக்கப்பட்டது.

எனவே, ஏகாதிபத்திய அரசு, தேச அலகுக்கு முரணாக வடிவமைத்த நாட்டு வரையறுப்பை, பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டால், ஏகாதிபத்திய நோக்கத்தை இவர்களும் நிறைவேற்றுவதாகத் தான் பொருள்.

இந்தியப் பெரு முதலாளிகள், பார்ப்பனிய, இந்தி ஆதிக்க சக்திகள் ஆகியோர் ஏகாதிபத்தியம் உருவாக்கிய இந்திய நாட்டு வடிவமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஏகாதிபத்தியத்தின் நோக்கமும் இந்திய ஆளும் வர்க்கத்தின் நோக்கமும் ஒன்றாக இருக்கிறது. ஏகாதிபத்தியத்துடன் இளைய பங்காளிகளாகக் கூட்டுச் சேர்ந்து கொண்டு, இந்தியத் துணைக்கண்டத்தைச் சுரண்ட வேண்டும், ஆதிக்கம் செய்யவேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம். பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்த நோக்கத்திற்கு நேர் எதிரான அரசியல் இலக்கைக் கொள்ளவேண்டும்.

அதற்கு மாறாக, இந்திய ஆளும் வர்க்கத்தின், இந்தியத் துணைக் கண்டப் பேராசையை இடதுசாரிக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டன. இந்தியத் துணைக்கண்டத்தை ஒரு நாடாக்கியது ஏகாதிபத்தியம். அதை ஒரு தேசமாகக் கற்பித்தது இந்திய முதலாளியம் மற்றும் பார்ப்பனியம்!

ஏகாதிபத்தியம்-இந்திய முதலாளியம்-இந்தியப் பார்ப்பனியம்- ஆகிய மூன்றின் கருத்தியல் விலங்குகளால் தங்கள் மூளைகளைப் பிணைத்துக் கொண்டவர்கள் தாம் இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளின் தலைவர்கள்.

நக்சல்பாரி எழுச்சியை யொட்டி பிரிந்து தனி அமைப்பு கண்டவர்கள் கூட அனைத்திந்தியப் புரட்சியே பேசினர். பல தியாகங்களை அவர்கள் செய்திருந்தாலும் அரசுக் கட்டமைப்பில் பார்ப்பனர்களும், பார்ப்பனியமும் ஆளும் சக்தியாக இருப்பதைத் தெளிவுபட அவர்களும் வரையறுத்துக் கூறவில்லை.

சமூக இயங்கியலுக்கு முரணான இந்தியத் தேசியத்திற்குள் முடங்கிப் போனதாலும், இவர்களுள் போராடி சோர்வுற்ற பிரிவினர் தேர்தல் சந்தர்ப்பவாதத்தில் சரிந்தனர். வேறு சிலர் புரட்சியே வாய்ச் சொல் வீரர்களாக சீரழிந்தனர். இன்னும் போராடிக் கொண்டிருக்கிற பிரிவினரும் இந்தியத் தேசிய மாயையிலிருந்து விடபட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றனர்.

இந்தியாவை ஒருதேசம் என்பது எந்த சமூக அறிவியலுக்குப் பொருந்தும்? இந்திய அரசமைப்புச் சட்டம் கூட இந்தியாவை ஒரு தேசம் என்று குறிப்பிடவில்லை. இந்தியாவை அரசுகளின் ஒன்றியம் என்றே கூறுகிறது. (India that is Bharat Shall be a Union of States)

''இந்தியன்'' என்ற தேசிய இனம் இருப்பதாகவும் அச்சட்டம் குறிப்பிடவில்லை. இந்தியாவின் குடிமகன் / குடிமகள் (Citizen of India) பற்றி மட்டுமே பேசுகிறது.

ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தியாவை "தேசம்" என்றே குறிப்பிடுகின்றன. "இந்தியன்" என்று ஒரு தேசிய இனம் இருப்பதாகவே குறிப்பிடுகின்றன. இதற்குப் பெயர் மார்க்சிய-லெனியம் அல்ல; முதலாளிய-பார்ப்பனியம்!

வர்ண-சாதிப் பிளவு, வைதிக மதத்தின் அதாவது இந்து மதத்தின் தனித்தன்மை. வர்ண-சாதி சமூகப் பிரிவுகள் உற்பத்தியுடன் தொடர்புடையவை. அதாவது உற்பத்தி உறவுடன் தொடர்புள்ளவை. வர்க்கத்தை உள்ளடக்கமாகக் கொண்டவையே வர்ணமும் சாதியும். இவற்றுள் முதற்பெரும் ஆதிக்க வர்ணமாக அதே வேளை சாதியாக விளங்குவோரே பார்ப்பனர்கள்! வைதிக மதத்தின் தத்துவப் பிரிவினரும் அவர்களே!

இவ்வாறான மார்க்சிய லெனினிய வழிப்பட்ட பகுப்பாய்வை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தங்களின் அதிகாரப் பூர்வ வரையறுப்பாக ஏற்க மறுக்கின்றன. இப்பகுப்பாய்வு அடிப்படையில் அவர்கள் தங்கள் கட்சித் திட்டங்களை உருவாக்கவில்லை. முதலாளிய-பார்ப்பனிய அறிவாளிகளின் சிந்தனையைத் தாண்டி அக்கட்சிகளின் திட்டங்கள் எந்த உண்மையையும் பேசிடவில்லை.

தேசம் பற்றிய வரையறுப்பில் ஏகாதிபத்திய-இந்திய ஆளும் வர்க்கங்களின் வடிவமைப்பை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். வர்ண-சாதி பற்றிய பகுப்பாய்வு அவர்கள் கட்சித் திட்டத்தில் இல்லை. அவற்றுள் அடங்கியுள்ள வர்க்கத்தன்மையையும், பார்ப்பனிய மேலாதிக்கத்தையும் ஏற்க மறுக்கிறார்கள். இவ்வாறாக மக்களின் பகைவர்களோடு உடன்பட்டுக்கொண்டே புரட்சி பற்றியும் பேசினால், கிளிப்பிள்ளை பேசக் கற்றுக்கொண்டது போல் தான் இருக்கும்.

ஒரு நிகழ்வு பற்றிப் புரிந்து கொள்ள, விளைவுகளை (Results) மட்டும் பார்த்தால் போதாது, அவற்றிற்கான காரணங்களையும் (Causes) கண்டறிய வேண்டும் என்கிறது மார்க்சியம். ஆனால் இந்திய இடதுசாரிகள், காரணங்களைக் கண்டறிய மறுக்கிறார்கள். விளைவுகளோடு அரை குறையாகப் போராடுகிறார்கள்.

தேசிய இனச்சிக்கலில் வரலாற்றின் வற்புறுத்தலுக்குப் பணிந்து சில உண்மைகளை அரை குறையாக ஏற்பவையாகவே இடதுசாரிக் கட்சிகள் இருக்கின்றன. பார்ப்பனியம் குறித்து இக்கட்சிகளின் அறிவாளர்கள் சிலர் பேசுகின்றனர். ஆனால் அதிகாரப்பூர்வ ஆவணங்களில் பார்ப்பனியம்-ஒரு பகைத் தத்துவமாகக் காட்டப்படவில்லை.

இவ்வாறான முதலாளிய பார்ப்பனியப் பார்வைதான் ஈழ விடுதலைப் போரை ஏற்கவிடாமல் இடதுசாரிகளைத் தடுக்கிறது. "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு:" என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை ஓத வைத்திருக்கிறது.

பொருளியல் கொள்கையில் இடதுசாரிகளுக்குத் தனித்த பார்வை இருந்தது. அதுவும் மேற்கு வங்கத்தில் சிங்கூரிலும், நந்தி கிராமத்திலும் முதலாளிகளுக்கு ஆதரவாக வெடித்த மார்க்சிஸ்ட் ஆட்சியின் துப்பாக்கிக் குண்டுகளால் உடைத்து நொறுக்கப்பட்டு விட்டது.

மேற்கு வங்க சனநாயக வாலிபர் சங்கத்தின் 15-வது மாநில மாநாட்டில் பேசிய பிமான் போஸ், வாலிபர் சங்க உறுப்பினர் எண்ணிக்கை 2007-ல் இருந்ததைவிட 2008-ல் மிகவும் குறைந்துவிட்டது என்றார். 2007-ல் 97,84,000 உறுப்பினர்கள் இருந்ததாகவும் 2008-ல் அது 71,38,000 உறுப்பினர்களாகக் குறைந்து விட்டதாகவும் கூறி வருத்தப்பட்டுள்ளார். (தி இந்து 21.12.2008) அதாவது ஓர் ஆண்டுக்குள் 26,46,000 உறுப்பினர்கள் குறைந்துள்ளனர். எதிர்க்கட்சிகளின் தவறான வழிகாட்டுதலால்தான் இவ்வளவு பேர் அமைப்பைவிட்டுப் போய்விட்டார்கள் என்கிறார் போஸ். இப்பொழுது கூட, அக்கட்சி தனது தவறான பொருளியல் கொள்கையைக் கைவிட அணியமாகவில்லை.

மேற்கு வங்கத்திலேயே இவ்வளவு வேகமாக இடதுசாரிகளுக்குச் சரிவு ஏற்படுகிறது என்றால் தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் கேட்கவே வேண்டாம். அக்கட்சிகளின் அனைத்திந்தியச் செயலாளர்கள் செயலலிதா வீட்டிற்கும், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் விசயகாந்த் வீட்டிற்கும் வழி தேடிச் செல்வதில் இருந்தே அவர்களின் அரசியல் இலக்கை அடையாளம் கண்டு கொள்ளலாம். ■

## இந்திய அரசே போரை நிறுத்து

ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான போரை உடனடியாக நிறுத்தக்கோரி தஞ்சை வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் பட்டினிப்போராட்டம் தஞ்சை பனகல் கட்டிடம் முன்பு 23.01.09 அன்று நடைபெற்றது.

திரு. சுந்தரமூர்த்தி, (தலைவர், தஞ்சை வழக்கறிஞர்கள் சங்கம்) தலைமையில் நடைபெற்ற பட்டினிப்போராட்டத்திற்கு மூத்த வழக்கறிஞர் தஞ்சை அ. இராமமூர்த்தி, திரு. நல்லதுரை (செயலாளர், தஞ்சை வழக்கறிஞர்கள் சங்கம்) முன்னிலை வகித்தனர்.

தோழர் பெ. மணியரசன் பட்டினிப்போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார்.



# சிங்களத்தின் ‘இறுதிப்போர்’

▪ ம. செந்தமிழன்

இணைய தளத்தில் களச் செய்திகளைத் தேடுதல், ஓயாமல் தொலைபேசி வழி பல பேரைத் தொடர்பு கொண்டு களத்தில் நடப்பது என்ன என விவரித்தல், கிடைக்கும் தகவல்களைக் குறுஞ்செய்தி யாக்கிப்பரப்புதல்,- வெற்றிச் செய்திகளை உறுதிப்படுத்த முடியாத தவிப்பு, பின்னடைவுச் செய்திகளை உறுதிப்படுத்த விரும்பாத தவிர்ப்பு என நகர்ந்து கொண்டிருக்கின்றன நாட்கள்.

தமிழீழத்தில் நடக்கும் இன விடுதலைப்போராட்டம் தமிழகத் தமிழர்களின் தாயக விடுதலைப்போராட்டம் போன்ற மனவுணர்வை எழுப்பியுள்ளது. இது முன்னெப்போதைக் காட்டிலும் கடந்த இரு மாதங்களாக அதிகரித்துக் கொண்டே வருகிறது.

‘கிளிநொச்சியிலிருந்து புலிகள் பின்வாங்கினர் ’ என்ற செய்தியால் உலகம் முழுவதுமுள்ள தமிழர்களின் குடும்பங்களில் துக்கம் நிகழ்ந்ததைப்போன்ற இறுக்கமும், கலக்கமும் நிலவியதை நாம் அறிவோம். நம்மில் பலரும் அந்த இறுக்கத்திற்கு உள்ளானவர்கள்தாம்.

கிளிநொச்சிக்குப்பிறகும், ஆனையிறவு, பரந்தன், பூநகரி என சிங்கள ராணுவ ஆக்கிரமிப்பின் எல்லை விரிந்தது. முல்லைத்தீவு முற்றுகையிடப்பட்டுள்ளது.

’புலிகளை 400 சதுர கிலோமீட்டர் பரப்புக்குள் முடக்கி விட்டோம்.

‘பிரபாகரன் மலேசியாவுக்குள் நுழைந்துவிட்டார்’

‘இல்லை அவர் வன்னிக் காட்டில் பதுங்கியிருக்கிறார் என்பவை உள்ளிட்ட எண்ணற்ற கனவுப் பிதற்றல்கள் நமக்கு ‘செய்திகள்’ என்ற பெயரில் வந்துகொண்டிருந்தன.

இந்திய குறிப்பாகத் தமிழக ஊடகங்கள் இவ்வித வதந்திகளைப் பரப்பி வருகின்றன. இவ்வாறான, உறுதிப்படுத்தாத தகவல்களை வெளியிடுவது ஊடக அறத்திற்கும், ஒழுக்கத்திற்கும் எதிரானது. இந்திய-சிங்கள கூட்டுச்சதியை செயல்படுத்தும் படிநிலையில் ஊடகங்களின் பங்களிப்பு குறைவில்லாமல் தொடர்கிறது.

இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரம் வரை (சனவரி29, 2009, பிற்பகல் 3.00 மணி) கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் தமிழீழக் களம் மற்றும் மக்கள் நிலை என்ன என்பதை எனது புரிதலுக்குப்பட்ட அளவில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**போர் எனும் கலை**

சமர்க்களங்கள் வெறும் ஆள், ஆயுத பலங்களுக்கிடையிலான மோதல் நிகழும் இடங்கள்அல்ல. அவை கொலைக் களங்களும் அல்ல. அடிப்படையில் சமர்க்களம் என்பது, இரு அணிகளின் தந்திர நடவடிக்கைகளின் திறனை சோதிக்கும் இடம். ஆயுதமும் ஆள்பலமும் குறைவாக இருந்தாலும் அறிவுக்கூர்மையும் தந்திரத்திறனும் நிறைந்த தலைமை எதிரிகளை இறுதியில் வீழ்த்தும்.

போர் புரிதல் ஒரு கலையின் வடிவமாகவும் நிலவுகிறது.

உலகின் சமர்க்களத் தந்திரங்களில் முகாமையானதாகக் கருதப்படுவது பண்டைய சீனாவின் ராணுவத் தலைவர் சன்சூ இயற்றிய போர்க்கலை (The Art of war) எனும் நூல்.

இந்நூலின் சமர்த்தந்திரங்கள் சிலவற்றை, சமீபத்திய தமிழீழக் கள நிலைகளோடு பொருத்திப் பார்க்கலாம்.அந்நூலிலிருந்து.

“**திறமைசாலிகள் என்பவர்கள் ஒவ்வொரு களத்திலும் வெற்றி பெறுபவர்கள் அல்லர். மோதாமலேயே எதிரிகளை நிலைகுலைய வைப்பவர்கள்**”.

“**வெல்லப்பட முடியாத திறமைசாலிகள் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் உத்தியைக் கையாளுவார்கள். பலவீனமா**

**னவர்களோ வலிந்து தாக்குவார்கள். தற்காப்பில் வல்லவர்கள் கிடைப்பது அரிது. தாக்கும் திறமை கொண்டவர்களோ விண்ணுக்கும் மண்ணுக்கும் எகிறிக் குதிப்பார்கள். தற்காப்புப் போர் செய்பவர்கள்முழு வெற்றி அடைவார்கள்".**

கடந்த ஓராண்டு காலமாகவே சிங்கள ராணுவத்தின் வலிந்த தாக்குதல்களைப் புலிகள் தற்காப்புச் சமர் மட்டுமே புரிந்து சமாளித்தனர். மூன்று நாட்களில் கிளிநொச்சியைப் பிடித்துவிடுவோம் என்று அறிவித்து, பெரும் படைத்திரளை அனுப்பிவைத்த சிங்கள அரசு, ஓர் ஆண்டுகாலம் இடைவிடாது தாக்குதல்களைத் தொடுத்து வந்தது. இந்தக் காலத்தில் புலிகளின் தற்காப்புச் சமரில் சிங்கள ராணுவத்தினர் 7000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 3000 பேர் படுகாயமடைந்தனர். பல்லாயிரம் பேர் படையிலிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

இதே காலத்தில், புலிகள் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. கொழும்பு கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதும், அனுராதபுரம் ராணுவ முகாம் மீதும் புலிகளின் வான்படை குண்டு மழை பொழிந்தது. அனுராதபுரம் தாக்குதல், புலிகளின் வான்வழி மற்றும் தரைவழிப்படைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கையாகும். இது உலகின் எந்த விடுதலைப் போராட்ட இயக்கமும் கற்பனை செய்தும் பார்த்திட முடியாத நடவடிக்கை.

ஒருபுறம், எதிரிப்படையின் வலிந்த தாக்குதலை, தற்காப்புச் சமரால் முறியடித்து, எதிரணிக்குத் தொடர் தோல்விகளைக்கொடுப்பது, மறுபுறம், வான்வழி மற்றும் தரைவழியாக எதிரியின் வலுவான நிலைகளைத் தாக்கி அழிப்பது என்ற அதி உயர் தந்திரங்களை மேற்கண்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விரு முறைகளிலும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று-இரு முறைகளிலும் சிங்கள ராணுவத்திற்குத்தான் சேதம் அதிகம்.

கிளிநொச்சியிலிருந்து புலிகள் பின் வாங்கியபோது, ராணுவவியலாளர்களை வியக்கச் செய்த செய்தி மூன்று லட்சம் பொதுமக்களும் புலிகள் பின்னே அணிவகுத்துச் சென்றதுதான்.

கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களைப் பிடித்து சிங்கள அரசுக்குக்கிடைத்த வெற்றி என்று கருத இயலாது. இதற்கான காரணங்களைக் காண்போம்.

1. ராணுவம் பிடித்த அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் புலிகளுடன் வெளியேறிவிட்டனர்.

- இதன் வழியே சிங்கள அரசுக்கும் உலக சமூகத்துக்கும் அம்மக்கள் பின்வரும் செய்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.'தமிழீழ மக்களின் ஒரே பாதுகாவல் விடுதலைப் புலிகள் இயக்கம்தான், சிங்கள அரசின் கீழ் தமிழீழ மக்களால் வாழவே முடியாது.

அரசியல் ராணுவ தந்திரத்தால் இச்செய்தி சிங்கள அரசுக்குக் கடும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. முதன் முறையாக, ஜெர்மன் அரசு சிங்கள அரசை வெளிப்படையாகக் கண்டித்து. போர் நிறுத்தத்தை வலியுறுத்தியுள்ளது. இதே ஜெர்மன் அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2.ஆளில்லா, ஊர்களைப் பிடித்துக் கொண்டு, ராணுவ முகாம்கள் மட்டுமே அமைக்க முடியும். நிர்வாகம் நடத்த முடியாது. புலிகள் பின்வாங்கிய கிளிநொச்சி உள்ளிட்ட அனைத்து ஊர்களிலும் ராணுவத்தினர் மட்டுமே நிறைந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருட்களை சிங்களப் பகுதிகளிலிருந்து மட்டுமே கொண்டு வரவேண்டும்.

இது இப்பகுதிகளில் உள்ள சிங்களப் படையினரின் மன உறுதியையும், உற்சாகத்தையும் குலைக்கும் சூழலாகும். பேய் நகரங்களைக் காவல் காப்பது போன்ற மனநிலையை அவர்களுக்கு இந்நிலை ஏற்படுத்தும்.

மேலும், இவர்களுக்கான வழங்கு வழிகள் (Supply routes) புலிகளால் தாக்கப்பட்டால், உணவுக்கும் வழியின்றி வாட நேரிடும் அபாயம் எந்நேரமும் உண்டு.

தமிழீழப் பரப்பின் கணிசமான பகுதிகள் இவ்வாறு ஆளற்றவை களாகிவிட்டபிறகு, இப்பகுதிகளில் அரசுத்தலைமையின் செயல்பாடு மிகவும் குறைந்து, ராணுவத்தலைமையின் செயல்பாடு மிகுந்துவரும். இது, சிங்கள இனத்துக்கும், அரசுக்குமே ஆப்பு வைக்கும் விளைவாக அமையும்.

அடிக்கடி போரில் ஈடுபடும் நாடுகளில், அரசுத்தலைமையை ராணுவத் தலைமை விஞ்சுவதும் ஒரு கட்டத்தில் அரசையே கவிழ்த்து ராணுவ ஆட்சி அமைப்பதும் உலக வரலாற்றில் பரவிக்கிடக்கும் முன் சான்றுகள். பாகிஸ்தானில் பர்வேஸ் முசரப் ராணுவத்தால் ஆட்சிக்கு வந்தது சமீப காலச் சான்று.

சிங்கள அரசிலும் இதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கியுள்ளன. பின்வரும் பத்திகள் **வசந்த ராஜா என்ற சிங்களக் கட்டுரையாளர்** எழுதிய விரிவான கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை.

'இலங்கையில் கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து வந்த அரசியல், பத்திரிக்கையாளர்கள் மீதான வேட்டைக்கும் தாக்குதலுக்கும் சிகரம் வைத்தாற்போல அமைந்திருக்கிறது பிரபல பத்திரிக்கையாளர் விக்கிரமதுங்காவின் படுகொலை. இவர் 'சண்டே லீடர்' என்கிற பத்திரிக்கையின் ஆசிரியர். ராஜபக்சே அரசை விமர்சித்தவர்களுள் முக்கியமானவர். ... **இதுபோன்ற தாக்குதல்கள், செல்வாக்கு மிகுந்த, போருக்கு எதிரான பத்திரிக்கையாளர்களின் படுகொலை களுக்கு எல்லாம் வலதுசாரி தேசிய வாத இயக்கங்கள் கூடத் தொடர்புடை யவைகளாக இருக்கலாம்.** இதுபோன்ற இயக்கங்கள் இப்போது சிங்கள-புத்த தீவிரவாதிகளிடையே அதிகம் தோன்றி வருகின்றன. ஆனால், கண்டிப்பாக இந்த இயக்கங்களுக்கு ராணுவ, அரசியல் மற்றும் நிழலுலகத் தொடர்பும் ஆதரவும் இருக்கிறது. அதில் சந்தேகமில்லை. அதிலும் குறிப்பாகப் பல வெற்றிகள்

பெற்று உற்சாகமாக இயங்கிவரும் ராணுவத்தைப் பார்க்கும்போது, போருக்கு எதிரான ஊடகங்கள் மீதான தாக்குதல் தனிப்பட்ட **அரசியல் தலைவர்களல்லாமல் இதுபோன்ற ரகசிய இயக்கங்கள் மூலமாகத்தான் நடத்திருக்கும்** என்பது என் கருத்து' (அழுத்தம் எனது) (www.lankaeye.com)

ஊடகவியலாளர்கள் மீது தொடர் தாக்குதல் நடப்பது இலங்கையில் அதிகரித்து வருகிறது. இதற்குப் பின்னால் ராஜபக்சே இருப்பதாக, ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் குற்றம் சாட்டின.

ராஜபக்சே இதற்கு இவ்வாறு பதிலுரைத்தார்.

**'இந்தப் படுகொலைகளுக்கு நான் காரணம் அல்ல. எனது அரசிலேயே இருக்கும் எனக்கு எதிரான சக்திகள் சில, இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அச் சக்திகள் உங்களுக்கு எப்படி எதிரானவைகயோ, அதேபோல் எனக்கும் எதிரானவையே'**

எதிர்க்கட்சித் தலைவர் ரனில் இப்படிக் கூறினார்:

**'ஊடகங்கள் மீதான தாக்குதலுக்கு அதிபர் ராஜபக்சே காரணம் என்று நான் நினைக்கவில்லை. அதிபருக்குக் கட்டுப்படாத ராணுவ அதிகாரிகள்தான் காரணம். இவர்களது வழிகாட்டலின்படி செயல்படும் ஒரு ஆயுதக்குழு தனித்து இயங்குகிறது. அக்குழுவே இதுபோன்ற படுகொலைகளுக்குக் காரணம்.**

மேற்கண்ட செய்திகள், சிங்கள அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் ராணுவ அதிகப்பிரசிங்கித்தனத்தை உறுதிப் படுத்துகின்றன.

ஆளில்லாத ஊர்களில் படையினரைக் குவிக்கும்போது. அவர்களுக்கான பொருள் செலவு, நெருக்கடிச் சமாளிப்பு , பராமரிப்பு உள்ளிட்ட எண்ணற்ற காரணிகள் அரசு நிர்வாகத்தைப் பின்னுக்கு இழுத்து, ராணுவ நிர்வாகத்தை முதன்மை யாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் , நீண்டகாலமாக படையினர் பெரும் எண்ணிக்கையில் தமிழீழப் பகுதிகளில் நிலை நிறுத்தப்பட்டால் அப்பகுதிகளில் ராணுவ ஆட்சிதான் நடக்கும் என்பது வெளிப்படையாகவே உணரக்கூடிய உண்மை.

3. சிங்கள ராணுவத்தின் பெரும் எண்ணிக்கையிலான படையினர் தமிழீழப் பகுதிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

**'இலங்கை ராணுவத்தில் மொத்தம் 13 பிரிவுகள் இவற்றில் 12 பிரிவுகள், மூன்று படைத் தலைமைகளின் கீழ் வடக்கிலும் கிழக்கிலும்தான் பரவியிருக்கிறது. ஒரே ஒரு பிரிவு மட்டும் கொழும்பில் இருக்கிறது; மொத்தத் தெற்குப்பகுதிக்கும் பாதுகாப்பாக! ஆக, கிட்டதட்ட 1லட்சம் படையினர் தமிழர் பகுதிகளில் குவிந்துள்ளனர். அதுவும் சிறுபடைக் குழுமங்களாக! காடுகளால் சூழப்பட்ட சின்ன கிராமங்களில் சிங்களர்களை அன்னியர்களாகவும், எதிரிகளாகவும் பார்க்கும் மக்களுக்கு மத்தியில் சிங்கள ராணுவ வீரர்கள்! (**மேற்கண்ட கட்டுரையில் வசந்தராஜா**)**

இவ்விதமாகப்படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளமை, ஒரு மாபெரும் அபாயத்திற்கான அடிப்படையாக அமைய வாய்ப்புள்ளது.

ஒரு லட்சம் படையினர் தினந்தோறும் போர்க்களத்தில் நிற்பதும், போரில் ஈடுபடுவதும் ஆகப்பெரும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தும். இதற்கு முந்தைய காலகட்டங்களில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் படையினர் போரில் ஈடுபடுத்தப்படவில்லை.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர், இன்னும் சில மாதங்களுக்கு நீண்டால் கூட, சிங்கள அரசு சரி செய்யவியலாத பொருளாதாரச் சரிவைச் சந்திக்கும். மேலும், தொடர்ந்து போரில் ஈடுபட்டு, கண்முன்னே உயிரிழப்புகளைக்கண்டு, எப்போது என்ன ஆகுமோ என்ற அச்சத்தில் இருக்கும் படையினரின் மன உறுதி மிகச்சில நாட்களுக்கே நீடிக்கும்.

புலிகள் வலிந்த தாக்குதல்களை இப்பொழுதுதான் தொடங்கியுள்ளனர். அவர்கள் தாக்கத் தொடங்கி, சிங்களப்படையின் உயிரிழப்புகள் அதிகமாகும் போது.படையினரின் கட்டுக்கோப்பு குலைந்து, சிதறி ஓடும் நிலை ஏற்படலாம்.

இச்சூழல் நேரிடும்போது, வேறொரு சிக்கலுக்குள் சிங்கள அரசு ஆட்படும் வாய்ப்புண்டு.பெரும் எண்ணிக்கையிலான படையினர் படையிலிருந்து விலகி ஓடும் போது, அதைத்தடுக்க அரசு முற்படும். விளைவாக, ராணுவத்திற்குள்ளும் அவ்வீரர்களின் குடும்பத்தினரால் நாட்டிலும் கலகங்கள் மூளும்.

இவைபோன்ற அபாயங்கள் சிங்கள இனவெறித் தலைமைக்குக் காத்திருக்கின்றன.

எனது மேற்கண்ட கணிப்புகளுக்கு ஆதாரமாக விளங்கும் சன் சூவின் சமர்க்கள அறிக்கைகளைக் காண்போம்.

**'களம் சாதகமாக இருந்து, நீங்களும் வெற்றிப்போக்கில் சென்றாலும் நெடுங்காலம் தொடரும் போர் உங்களை முனை மழுங்கச் செய்யும். ஒரு கோட்டையைப் பிடித்தவுடன் உங்கள் சக்தியெல்லாம் பாழாகியிருக்கும். உங்கள் படைகள் நெடுங்காலம் களத்தில் இருந்தால் அதற்கான தேவைகளைச் சமாளிக்க சிரமப்படுவீர்கள்.**

**'உங்கள் படைகள் சோர்ந்து போனால், உங்கள் திறமை மங்கிப்போனால், உங்கள் சக்தியை முற்றாக இழந்து விட்டால், உங்கள் உணவுப்பண்டங்கள் தீர்ந்துபோனால், உங்கள் இயலாமையைப் பயன் படுத்திப் பிறர் உங்களை வெல்வது எளிது. அந்த நிலையில் புத்திசாலியான ஆலோசகர்கள்**

**உங்கள் பக்கம் இருந்தாலும் நீங்கள் நிலைமையைச் சாதகமாக மாற்றிக் கொள்ள முடியாது".**

**'திறமையானதொரு படை நெடுங்காலம் போரிடாது. நெடுங்காலம் தொடரும் ராணுவ நடவடிக்கைகள் எந்த நாட்டுக்கும் நன்மை தராது'**

சன் சூ குறிப்பிட்டுள்ள இவ்விதிகள் சிங்கள ராணுவத்துக்கும் அதன் இன்றைய முன்னெடுப்புகளுக்கும் முற்றிலும் பொருந்துகின்றன.

இதேபோல, புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கையும் இத்தகைய சமர்க்களத் தந்திரங்களின் அடிப்படையில் மிகுந்த எச்சரிக்கையுடன் திட்டமிடப்பட்டவை என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

**கல்மடுக்குளமும் அதற்குப் பிந்தைய நிகழ்வுகளும்:**

கல்மடுக் குளத்தின் ஒரு பகுதியைத் தகர்த்து, அதன் வெள்ளப்பெருக்கில் ஏறத்தாழ 2000 சிங்களப் படையினரைக் கொன்றனர் புலிகள். இதன்பிறகு, அதே வெள்ளத்தின் மீது கடற்புலிகள் படகுகளில் வந்து தொடுத்த தாக்குதல்களில் மேலும் 3000 படையினர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின.

முல்லைத் தீவு நோக்கி முன்னேறிய படையினரைத் தடுக்கும் நோக்கில் புலிகள் இவ்வணைஉடைப்பை மேற்கொண்டதாகவும், இதையும் மீறி படையினர் முன்னேறியதாகவும் சிங்கள ராணுவ அமைச்சகம் தெரிவித்தது.

புலிகளின் நோக்கம் இது மட்டும்தான் என்று அது குறைத்து மதிப்பிட்டுள்ளது. கல்மடுத்தாக்குதல் வழியே புலிகள் பின்வரும் செய்திகளை உணர்த்தியுள்ளனர்.

1. தாக்குதல் நடந்தபோது, கல்மடுக்குளம் ராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி . இப்பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் முகாமிட்டிருந்தனர்.

இவ்வளவையும் மீறி அவர்கள் மேற்கொண்ட இத்தாக்குதல், படையினரின் எந்தப் பெரிய கட்டுப்பாட்டையும் மீறி புலிகளால் தாக்க முடியும் என்பதை உணர்த்துகிறது.

2. பெரும் எண்ணிக்கையிலான படையினரை ஒரே இடத்தில் குவிப்பது ராணுவத்துக்கு பலவீனமான விடயம்தான் என்பதை இத்தாக்குதலில் பலியான ஆயிரக் கணக்கான படையினரின் பிணங்கள் அறிவிக்கின்றன.

3. சிங்களப் படையினரின் எண்ணிக்கை, ஆயுத பலம் ஆகியவற்றை எதிர்க்கொள்ள ஆள்பலமும், ஆயுத பலமும் முதன்மைத் தேவைகள் இல்லை. மாறாக, சமர்க்களத் தந்திரங்களே முகாமையானவை என்பதைப் புலிகள் சொல்லாமல் சொல்லியிருக்கின்றனர்.

4. இத்தாக்குதல் நடைபெற்ற சனவரி 24-ஆம் நாள் மாலை, சிங்கள ராணுவ அமைச்சகம் 'இது இந்த ஆண்டின் மாபெரும் அவலம். சர்வதேச நாடுகள் உடனடியாக இதில் தலையிட வேண்டும்' என்று ஒப்பாரி வைத்தது. சிங்களத்தின் இறுமாப்பும், பலமும் வெறும் தோற்ற மயக்கமே. ஒரே நாளில் கூட அதன் கதை முடியும் வாய்ப்பு உண்டு என்பதை , மேற்கண்ட ஒப்பாரியைப் பார்த்தவர்கள்/படித்தவர்கள் உணர்ந்து கொண்டனர்.

கல்மடுவில் ஏற்பட்ட பேரிழப்பைச் சரிகட்டும் பணியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்தியப் கப்பற்படை இலங்கைக் கப்பற் படையோடு கலந்து நிற்கிறது. இந்திய மிக் விமானங்கள் முல்லைத் தீவுப்பகுதியில் குண்டு வீச்சில் ஈடுபட்டதாகவும் அவற்றில் இரண்டைப் புலிகள் வீழ்த்தி விட்டதாகவும் செய்திகள் வருகின்றன. மேலும், 3000 படையினரை இந்தியா முல்லைத் தீவுப் பகுதிக்கு அனுப்பியுள்ளதாகவும், இந்திய உளவுப்பிரிவினர் இப்படையினருடன் இணைந்து செயல்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

கல்மடுத் தாக்குதலுக்குப் பிறகு, தமிழீழ மக்களுக்கு எதிரான போரை சிங்கள அரசு நடத்தவில்லை. இந்தியாவே நடத்துகிறது! நமக்குக் கிடைத்து வரும் தகவல்கள் இதையே உறுதிசெய்கின்றன.

சிங்கள- இந்திய இனவெறிப்படையினர் தமது இறுதிக்கட்ட முயற்சியாக, முல்லைத் தீவுப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களை முடிந்தவரை கொன்று குவிப்பது என்ற முடிவுடன் செயல்படுவது தெரிகிறது.

1. இன அழிப்பு செய்து, தமிழரின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

2. சில லட்சம் பேரை அகதிகளாக வெளிநாடுகளுக்குத் துரத்தல்.
3. வாழ்வாதாரங்களை (விவசாயம், கல்வி, மீன்பிடி, மருத்துவம்) ஒழிப்பதன் வழி தமிழர்களை உள்நாட்டு அகதிகளாக மாற்றுதல்.

என்ற மூன்று நோக்கங்களும் சிங்கள இந்திய கூட்டுப்படையின் நடவடிக்கைகளிலிருந்து புலனாகின்றன.

புலிகள் இன்னும் முழு வீச்சில் எதிர்த்தாக்குதல்களைத் தொடங்காத நிலையில் அவர்களைத் தாக்கும்படித் தூண்டும் செயலாகவும் இப்படுகொலைகளைக் காண முடிகிறது.

முல்லைத் தீவைச் சுற்றிலும் சுமார் 50 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள இனவெறியர்களின் பேராசை, முல்லைத் தீவு காடுகளுக்குள்ளிருக்கும் புலிகளை வெளியே வரவழைத்து ஒருவர் கூட மிஞ்சாமல் அனைவரையும் கொன்று தீர்க்க வேண்டும் என்பது தான்.

சிங்களப்படை தாக்குதலும், இந்திய ஒத்துழைப்புகளும் இதையே உணர்த்துகின்றன.

இது உண்மையில் தமிழீழ விடுதலைக்கும், தமிழினப் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமான சூழலே. இதை மறுப்பதற்கில்லை.

விடுதலைப்புலிகளும், தமிழீழ

மக்களும் கடும் நெடுக்கடியில்தான் இருக்கின்றனர்.

ஆனால், சிங்கள இந்தியத் திட்டங்களின் எதிர்விளைவுகள் வேறுவிதமாகவும் இருக்கக்கூடும்.

மிகுந்த சமர்க்களத் தந்திரங்களும், ஈக உணர்வும், சமர்ப்பயிற்சியும் கொண்ட புலிகளின் தலைமை இந்த நெருக்கடியைச் சமாளித்து, பாரிய எதிர்த்தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கினால் , முல்லைத் தீவைச் சுற்றியுள்ள 50 ஆயிரம் படையினரும் என்ன ஆவார்கள் என்பது கேள்விக்குறியாகிறது.

மேலும், 'இதுவே இறுதிப்போர் என்கிறது சிங்களம். போரில் 95 விழுக்காடு முடிந்துவிட்டது என்கிறது சிங்கள ராணுவம்.

புலிகளின் பாரிய எதிர்த்தாக்குதல் எதுவும் நடக்காமலேயே இம்மாதிரி அவசர முடிவுகளுக்குச் சிங்களம் வந்துவிட்டது. உண்மையில், சிங்கள அரசு இப்போரை விரைந்து முடிக்க வேண்டிய அவரசத்தில் உள்ளது.

புலிகளின் பதிலடிகள் தொடங்கினால் , 95 விழுக்காடு முடிந்த போர் 100 விழுக்காடு நிறைவ டைந்துவிடும்!

■

# மொழிப்போர் நாள்

*1965 ஜனவரி 25-ல் தொடங்கிய மாபெரும் தமிழ்த் தேசிய எழுச்சியான இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் உயிரீந்த வீர மறவர்களை நினைவு கூர்தல் நாளாக ஜனவரி 25 கடைபிடிக்கப்படுகிறது. த.தே.பொ.க. சார்பில் பின்வருமாறு மொழிப்போர் நாள் கடைபிடிக்கப்பட்டது.*

**திருச்சி**

திருச்சி உய்யக்கொண்டான் ஆற்றுக் கரையில் உள்ள கீழப்பளூர் சின்னச்சாமி, விராலிமலை சண்முகம் ஆகியோர் நினைவிடங்களுக்கு திருச்சி தமிழ் அமைப்புகள் சார்பாக உழவர் சந்தையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டுச் சென்று மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இதில் தோழர் பெ. மணியரசன், வீ.ந. சோமசுந்தரம், முனைவர் க. நெடுஞ்செழியன், கவித்துவன், இராசாரகுநாதன், திருக்குறள் முருகானந்தம், ரெ.சு. மணி, பெரியார் தத்துவ மையம் சரவணன், வான்முகில், பேரா. கோச்சடை, வே.க. இலட்சுமணன் உள்ளிட்ட மொழி உணர்வாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

**தஞ்சை**

வல்லம் அண்ணாசீரணி அரங்கில் தோழர் பி.முருகையன் தலைமையில் நடைபெற்ற மொழிப்போர் நாள் கூட்டத்தில் தோழர்கள் நா.வைகறை, பழ. இராசேந்திரன், குழ. பால்ராசு, வே. தனசேகரன், க. காமராசு ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவில் தோழர் கி. வெங்கட்ராமன் சிறப்புரையாற்றினார்.

**சென்னை**

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் சார்பில் சென்னை மூலக்கொத்தளத்தில் உள்ள மொழிப்போர் ஈகியர் நடராசன் தாளமுத்து நினைவிடங்களில் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. முன்னதாக தங்கசாலை பேருந்துநிலையத்திலிருந்து முழக்கங்களுடன் ஊர்வலம் புறப்பட்டது. தோழர்கள் உதயன், பழ.நல். ஆறுமுகம், அருணபாரதி, வெற்றித்தமிழன், பாலா, தமிழ்க்கனல் (த.தே.பொ.க.), தோழர் தியாகு, சிவகாளிதாசன் (த.தே.வி.இ.), கவிபாஸ்கர், பரணிப்பாவலன் (த.க.இ.பே.), முழுநிலவன், கயல்விழி, க.பரிமேலழகர், திருமதி பரிமேலழகர் ஆகியோர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சிதம்பரம்**

*25.01.2009* மாலை 5 மணிக்கு சிதம்பரம் அண்ணாமலை நகரில் அமைந்துள்ள மொழிப்போர் ஈகி இராசேந்திரன் சிலைக்கு த.தே.பொ.க, தமிழக மாணவர் முன்னணி, அண்ணாமலை தமிழ் வளர்ச்சி மன்றத் தோழர்கள் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.




சென்னை




### தமிழ் இதழியலில் புதிய தொடக்கம்

புதிய தமிழர் கண்ணோட்டம் 2009 சனவரி இதழ் கண்டேன். இதழியல் துறையிலேயே புதிய கண்ணோட்டத்தின் தொடக்கமாக இருப்பதுணர்ந்து மகிழ்கிறேன். பாராட்டுகள்! குறிப்பாக இந்திய நீதித்துறையின் அம்பலமான ஊழல்களை பட்டியலிட்டு நீதிபதிகளை அமர்த்தவும் நீக்கவும் புதிய அமைப்பு முறை வேண்டுமென்பதை நிலைநிறுத்தும் கட்டுரை தமிழ் இதழியலில் புதிய தொடக்கம். கட்டுரையின் ஆழமும் துணிச்சலும் பாராட்டுக்குரியது.

10 ஆண்டுகளுக்கு முன் நீதிபதி வீ.இராமசாமி ஊழல் குற்றவாளி என குழு அறிக்கை அளித்தும், பாராளுமன்ற விவாதம் நடந்தும் பயனற்றுப் போன கதையையும் சுட்டியிருக்கலாம். தமிழினப் பகைவர்களான வடவரிடமிருந்து மீண்டெழ தமிழக உரிமைகளை மீட்டெடுக்க உணர்த்தும் பேட்டி பெ.ம.வின் பேட்டி ஊடகப்பார்வை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது மிகச்சிறப்பு. உலகமயமாக்கலின் விளைவு மூன்றரை லட்சம் இளைஞர்களை வேலையற்றோர் ஆக்கிய கொடுமையை நிறுவனங்களின் பெயருடன் தேதி வாரியாக பட்டியலிட்டதும் மக்களுக்கு போடப்பட்ட மாயத்திரையை விலக்கும். மனம் நிறைந்த பாராட்டுகள்!

- **தி.சோமசுந்தரத் தேவர், தஞ்சாவூர்.**

### பெரியாரின் புரட்சி

பட்டியூர்ப்பாவலரின் மாயாவதியின் மனுவாதம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கட்சியாக தன்னைக் காட்டிக் கொண்டு பெரியார் அம்பேத்கர் படங்களை பயன்படுத்தும் மாயாவதி பார்ப்பனியமயமானதை எடுத்துக்காட்டுகிறது.

பாவெளியில் கவிஞர் பூவை சாரதியின் 'அறம் வெல்லும்' கவிதையில் "தரிசாய் தேசம் மாறுவதற்குள் தமிழர் தேசம் புலராதோ" என்ற ஏக்க வரிகள் தமிழர்களின் தாக அடையாளமாய் உள்ளது. கவிபாஸ்கரின் 'ஈரோட்டு எழுச்சி' மீண்டும் தேவைப்படுகிற பெரியாரின் புரட்சி.

- **எழில், வடுவூர்.**

### அடையாளம் காட்டுகிறது

சனவரி-09 இதழில் "பெருநெருப்பிற்கு ஈரமில்லை" ஆசிரியவுரை தமிழர்கள் மீது அக்கறையில்லாது நடந்து கொள்ளும் மத்திய அரசை துணிந்து அடையாளம் காட்டுகிறது. ஆதிக்க ஆக்கிரமிப்பு யார் செய்தாலும் ஈராக்கில் புஷ்ஷுக்கு கிடைத்த மரியாதை தான் கிடைக்கும்.

மாயாவதியின் மாய அரசியல் ஆரிய மாயையாக இருக்குமோ என் அச்சம் ஏற்படுகிறது. தமிழ்த் தேசியம் மட்டுமே தமிழர்களின் பாதுகாப்பு அரணாக விளங்க முடியும். தமிழ்த்தேசியத்தின் தியாகச்சுடராய் கோவை சிறையில் ஒளிவீசிய பெ.ம.வுக்கு வாழ்த்துகளும் வணக்கங்களும்.

கவிஞர் பூவை சாரதி 'அறம் வெல்லும்' கவிதை யில் "அரசியல் நாடகம் நன்றாய் நடக்கும் அழுகை இன்னும் ஓயலையே" என்று கண்ணீரோடு எழுதிய வரிகள் தமிழரின் நெஞ்சத்தில் செந்நீராய் பெருக்கெடுத்து ஓடுகிறது.

- **இனிப்பரசு, மன்னார்குடி.**

### தமிழினம் வெல்லும்

2009 சனவரி புதிய தமிழர் கண்ணோட்டம் இதழில் அட்டைப் படத்தில் இனவுணர்வின் அழுத்தம் பீறிட்டு எழும் முகத்தோடு ஆசிரியர் பெ.ம., இயக்குநர் சீமான் ஆகியோரின் படம் அமைந்திருப்பது சிறப்பு. தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்படும் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்தால் அது தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டிய குற்றமா? என்றால் இல்லை, என்பதை சான்றாண்மை உடையோர் நன்றாக அறிவர். இருப்பினும் வ.உ.சி.க்கு பக்கத்தில் பெ.ம.வை வைத்த பெருமை இவர்களை தவிர வேறு யாருக்கு வரும்? தமிழர்கள் தேவையற்ற காரியங்களுக்கெல்லாம் ஒன்று கூடி போராடுகிறார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை மொழிக்காகவும் இனத்துக்காகவும் குரல் கொடுப்பதை ஆதரிக்க ஆர்வமில்லாமல் இருக்கிறார்கள். இக்குறை நீங்கினால் தான் தமிழினம் வெல்லும்.

- **பூவை சாரதி, வடுவூர்.**

### நீதிமன்றம் - நிதிமன்றம்

வடவர் நம்மவரும் இல்லை. நல்லவரும் இல்லை என்பதே உண்மை. காங்கிரசார் கோயில் மாடுகள் போல கொழுத்து அலைகின்றனர் என்பதும் தமிழினத்தை காட்டிக் கொடுப்பதே அதற்கு உதவுகிறது என்பதும் உண்மை. தனக்கு வேண்டியவர்க்கு ஒரு பொருள் தனக்கு வேண்டாதவர்களுக்கு ஒரு பொருள் கொள்வதில் திராவிடர்கள் பச்சோந்திகளே. ஈராக்கில்

செருப்பு வீசப்பட்டதை பாராட்டுவோம். "தமிழ் மக்கள் வாழ் குடிகளாக மட்டுமே நடத்தப்படுகிறார்களே தவிர குடிமக்களாக அல்ல" என்ற விளக்கம் சரியானது.

நீதிபதிகள் நியமனத்தில் புதிய அமைப்பு கட்டாயம் வேண்டும். நீதி மன்றங்கள் நிதி மன்றங்களாவதை தடுக்க வேண்டும்.

- **ஆ.சு.மணியன், திருத்துறைப்பூண்டி.**

**தமிழர் வீரம் தென்திசையில்**

சனவரி 2009 இதழ் படித்தேன். புலவர் முத்து எத்திராசன் அவர்களது மறைந்து போன மருங்கூர்ப்பட்டினம் கட்டுரை நமது பண்டைத் தமிழகத்தில் தமிழர்கள் எவ்வாறு கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர் என்பதை உணர்த்தியது. தமிழன் தாம் உலகிற்கு எல்லாம் வழங்கினான். வீரம், கொடை, வாணிபம், இலக்கியம், இலக்கணம், நாகரிகம், கட்டிடக்கலை, போர் முறை என அனைத்திலும் வெற்றிக் கொடி நாட்டினான். ஆனால் இடையிலே வந்த இனப்பகைவர் பிரித்தாளும் சூழ்ச்சியினை செய்து தமிழர்களிடையே ஒற்றுமையை சீர்குலைத்தனர். அதிலே அவர்கள் பலனடைந்தனர். தமிழினம் வீழ்ச்சியுற்றது. அனைத்தையும் அடையாளம் காட்டிய தமிழன் ஒரேயொரு அடையாளத்தை மட்டுமே சுமக்கிறான் அகதியாய்.

புதையுண்ட நகரத்தையும் தமிழர் நாகரிகத்தையும் அகழ்வு செய்து அறிந்து கொண்டு வருகிறோம். நல்லது. ஆனால் தமிழர் வீரத்தை நாம் இப்போது தென் திசையில் காண்கிறோம்.

- **கதிர்மதி, திருச்சி.**

**தமிழ்த் தேசியம் வெல்லும்**

சனவரி 2009 புதிய தமிழர் கண்ணோட்டம் இதழில் வெளிவந்துள்ள ஆசிரியவுரையை தமிழர்கள் அனைவரும் படிக்க வேண்டும். தோழர்கள் பெ.ம., சீமான், கொளத்தூர் மணி ஆகிய மூவரையும் கைது செய்து தமிழ்த் தேசிய எழுச்சியை முடக்கிவிடலாம் என்று ஆரியம் பகல் கனவுக் காண்கிறது.

தோழர் கி.வெ. அவர்களின் இறையாண்மை, குடிமக்கள், வாழ்குடிகள் என்ற கட்டுரை நம்முடைய தேசிய இனம் மறைக்கப்படுவதையும் இல்லாத இந்திய இறையாண்மை போலியாக சொல்லிக் கொண்டு தமிழினத்தை ஒடுக்குவதையும் தெளிவாக பதிவு செய்திருக்கின்றார்.

கவிபாஸ்கர் கவிதை சிறப்பு. 'பெரியார் மண்ணில் கிழித்த தீக்குச்சி' தமிழ்த் தேசியம் கிடைக்கும் வரை அணையாது என்பதை ஆரியம் புரிந்து கொள்ள வேண்டும்.

- **ம.வெ. அய்யனார், கொணமங்கலம்.**

**பொருத்தமான அட்டை படம்**

சனவரி இதழ் பெருநெருப்புக்கு ஈரமில்லை தலையங்கம் அருமை. புஷ்ஷுக்கு செருப்படி, பாதணியை ஏலம் எடுக்க போட்டி என்பதிலிருந்து மக்கள் விழிப்புணர்ச்சி பளிச்சிடுகிறது. ஓபாமாவின் செனட்டர் பதவியை ஏலம் விட்ட ஆளுநர் துண்டு செய்தியானாலும் அமெரிக்காவின் ஊழல்மயம் உலகமய நோயாக பற்றி படர்கிறது.

கி.வெ.யின் இறையாண்மை பற்றிய கட்டுரையில், இன வளர்ச்சி குறித்து சமூக அறிவியல் வெளிச்சத்தில் புதிய பரிமாணத்தை விளக்கியுள்ளார். சென்ற மாத செயராமன் கட்டுரையுடன் சேர்ந்து படிக்க வேண்டிய ஒன்று. நீதிபதிகளை அமர்த்த – நீக்க புதிய அமைப்பு முறை வேண்டும் என்கிற கி.வெ. கட்டுரை ஆய்வு செய்து அமல் படுத்த வேண்டிய ஒன்று. ஊடகப் பார்வையில் தமிழ்த் தேசியம் உற்சாக மூட்டுகிறது. பட்டியூர்ப்பாவலரின் மாயாவதியின் மனுவாதத்தில் பார்ப்பனர் தங்களின் மக்கள் தொகையை விட பல மடங்கு உயர் கல்வி இடங்களையும், வேலை வாய்ப்புகளையும் ஆக்கிரமித்துள்ள அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கினால் மற்றவர்களுக்கு உள்ள வாய்ப்புகள் பறிபோகும் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. மேலும் இட ஒதுக்கீடு என்பது மக்கள் பிரதிநிதித்துவ உரிமைக்கானதே. வறுமையைப் போக்க ஏற்படுத்தப்பட்டதன்று. கருத்துப்படம் (தட்டி) அருமை. பொருத்தமான அட்டைப்படம்.

- **மு.முருகவேல், சிதம்பரம்.**

## தாமதம்

ஈழத்தமிழர் தொடர்பான
போராட்டங்கள், இயக்கங்கள்
காரணமாக இவ்விதழ் தாமதமாக
வெளிவருகிறது.
வாசகர்கள் பொருத்தருள்க!

- **ஆசிரியர் குழு**



# பாட்டாளி மக்கள் கட்சியின் பத்துக் கட்டளைகள்

■ தமிழ்த்தேசியன்

“இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்” என்ற ஓர் அமைப்பு அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ஐயா பழ. நெடுமாறன் ஆகியோர் இக்கூட்டமைப்பை நிறுவியுள்ளனர்.

இந்த அமைப்பின் கூட்டம் 31.01.2009 அன்று சென்னை பிட்டி தியாகராயர் அரங்கில் நடந்துள்ளது. அதில் இலங்கையில் போர் நிறுத்தம் கோரி 04.02.2009 அன்று தமிழகம் தழுவிய பொது வேலை நிறுத்தம் செய்வதென்றும், 07.02.2009 அன்று கருப்புக்கொடி ஏந்தி தமிழகமெங்கும் பேரணி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கூட்டத்தில் தோழர் இரா. நல்லக்கண்ணு, தா. பாண்டியன் (இ.கம்.), திரு. வைகோ (ம.தி.மு.க.), மருத்துவர் இராமதாசு (பா.ம.க.), தோழர் தொல் திருமாவளவன்(வி.சி.க.), திருநாவுக்கரசர் (பா.ச.க.), திரு. பழநெடுமாறன் (உலகத் தமிழர் பேரமைப்பு), திரு. திண்டிவனம் இராமமூர்த்தி (தேசியவாத காங்கிரசு) உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். திரு. பழ. நெடுமாறன் அவர்கள் இந்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்.

அக்கூட்டத்தில் “இலங்கைத் தமிழர் பாதுகாப்பு” இயக்கத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளை மருத்துவர் இராமதாசு முன்மொழிந்துள்ளார். இது தமிழோசையில் (01.02.2009) “பாதுகாப்பு இயக்கத்தின் பத்து கட்டளைகள்” என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. ஆனால் மற்ற ஏடுகளில் பத்துக் கட்டளைகள் வரவில்லை. மட்டுமின்றி, இந்த பத்துக் கட்டளைகள் அக்கூட்டத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் தெரியவில்லை. அந்த பத்துக் கட்டளைகள் சுருக்கமாக:

1. எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் நோக்கம் இருக்கக்கூடாது.
2. தனிப்பட்ட கட்சி அல்லது தலைவரை இயக்க நடவடிக்கைகளில் முன்னிலைப்படுத்தக்கூடாது.
3. எந்த ஒரு தேசியக் கட்சியைப் பற்றியோ அல்லது மாநிலக்கட்சியைப் பற்றியோ விமர்சிக்கக் கூடாது.
4. இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான கோரிக்கைகளை இந்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் எடுத்துக் கூறலாம். அதில் கண்டனங்களோ, விமர்சனங்களோ கூடாது.
5. இலங்கை அரசும் இராசபட்சேயும் நடத்தும் தமிழ் இனப்படுகொலையை விமர்சிக்கலாம்.
6. போர் நிறுத்தக் கோரிக்கையை மட்டுமே இந்திய அரசிடம் வைக்கவேண்டும்.
7. இந்தக் கோரிக்கைக்கான விளம்பரங்களில், எவரையும் விமர்சிக்கும் சொற்கள் இடம் பெறக்கூடாது.
8. உருவ பொம்மை எரிப்பு, சிலைகள் அவமதிப்பு, கொடி எரிப்பு, ஊர்திகளுக்குச் சேதம் போன்றவை கூடாது.
9. விடுதலைப்புலிகள் இந்திய

அரசையும், இந்தியக் கட்சிகளையும் விமர்சிப்பதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

10. தனிப்பட்ட முறையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவோ அல்லது எதிர்ப்பாகவோ எந்த ஒரு நிலைபாட்டையும் இயக்கம் மேற்கொள்ளக்கூடாது.

மேற்கண்ட கட்டளைகள் மன்மோகன்-செயலலிதா-கருணாநிதி வகையறா விதித்துள்ள கட்டளைகள் போல் தோன்றும். ஈழத் தமிழர்களுக்காகத் தங்கள் வழியில் போராடிக் கொண்டிருக்கும் மருத்துவர் அறிவித்துள்ள கட்டளைகள்தாம் இவை.

ஈழத் தமிழர்க்காதரவாகத் தமிழர் ஒற்றுமை உருவாகவேண்டும் என்ற கருத்து பலருக்கும் உண்டு. இந்த பத்துக்கட்டளை அடிப்படையில் அந்த ஒற்றுமை உருவாகிறது என்றால் அது செயலலிதா தலைமையிலோ அல்லது ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தலைமையிலோ உருவாகும் ஒற்றுமை போல்தான் இருக்கும். செயலலிதாவும், இளங்கோவனும் விடுதலைப்புலிகளுக்கு மட்டும் எதிரானவர்கள் அல்லர், ஒட்டு மொத்தத் தமிழ் இனத்திற்கே எதிரானவர்கள்.

இவர்களைக் கூட விமர்சிக்கக் கூடாது என்கிறது பத்துக்கட்டளை. கடைசியில் தமிழர் ஒற்றுமை என்ற பெயரில், ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவர்களையும், சோனியா காந்தி நடத்தும் ஈழத்தமிழ் இன அழிப்புப் போரை எதிர்ப்பவர்களையும் தீவிரவாதிகள் என்று தனிமைப்படுத்தும் விளைவைத்தான் இந்த பத்துக்கட்டளை உருவாக்கும்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் அரசியல் நோக்கம் இருக்கக்கூடாது என்கிறது முதல் கட்டளை. தமிழீழத் தேசிய விடுதலை என்பதே அரசியல் நோக்கம்தான். அந்த அரசியல் கூட இருக்கக் கூடாதா?

எந்த அனைத்திந்தியக் கட்சியையும், மாநிலக்கட்சியையும் ஈழத்தமிழர் சிக்கலை ஒட்டி விமர்சிக்கக்கூடாது என்கிறது மூன்றாவது கட்டளை. துரோகிகளைப் பார்க்காதே, அவர்களை எதிர்த்துப் பேசாதே, அவர்களின் துரோகப் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாதே என்று கூறி காந்தியடிகளின் மூன்று குரங்குப் பொம்மைகளுக்குப் புதிய விளக்கம் தருவதுபோல் உள்ளது.

கொடும்பாவி கொளுத்தக் கூடாது என்கிறது எட்டாவது கட்டளை. பகைவர்கள் மற்றும் துரோகத் தலைவர்களின் உருவ பொம்மைகளைக் கொளுத்தக்கூடாது, கொடிகளை எரிக்கக் கூடாது என்பது இந்திய ஆளும் வர்க்கத்தையும் விஞ்சிய சனநாயக மறுப்பாக உள்ளது. இராணுவ ஆட்சிக்குரிய கோட்பாடுகள் இவை.

விடுதலைப்புலிகளை ஆதரிப்பதையும் தடைசெய்கிறது இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் பத்தாவது கட்டளை. விடுதலைப்புலிகள் இந்திய அரசையும் இந்தியக்கட்சிகளையும் விமர்சிப்பதில்லை. அதை நாமும் பின்பற்றவேண்டும் என்கிறது ஒன்பதாவது கட்டளை. விடுதலைப் போர் நடத்தும் இயக்கம் கடைபிடிக்கும் அரசியல் உத்திகளை நாம் அப்படியே கடைபிடிக்க முடியாது. கூடாது. அவர்களுக்கான அரசியல் உத்திக்கும் நமது உத்திகளுக்கும் வேறுபாடு உண்டு.

இலங்கை நிலைமைகளுக்கு ஏற்ப விடுதலைப்புலிகள் எடுக்கும் அரசியல் நிலைபாடுகளை நாம் எடுக்க முடியுமா? விடுதலைப்புலிகள் இந்திய அரசை விமர்சிப்பதில்லை, இந்தியக் கட்சிகளை விமர்சிப்பதில்லை, அந்த அணுகு முறையை தமிழகத்தில் நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது சொத்தை வாதம், சப்பைகட்டு!

விடுதலைப்புலிகள் தங்கள் மீது விதித்துள்ள தடையை இந்திய அரசு நீக்கவேண்டும் என்று கோருகிறார்கள். ஆனால் பத்துக்கட்டளையின் ஆறாவது கட்டளை, போர் நிறுத்தக் கோரிக்கையை மட்டுமே இந்திய அரசிடம் வைக்கவேண்டும் என்று கூறி கட்டுப்படுத்துகிறது. பிற கோரிக்கைகளை வைக்கக்கூடாது என்கிறது. இது தன் முரண்பாடாகும்.

எல்லாவற்றுக்கும் மெலாக, சுப்பிரமணியசாமியைத் தொலைபேசியில் கூப்பிட்டு மருத்துவர் இராமதாசு அவரைப் பாராட்டியதாக இந்து ஏட்டில் (3.2.2009) செய்தி வந்துள்ளது. ஈழத்தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்க வேண்டுமென்று சு.சாமி கூறினாராம். அதற்காக அவரைப் பாராட்டினாராம் மருத்துவர்.

சு.சாமியும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தான் பத்துக்கட்டளைகள் தீட்டப்பட்டுள்ளன!

## தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

**அன்பார்ந்த வாசகர்ப் பெருமக்களே,**

நம் இதழுக்குப் புதியப் பதிவு கோரி, இந்திய செய்தித்தாள் பதிவாளருக்கு(RNI) விண்ணப்பித்திருந்தோம். "**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**" என்ற பெயரை பதிவாளர் ஏற்று ஒப்புதல் மடல் அனுப்பியுள்ளார்.

சென்னை மாநகர முதன்மைக் குற்றவியல் நடுவர் முன்னிலையில் முறைப்படி இதழ்ப் பதிவு நடந்த பின், புதிய தமிழர் கண்ணோட்டம் இதழ் தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம் என்ற பெயரில் வழக்கம் போல் தொடர்ந்து வரும். அதுவரை புதிய தமிழர் கண்ணோட்டம் என்ற பெயரிலேயே வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- **ஆசிரியர்**




# 'சத்திய'த்தின் மோசடி

■ க.அருணபாரதி

உலகமயமாதலின் விளைவாக நிதி மூலதனம் மட்டுமல்ல மோசடிகளும் கூட உலகமயமாகி வருவதைத் தான் அண்மைய நிகழ்வுகள் தெளிவுபடுத்து கின்றன. "புத்திசாலித்தனம்" என்ற பெயரில் மக்களை சூறையாடிக் கொழுத்து வந்த முதலாளிகளின் மோசடிகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கிய முதலாளிய அரசுகள் கூனிக்குறுகி நிற்கின்றன. இந்தியாவின் 4ஆவது முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக புகழப்பட்ட "சத்யம்" தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடந்துள்ள மோசடி அப்படிப்பட்டது தான். இம்மோசடி யானது பங்குச்சந்தை உள்ளிட்ட சந்தைப் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளை மீண்டும் ஒருமுறை கேள்விக்குள்ளாக்கி யிருக்கிறது. பதில் சொல்ல வேண்டியவர்கள் வழக்கம் போல ஊடகங்கள் துணையுடன் ஓடி ஒளிந்தனர்.

நிதி மூலதன சூதாட்டக் களமான பங்குச்சந்தையில் உறுப்பு வகிக்கும் ஒரு நிறுவனத்தின் பங்கு விலை அதன் லாபத்தை வைத்து மதிப்பீடு செய்யப்படுகிறது. அவ்வாறு மட்டுமல்லாமல் பல நிறுவனங்கள் அதன் சொந்த பங்குகளையே வாங்கிக் கொண்டு அந்நிறுவனங்களின் பங்குகளை வாங்குபவர்கள் தான் அதிகம் என்பது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி தரகர்களை "நம்ப" வைத்து அந்நிறுவன பங்குகளின் விலையை செயற்கையாக அதிகரிப்பதும் உண்டு. "பத்து வைத்தால் இருபது! இருபது வைத்தால் நாற்பது!" என்று தெருவில் சூதாடும் நபர்களை துவைத்து எடுக்கும் அரசாங்கம், இங்கு நடைபெறும் வெளிப்படையான நவீனமுறை சூதாட்டத்திற்கு அங்கீகாரம் அளிப்பதற்கெனவே பங்குச் சந்தை கட்டுப்பாட்டு வாரியம் - செபி (Securities Exchange Board of India-SEBI) என்ற அமைப்பை நடத்தி வருகின்றது.

இச்சூதாட்டத்தின்படி, லாபத் தொகை அதிகம் காட்டும் நிறுவனத்தின் பங்கு விலை உயர்ந்தபடி இருக்கும் என்கிற விதியை நன்கு பயன்படுத்திக் கொண்ட சத்யம் நிறுவனத் தலைவர் ராமலிங்க ராஜூ, சத்யம் நிறுவனத்தின் உண்மையான லாபத் தொகையை பொய்க் கணக்குக்களால் மூடிமறைத்து அதிக லாபம் கொண்ட நிறுவனமாக காட்டினார். இம்மோசடியை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு 7-01-2008 அன்று நிறுவனத்தின் தலைமைப் பதவியிலிருந்து விலகி கடிதமும் அளித்தார். மேலும் அக்கடிதத்தில், நிறுவனத்திடம் தற்பொழுது வெறும் ரூ. 320 கோடிகளே உள்ளதெனவும் நிறுவனததின் "கௌரவத்தை" காக்க தனது "சொந்தப் பணத்தை" பயன்படுத்தி நிறுவனத்தை நடத்தி வந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து அமெரிக்க, இந்தியப் பங்குச்சந்தைகளில் சத்யம் நிறுவனப் பங்கு விலைகள் அதலபாதாளத்தில் வீழ்ந்தன. அமெரிக்காவில் 12 மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கடிதம் அளித்த இரண்டு நாட்களுக்குப் பிறகு தனது வழக்கறிஞர் பட்டாளத்துடன் கலந்து "ஆலோசித்து" விட்டு ஆந்திரக் காவல்துறையிடம் சரணடைந்து சிறையில் அடைக்கப்பட்டார் ராமலிங்க ராஜூ. மோசடிகளில் அவருடன் இணைந்து செயல்பட்ட அவரது தம்பி ராமராஜூவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் 8,000 கோடி ரூபாய் வரை பொய்க் கணக்குக் காட்டி மோசடி செய்துவிட்டதாகவே அவரது ஒப்புதல் கடிதம் மூலம் நம்பப்பட்டது. அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின்படி தெரிவிக்கப்பட்ட போலி வருமான வளர்ச்சியைக் காட்டி அரசுக்கு அவர் வரி செலுத்தி வந்த போதிலும், அந்த வரி செலுத்துதல் என்பது நடுத்தர மக்களை அந்நிறுவனத்தின் பால் ஈர்க்கும் முயற்சியே அன்றி வேறல்ல.

ஆந்திரக் காவல்துறையினரின் விசாரணையின் போது முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்ததால் எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில், அவரது நிறுவனங்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் நடந்த சோதனைகளில் கண்டறியப்பட்ட ஆவணங்களின்படி அவர் அப்பணத்தை வேறு வழிகளில் பதுக்கி செலவழித்து விட்டிருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அவரது இல்லங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட பல்வேறு வகை ஆடம்பர பொருட்கள் இச்சந்தேகத்தை பலமாக எழுப்புகின்றன.

ராமலிங்க ராஜூவின் இந்த மோசடி விவகாரம், இயக்குநர் குழுவிலிருக்கும் யாருக்கும் தெரியாது என்றும் வேறு யாருக்கும் இதில் தொடர்பில்லை என்றும் விலகல்

கடிதத்தில் அவர் தெரிவித்திருந்தார். இருந்தபோதும், இம்மோசடியை தனிப்பட்ட ஒருவரால் செய்திடவே முடியாது என மோசடிகளில் ஊறித்திளைத்த முதலாளிய பொருளாதார “நிபுணர்களே” அடித்துக் கூறினர். இந்நிலையில், கடந்த 6 மாத காலத்தில் மட்டும் சத்யம் நிறுவன தலைமை அதிகாரிகள் பலர் வழக்கத்திற்கு மாறாக தங்கள் வசமிருந்த சத்யம் நிறுவன பங்குகளை அதிகளவு விற்பனை செய்திருந்தது அம்பலமானது. அதாவது கடந்த ஆறு மாத காலத்தில் மட்டும் சுமார் 267,358 பங்குகளை விற்று ரூ.1.8 மில்லியன் தொகையை ஈட்டியிருந்தது கண்டறியப்பட்டது. (**காண்க** : பிசினஸ் டே, சனவரி 14). இதன் பின்னணியில் செயல்பட்ட சத்யம் நிறுவன தலைமை நிதி அதிகாரி வாட்லாமணி சீனிவாஸ் ஆந்திர காவல்துறையால் 11-01-2009 அன்று கைது செய்யப்பட்டார்.

அதோடு மட்டுமல்லாமல், சத்யம் நிறுவனத்தின் கணக்குகளை தணிக்கை செய்து வரும் “பிரைஸ் வாட்டர் அவுஸ் கூப்பர்ஸ்” என்ற அமெரிக்க பன்னாட்டு தணிக்கை நிறுவனத்திற்கும் இதில் தொடர்புள்ளதாக சந்தேகம் எழுந்தது. இந்நிறுவனம் மற்றும் இதன் குழும நிறுவனங்கள், ‘குளோபல் டிரஸ்ட்’ மோசடி உள்ளிட்ட பல மோசடிகளில் ஏற்கெனவே சந்தி சிரித்தவையாகும். இந்நிறுவனத்தின் மீது சந்தேகப் பார்வை எழுந்த நிலையில், பல முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது நிதி தணிக்கை நிறுவனங்களுக்கு சராசரியாகக் கொடுக்கும் தொகையை விட சத்யம் நிறுவனம் தனது நிதித் தணிக்கை நிறுவனமான இந்நிறுவனத்திற்கு பல மடங்கு தொகை அதிகமாக வழங்கியது அம்பலமானது. இதன் பின்னணியில், பிரைஸ் வாட்டர் நிறுவனத்தின் தணிக்கையாளர்கள் இருவர் 24-1-2008 அன்று ஆந்திர காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டனர். கைது செய்யப்பட்ட இரு தணிக்கையாளர்களை பின்னர் அந்நிறுவனம் வேலையிலிருந்து நீக்குவதாக அறிவித்துவிட்டு மோசடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முயன்று வருகிறது. கணக்காளர்கள் மற்றும் இயக்குநர் குழு என ஒரு குழுவாக செயல்பட்டு மோசடிகளால் உருவாக்கப்பட்ட சத்யம் நிறுவனத்தின் போலியான வளர்ச்சி பிம்பத்தை ஊடகங்கள் துணையுடன் பரப்புரை செய்து இத்தனை ஆண்டுகளாக அந்நிறுவனத்தை “லாபகர” நிறுவனமாக நடத்தி வந்திருக்கின்றனர். சந்தைப் பொருளாதாரத்தை பின்னணியாகக் கொண்டு செயல்படும் அரசின் எந்த அமைப்பும் அந்நிறுவன மோசடியை கண்டுபிடித்து வெளிக்கொணரவில்லை என்பதிலிருந்தே சந்தைப் பொருளாதாரத்தின் இலட்சணத்தை அறியலாம். இது சந்தைப் பொருளாதாரத்தின் அவலட்ணம் மட்டுமல்ல அதன் இலட்சியமும் கூட ஆகும்.

தொடக்கத்தில், இந்நிறுவனத்தில் 53,000 பணியாளர்கள் இருப்பதாக கூறப்பட்டு வந்த நிலையில், அவ்வெண்ணிக்கையிலும் மோசடி செய்யப்பட்டிருந்தது அம்பலமானது. சுமார் 13,000 பேரை போலியாக பணியாளர்கள் என கணக்குக் காட்டி அவர்களது சம்பளத் தொகையாக ரூ.1200 வரை ராமலிங்க ராஜூ கும்பலால் கொள்ளையடிக்கப்பட்டது கண்டறியபட்டது. அவை மட்டு மல்லாமல், போலி ஊழியர்களின் பெயரில் ‘பி.எப்’ (Provident Fund) உள்ளிட்ட வைப்பு நிதித் தொகைகளும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. இதனால் உண்மை நிலையறிய ஊழியர் எண்ணிக்கை குறித்த சோதனையும் நடந்து வருகின்றது. சத்யம் நிறுவனம் மட்டுமல்ல, “பல லட்ச வேலைவாய்ப்பு களை வழங்குகிறோம்” என்று பீற்றிக் கொள்ளும் பல பன்னாட்டு பெரு முதலாளிய நிறுவனங்களிலும் இது குறித்த சோதனை நடத்தி உண்மைகளை கண்டறிய வேண்டும். இப்பேர்பட்ட மோசடி நிறுவனத்திற்குத் தான், “சிறந்த நிர்வாக விருது” உட்பட, 2001 ஆண்டிலிருந்து இதுவரை 40 விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக சத்யம் நிறுவனத்தின் இணையதளம் பெருமையுடன் கூறிக் கொள்கிறது. இச்செயல், சந்தைப் பொருளாதாரம் மோசடிகளில் கைத்தேர்ந்தவர்களையே அங்கீகரிக்கிறது என்பதை நமக்கு உணர வைக்கிறது. மோசடிகளால் உருவாக்கப்பட்டு ஊடகங்களால் ஊதிப் பெருக்கப்பட்ட சத்யம் நிறுவனத்தின் போலி வளர்ச்சி குறித்த பரப்புரைகளால் பங்குச்சந்தை தரகர்களும் நடுத்தர வர்க்கத்தினரும், “முதலீடு” என்ற பெயரில் அந்நிறுவனப் பங்குகளை வாங்கிக் குவித்திருந்தனர். பரப்புரைகளை முன்னின்று நடத்திய மோசடி நாயகன் ராமலிங்க ராஜூ இதனை நன்றாக பயன்படுத்திக் கொண்டு தமது குடும்பத்தினர் வசமிருந்த பங்குகளை விற்று கோடி கோடியாகக் கொள்ளையடித்தார். கடந்த 2001 ஆம் ஆண்டு அவரது குடும்பத்தினர் வசமிருந்த 25% விழுக்காடு பங்குகள் பெருமளவு குறைந்து, தற்பொழுது வெறும் 8.74% விழுக்காடுகளாக உள்ளது. அதாவது சுமார் 17% விழுக்காட்டு பங்குகளை போலி வளர்ச்சிக் காலத்தில் விற்று சுமார் ரூ.2,065 கோடி ரூபாய் வரை “லாபம்” சம்பாதித்தார் ராஜூ. மிதமிஞ்சியுள்ள 8% விழுக்காட்டு பங்குகளையும் கூட அடமானம் வைத்து பல நிறுவனங்களில் கடன் பெற்றிருக்கிறார் இந்த ஏமாற்றுப் பேர்வழி. தான் செய்துள்ள மோசடியால் லாபமாக உயர்த்திக் காட்டப்பட்டத் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தும் கூட அதனை பற்றி சிறிதும் அச்சமின்றி “தலைச்சிறந்த” தொழிலதிபர் என்ற பெயரில் அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தற்போதைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி, தமிழக முதல்வர் கருணாநிதி என பலருடனும் கால்மேல் கால் போட்டுக் கொண்டு கைக்குலுக்கினார். இப்படிப்பட்ட மோசடி நாயகர்களுடன் கைக்குலுக்குவதே “நாட்டின் வளர்ச்சி” என்று ஆட்சியாளர்களும் வெட்கமின்றி பறைசாற்றுவது இன்றும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

கடந்த 2007 சூலை மாதம், ஆந்திர மாநில கம்மம் மாவட்டத்தில் நிலம் கேட்டு பேரணி சென்ற மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 8 பேரைக் கொன்றது இராஜசேகர ரெட்டி தலைமையிலான ஆந்திர காங்கிரஸ் அரசு. மேலும், உழுபவனுக்கு நிலம்

என்று போராடி வரும் நக்சல்பாரிகளை போலி மோதல்களில் தொடர்ந்து சுட்டுத் தள்ளும் அதே காங்கிரஸ் அரசு தான், விசாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் எதிர்ப்பையும் மீறி சத்யம் நிறுவனத்திற்கு நிலங்கள் வழங்கியிருக்கிறது என்பதும் அம்பலமாகியிருக்கிறது. ஆந்திர காவல்துறையினர் நடத்திவரும் தொடக்க நிலை விசாரணையின் போது ஆந்திராவில் மட்டும் சுமார் 3400 ஏக்கர் நிலத்தை வைத்திருப்பதை ராமலிங்க ராஜு ஒப்புக் கொண்டார். அதன்பின் நடந்த பல விசாரணைகளுக்குப் பிறகு சத்யம் மட்டுமல்லாமல் அவரது குடும்பத்தார் நிறுவனங்களான மைதாஸ் நிறுவனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சுமார் 17,408.53 ஏக்கர் நிலங்களை தன்னகத்தே கொண்டுள்ளார்.

சுமார் 147 பினாமி நிறுவனங்களின் மூலமும் 50க்கும் மேற்பட்ட பினாமி வங்கிக் கணக்குகள் மூலமும் அயல்நாடுகளுக்கு சுமார் 2800 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பணம் கடத்தியுள்ளார். மேலும் 3,800 கோடிகுறித்து தகவல் இல்லை. (**காண்க** : *தட்ஸ்தமிழ் செய்தி இணையம், 22-01-2009*). ராமலிங்க ராஜுவின் பினாமி கணக்குகள் குறித்து கடந்த 2002 ஆம் ஆண்டே ஆந்திர அரசு வருவாய்த் துறை சத்யம் நிறுவனத்தில் சோதனை நடத்திய பின் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது ஆந்திர முதல்வராக இருந்த சந்திரபாபு நாயுடுவும் 'செபி'யும் இதனை கண்டு கொள்ளாமல் விட்டது தற்செயலான ஒன்றல்ல.

இவ்வளவு ஆண்டுகள், பற்பல மோசடிகளை கனக்கச்சிதமாக செய்து வந்த ராமலிங்க ராஜு உண்மைகளை ஒப்புக் கொண்டு கடிதம் எழுத வேண்டிய அளவுக்கு நிர்பந்தத்தை உருவாக்கியது, முதலாளிய பொருளாதார நெருக்கடி.

தனது மகன்கள் நடத்தி வரும் வீட்டு மனை விற்பனை மற்றும் கட்டுமான பெரு நிறுவனங்களான "மைதாஸ் பிராப்பர்டீஸ் மற்றும் இன்பிராஸ்டிரக்சர்"(MAYTAS) நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடியால் தடுமாறி நின்றன. சத்யம் நிறுவனத்தின் போலி லாபத் தொகையைக் கொண்டு தமது மகன்களின் நிறுவனத்தைக் கையகப்படுத்தி விட்டு, இல்லாத பணத்தைக் கொண்டு மைதாஸ் நிறுவனத்தை காப்பாற்றிவிடலாம் கணக்கு மோசடியையும் சமன் செய்து கொள்ளலாம் என ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத் திட்டமிட்டார் ராஜு. இதனை செயல்படுத்த சத்யம் நிறுவனத்தின் சார்பாக 160 கோடி டாலர் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிட்டார். இவ்வறிவிப்பால் சத்யம் பங்குகளின் விலை மளமளவென சரிந்தது. ஏற்கெனவே சரிந்து கிடக்கும் மைதாஸ் நிறுவனத்தை ஏன் வாங்க வேண்டும் என்று முதலீட்டாளர்கள் தெரிவித்த கடும் எதிர்ப்புகளின் காரணமாக இத்திட்டம் அறிவிக்கப்பட்ட 12 மணி நேரத்திலேயே திரும்பப் பெறப்பட்டது.

இந்நிலையில் உலக வங்கி, சத்யம் நிறுவனம் தகவல் திருட்டில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி, உலக வங்கிப் பணிகளில் ஈடுபட அந்நிறுவனத்திற்கு 8 ஆண்டுகள் தடை செய்து அறிவிப்பு வெளியிட்டது. மறுநாள் அதே போன்று உலக வங்கிப் பணியாளர்களை தனது பக்கம் ஈர்க்கும் விதமாக மோசடி செயல்களில் ஈடுபட்டதற்காக விப்ரோ, மெகா சாப்ட் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை கடந்த 2007 ஜூன் மாதத்திலிருந்து ஏற்கெனவே இது போல் தடை செய்யப்பட்டுள்ளன என்பதனை அறிவித்து அம்பலப்படுத்தியது. அந்த அறிவிப்பை அந்நிறுவனங்கள் மறைத்து விட்டு தான் இவ்வளவு ஆண்டுகள் யோக்கியவான்களாக வலம் வந்து கொண்டிருந்தன. இவ்வறிவிப்பால் ஏற்கெனவே இறங்கிக் கொண்டிருந்த சத்யம் நிறுவன பங்குகளின் விலை வரலாறு காணாத வகையில் மேலும் இறங்கின. நிலைமை கைமீறி போய் தான் அகப்பட்டு விடுவோம் என்ற நிலையில் தான் தனது குற்றங்களை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு கடிதம் எழுதினார் ராமலிங்க ராஜு. மைதாஸ் நிறுவனத்தின் ஆங்கில எழுத்துகளான MAYTAS –ஐ திருப்பிப் போட்டால் SATYAM என வருவதை போல மைதாஸ் நிறுவன விவகாரம் சத்யம் நிறுவனத்தையே புரட்டிப் போட்டு மோசடியை உலகறியச் செய்தது.

உலகமய முதலாளியப் பொருளாதார நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய தகவல் தெழில்நுட்பத் துறை இப்பெருநிறுவனத்தின் மோசடி நிகழ்வால் மேலும் ஆட்டம் கண்டுள்ளது. சத்யம் நிறுவனத்தின் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் நிலை கேள்விக் குறியாக உள்ளது. முதலாளிய நெருக்கடியால் உலகின் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு நிறுவனங்கள் ஊழியர்களை பணியிலிருந்து நீக்கி வருகின்ற நிலையில், புதிய வேலை கிடைப்பது என்பது அரிதினும் அரிதாகிவிட்டதால் அந்நிறுவன ஊழியர்கள் வேறு வேலைகளுக்கு செல்ல இயலவில்லை. வேலை கிடைத்தாலும் கூட 'சத்யம்" நிறுவனத்தில் கிடைத்து வந்த சம்பளத்தில் பாதி தொகையை தான் கொடுக்க இயலும் என்று கூறி சில நிறுவனங்கள் குறைந்த செலவில் ஊழியர்களை நியமித்துக் கொள்ளும் சூழ்ச்சிகளிலும் இறங்கியிருக்கின்றன.

சேமிப்புகள் இல்லாமல் கேளிக்கைகளிலும், வீடு, மகிழுந்து உள்ளிட்ட வங்கிக் கடன்களிலும் கழிந்த பெரும்பாலான ஊழியர்களின் கடந்த கால வருமானம் கனவாகியுள்ளதால், அடுத்த என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கின்றனர். வேறு எங்கும் பணிக்கும் செல்ல முடியாமல், இருக்குமிடத்திலும் எந்நேரமும் துரத்தப்படலாம் என்ற நிலையில் தமது வாழ்வாதாரத்தை பற்றிய கேள்விகளோடு ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர் சத்யம் நிறுவன பணியாளர்கள். இவர்களை காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் சத்யம் நிறுவனத்திற்கு அமெரிக்க அரசு வழங்கியதைப் போல மக்களின் வரிப்பணத்தை ஊக்கத்தொகையாக வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது என்பன போன்ற தகவல்கள் வெளியாகிய நிலையில் அது கடும் கண்டனத்திற்குள்ளானது. பின்னர் அவ்வாறு செய்யாமல் மறைமுகமாக அந்நிறுவனத்தை காப்பாற்றும் பணியில் இந்திய அரசு இறங்கியுள்ளது.

### நிதி மோசடிகள்

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஏதோ சத்யம் நிறுவனம் மட்டும் மோசடியில் ஈடுபட்டு விட்டதை போலவும் மற்ற நிறுவனங்கள் எல்லாம் கறைபடியாத நிறுவனங்கள் போலவும் ஊடகங்கள் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. இது போன்ற மோசடிகளில் ஈடுபட்ட பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் அதிகாரிகள் அவ்வப்போது அகப்பட்டு தற்பொழுது சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர். கடந்த 2006 மார்ச் மாதம் டி.எஸ்.க்யூ. மென்பொருள் நிறுவன தலைமை அதிகாரி ரூ.486 கோடி மோசடி செய்து கைதாகி தற்பொழுது கொல்கத்தா சிறையில் உள்ளார். டி.எஸ்.க்யூ. மென்பொருள் நிறுவனம் மட்டுமல்லாமல், பென்டசாப்ட் டெக்னாலஜிஸ், பென்டமீடியா கிராப்பிக்ஸ், எஸ்.எஸ்.ஐ. டெக்னாலஜிஸ் உள்ளிட்ட பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் கடந்த சில வருடங்களுக்கு முன்பு ஏற்கெனவே மோசடியில் ஈடுபட்டு அம்பலமானவை தாம்.

இதோடு மட்டுமல்லாமல் கடந்த 2008 செப்டம்பர் மாதம் இந்திய பாரன்சிக் கன்சல்டன்சி நிறுவனம் (Indiaforensic Consultancy Services - ICS) தெரிவித்திருந்த ஆய்வறிக்கையின் படி, பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள சுமார் 1,200 நிறுவனங்கள் கணக்கு மோசடிகளில் ஈடுபட்டு வருவதை அம்பலப்படுத்தியிருந்தது. (**காண்க** : *தி டைம்ஸ் ஆப் இந்தியா, 23-9-08*). அரசோ, பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்போ அவ்வறிக்கையை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அரசின் அலட்சியம் என்று மட்டும் அதனை பார்க்காமல் உலகமய சூழலில் இதெல்லாம் நடப்பது தானே என்ற அரசின் பார்வையும் அதில் உள்ளதை நாம் கவனித்தாக வேண்டும். மேலும் இந்த மோசடிக் கும்பல்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இருக்கும் கொடுக்கல் - வாங்கல் தொடர்பும் இதற்கு முக்கிய காரணமாகும்.

### வரி ஏய்ப்பு மோசடிகள்

இந்தியாவில் செயல்பட்டு வரும் பல பன்னாட்டு மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தமது ஏற்றுமதி பல மடங்கு ஆயிரம் கோடிகளாக அதிகரித்துள்ளது என்பதனை அரசே அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்நிறுவனங்களால் அரசுக்கு வரும் நேரடி வரி வருமானம் ரூ. 10 கோடியைக் கூட தாண்டாது. (**காண்க** : *தி இந்தியன் எக்ஸ்பிரஸ், 23-12-2008*). இந்நிலையில் இந்நிறுவனங் களுக்காக அரசே வழங்கும் நிலம், தடையற்ற மின்சாரம் உள்ளிட்ட பல சலுகைகளுடன் வரிச்சலுகைகளும் வாரி வழங்கப்பட்டு வந்த போதும் அந்நிறுவனங்கள் தமது வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளவோ குறைத்துக்கொள்வதோ கிடையாது. இதனை அண்மையில் புனே மாநகராட்சி அம்பலப்படுத்தியது.

இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்திருக்கும் நகரங்களில் பெங்களூரு, சென்னைக்கு அடுத்ததாக உள்ள புனே நகரில் சுமார் 5.40 கோடி ரூபாய்க்கு வரி செலுத்தாத பல முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட்டு வருவதை புனே மாநகராட்சி அம்பலப்படுத்தியது. புனே மாநகராட்சியின் வரி வசூலிக்கும் தலைமை அதிகாரி வரி கட்டாத இந்நிறுவனங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் நாங்கள் தயங்க மாட்டோம் என அந்நிறுவனங்களை எச்சரித்தார். அங்குள்ள சுமார் 350 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் 150க்கும் மேற்பட்டவை வரி செலுத்தவில்லை என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார். (**பார்க்க** : *தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 23-12-2008*).

புனே நகரத்தில் குடியிருப்புகளுக்கான சொத்து வரியை விட இருமடங்குத் தொகை வணிக நிறுவனங்களுக்கான சொத்து வரியாக வசூலிக்கப்படுகின்றது. இந்நிலையில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வணிக நிறுவனங்களுக்கான சொத்து வரி வசூலிக்கப்படாமல் குடியிருப்புக்கான சொத்து வரிக் கட்டணமே வசூலிக்கப்படும் என மகாராட்டிர அரசு சலுகை அறிவித்தது. அச்சலுகை முடிந்து 6 மாதங்களுக்கு மேல் ஆகியும் அந்நிறுவனங்கள் வரி செலுத்தாமல் வரி ஏய்ப்பு மோசடி நடத்தியதன் பின்னணியில் தான் புனே மாநாகராட்சி அம்மோசடியை அம்பலப்படுத்தியுள்ளது.

தற்பொழுது உலகமய முதலாளியத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் உலகெங்கும் தொழிலாளர்களை பணியிருந்து துரத்துவதும், உழைப்புச் சுரண்டல் தீவிரப்படுத்தப்பட்டு வருவதும் இயல்பானதாக மாறிக் கொண்டிருக்கிற நிலையில் தியாகங்கள் நிறைந்த பெரும் போராட்டங்களின் விளைவாக நிறைவேற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்கள் முதலாளிகளால் நசுக்கப்பட்டு வருவது தொடர்கின்றன. இந்நிலையிலும் கூட முதலாளிகள் விட்டெறியும் எலும்புத்துண்டுகளான பணத்தையும் சலுகைகளையும் கொண்டு தேர்தல் செலவு மேற்கொள்ளும் ஓட்டுக் கட்சிகளும் சுயநல அதிகாரிகளுமே இயந்திரத்தை நடத்துகின்றனர். மக்களின் நல்வாழ்வு திட்டங்களை நிறைவேற்ற தேவைப்படும் நிதிக்காக ஓர் அரசு, முதலாளிகளிடமிருந்து "வரி" என்ற பெயரில் திரட்டும் ஒரு குறிப்பிட்ட சிறு தொகையை அளிப்பதற்குக்கூட மனமில்லாதவர்களாகத் தான் முதலாளிகள் இருக்கின்றனர்.

இந்த வரிகளை ஏய்ப்பதற்கும் சட்டப் பாதுகாப்புகளை ஏற்படுத்தி முதலாளிகளுக்கு உதவிடவே முதலாளிய அரசியல்கட்சிகளும் அதிகாரிகளும் முனைப்புடன் செயல்படுகின்றனர். ஏனெனில் இவ்வரசு எந்திரம் முதலாளிகளுக்கானது.

மோசடி மன்னர்களை சிறையிலடைப்பதும் அபராதம் விதிப்பதும் மட்டும் இதற்கான தீர்வில்லை என்பதனை தொடர்ந்து நடைபெறும் இவ்வகை மோசடிகள் மெய்ப்பிக்கின்றன. உற்பத்தியை சாராத சந்தைப் பொருளாதாரத்தை சிறையிலடைப்பதன் மூலமே இதற்கான தீர்வை எட்ட முடியும். முதலாளிய அரசோடு மோதாமல் அதை நிகழ்த்த முடியாது.

■

# தஞ்சை விமானப்படைத்தளத்தை இழுத்து மூடு

# முற்றுகைப் போராட்டம்



ஈழத்தமிழரை படுகொலை செய்யும் போரை நடத்துகிறது இந்திய அரசு. குறிப்பாக சோனியா காந்தியின் தனிப்பட்ட பகை காரணமாக இந்த இன அழிப்புப்போர் நடக்கிறது. ஈழத் தமிழர் சாவுக்கு மட்டுமல்ல, தமிழக மீனவர் படுகொலைக்கும் காரணமானவர் சோனியாகாந்திதான்.

இந்திய அரசின் இராணுவத் தளவாடங்கள் தமிழகத்தின் வழியே தான் இலங்கைக்குச் செல்கின்றனர்.

தஞ்சை விமானத்தளம் மக்கள் பயன்பாட்டுக்கு என தொடங்கப்பட்டு, தற்சமயம் ராணுவத் தளமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த விமானத்தளத்திலிருந்து இலங்கை பலாலி விமானத்தளத்திற்கு படைக்கருவிகள் செல்கின்றன. தமிழ் மண்ணான தஞ்சையிலிருந்து ஈழத்தில் தமிழர்களைக்கொல்ல படைக்கருவிகளை அனுப்பும் தஞ்சை விமானத்தளத்தை உடனடியாக மூடவேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்த முற்றுகைப் போராட்டம் நடந்தது.

பாதுகாக்கப்பட்ட பகுதிக்கு தமிழர்களை வரவழைத்து ஆயிரக்கணக்கில் குண்டு போட்டு கொலை செய்த இராசபக்சேயின் இனவெறிக் கொடுமைக்கு பாடம்புகட்டும் வகையிலும், சோனியாவின் தமிழர் விரோத நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும் தஞ்சை விமானப் படைத்தளத்தை இழுத்து மூட வலியுறுத்தி முற்றுகைப்போராட்டம் 31.01.09 அன்று தஞ்சையில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி, பெரியார் திராவிடர்கழகம், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், தமிழர் கழகம், ஆதித் தமிழர்ப்பேரவை, குடந்தை தமிழ்க்கழகம் ஆகிய அமைப்புகள் இப்போராட்டத்தில் கலந்துகொண்டன. அமைப்புகளைச் சார்ந்தவர்களை மட்டுமின்றி இன உணர்வாளர்கள் பலரும் பங்கெடுத்தனர்.

தஞ்சை மேலவஸ்தாத்சாவடி அருகில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்துவந்த தோழர்கள் தத்தம் கொடியுடன் அணி திரண்டனர்.

தோழர்கள் பெ. மணியரசன் (த.தே.பொ.க), கொளத்தூர் மணி (பெ.தி.க.), சிவகாளிதாசன்(த.தே.வி.இ.) மணிகண்டன்(த.க.), இளமதி (ஆதித் தமிழர் பேரவை), சா. பேகன் (குடந்தை தமிழ் கழகம்) தலைமையில் "வீரவணக்கம் வீரவணக்கம் முத்துக்குமாருக்கு வீரவணக்கம்', முறியடிப்போம் முறியடிப்போம் சூனியக்காரி சோனியாவின் சூழ்ச்சிகளை முறியடிப்போம். தஞ்சைவிமானப் படைத்தளத்தை இழுத்து மூடு' போன்ற முழக்கங்கள் அதிர புறப்பட்டனர். பேரணியில் 600 பேர் கலந்துகொண்டனர்.

காவல்துறை மறித்தது. தோழர்கள் சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தினர்.

30 பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்டவர்களை காவல்துறை கைது செய்தது. அவர்களை வல்லம் திருமண மண்டபத்தில் வைத்தனர். அவர்கள் மீது பிணையில் வரமுடியாத பிரிவினை சேர்த்து காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. இரவு 2.30 மணிக்கு அவர்களை தஞ்சை நீதிமன்றத்திற்கு அழைத்துச்சென்றது. நீதிபதி 15 நாள் நீதித்துறை காவலில் வைக்க ஆணையிட்டார். அப்போது தஞ்சாவூர் வழக்கறிஞர் சங்கச் செயலாளர் திரு. நல்லதுரை தலைமையில் கருணாநிதி உள்ளிட்ட 40 வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் பிணை கோரி வாதாடினர். அவர்களின் வாதங்களைக் கேட்ட நீதிபதி அனைவரையும் சொந்தப்பிணையில் விடுவித்தார். பிணை ஆணை கிடைக்கும்போது விடியற்காலை 4.30 ஆனது. நீதிமன்றத்தில் ம.தி.மு.க. தோழர்கள் பாரி, விடுதலைவேந்தன் உள்ளிட்டோரும், மகஇக. தோழர்கள் காளியப்பன், இராவணன் உள்ளிட்டோரும் அவ்வளவு நேரமும் காத்திருந்து தளைப்பட்ட தோழர்களுக்கு ஆதரவு நல்கினர்.


ச. தாமரைச் செல்வன்
✆ 04144 - 244439
94432 33432
நேஷனல் டிரெய்லர்ஸ்
...நேஷனல் டிரெய்லர்ஸ்...
சிதம்பரம் ரோடு, அள்ளூர், சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம் 608 702
விவசாயத்திற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும்
தரமானதாகவும், விலை குறைவாகவும் உடனுக்குடன் செய்து தரும் கைராசி ஸ்தாபனம்.
டிராக்டருக்கு தளவாட உற்பத்தி மற்றும் பழுது நீக்கும் சேவைகள்
• டாப், ஊக்கு, பம்பர்
• கேஜ்வீல்
• கல்டிவேட்டர்
• லெவலர்
• ராக்கெட் கல்டிவேட்டர்
• கான் கலப்பை
• வாட்டர் டேங்க்
• 2 வீல் டிப்பர் 10 x 4 x 2 1/4
• 4 வீல் டிப்பர் 10 x 6 x 1 1/2
• 8 வீல் டிரெய்லர் 14 x 7 x 2
• 8 வீல் டிரெய்லர் 16 x 7 1/2 x 2
எங்களது கிளை நிறுவனங்கள்...
நேஷனல் & கோ
நேஷனல் பேட்டரி சர்வீஸ்
எக்ஸைட் பேட்டரி விற்பனையாளர்கள்...
நேஷனல் டெம்போ சர்வீஸ்
சத்யா பேரிங் சென்டர்
உதிரி பாகங்கள்...
டிராக்டர், டிப்பர் டிரெய்லர், மாட்டுவண்டிக்கு தேவையான
ஹைட்ராலிக் பம்புகள், அப்பு, டிஸ்க், சேஸ், ஆக்ஸில்,
பேரிங், நெல் அறுவடை இயந்திரங்களின்
உதிரிபாகங்கள் மற்றும் எக்ஸைடு பேட்டரி மற்றும் பல...
விவசாய தளவாடங்கள் உற்பத்தி மற்றும்
பழுது நீக்கம் சேவை 99/100 %